ௐ

# சைவநீதி

## SAIVANEETHI

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

13/051



இறைவன் கோவில் - குவாய்
Iraivan Temple - Kauai

பொங்கல் விழா மலர்-2013

கனடா இந்து மாமன்றம்
CANADA HINDU MAAMANTRAM

ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

* திருமணம்
* திருமணப் பதிவு
* கடைதிறப்பு வைபவம்
* புண்யாக வாசனம்
* பூப்புனித நீராட்டுவிழா
* பூமாலை
* ஆண்டாள் மாலை
* சடைநாகம்
* தலை நகை முழுவதும்



* முத்து மணவறை
* தலைப்பாகை
* பந்தல் அலங்காரம்
* கல்யாண பூசைப் பொருட்கள்
* முத்துச் சப்பரம்
* ஆலயத் திருவிழா
* ஆலய வைபவங்கள்

ஆகிய அனைத்துக்கும் எப்போதும் எம்முடன்
தொடர்புகொள்ளுங்கள் - **Tel: 416 266 3333**

**628 E Birchmount Road, Scarborough, Ontario. M1K 1P9**

ஸ்காபரோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய
தொலைபேசி இலக்கம் 416 291 8500

உ

# பஞ்சபுராணம்

## தேவாரம்

கோல மால்வரை மத்தென நாட்டிக் கோள ரவுசுற் றிக்கடைந் தெழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய அமரர் கட்கருள் புரிவது கருதி
நீல மார்கடல் விடந்தனை உண்டு கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலங் கண்டுநின் றிருவடி அடைந்தேன் செழும்பொ ழிற்றிருப் புன்கூர் உளானே.

## திருவாசகம்

சிந்தனைநின் தனக்காக்கி நாயினேன் தன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்கள்ஆர
வந்தெனை யாட்கொண்டுள்ளே புகுந்த விச்சை
மால்அமுதப் பெருங்கடலே, மலையேஉன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனியனேற்கே.

## திருவிசைப்பா

தத்தையங் கனையார் தங்கள்மேல்வைத்த தயாவைநூ றாயிரங்கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று)உன்கண்வைத் தவருக்(கு)அமலரு(கு) அளிக்கும்நின்பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவரேனும் பிழைத்தவை பொறுத்தருள்செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை கொண்டசோ ழேச்சரத்தானே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி மிகுதிரு ஆரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திங்கள்சேர் சடையார்தம்மைச் சென்றவர் காணாமுன்னே
யங்கணர் கருணைகூர்ந்த வருட்டிரு நோக்கமெய்தத்
தங்கியபாவத் தின்முன்னைச் சார்புவிட் டகலநீங்கிப்
பொங்கிய வொளியினீழற் பொருவிலன் புருவமானார்.

## திருப்புகழ்

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலுநெஞ்சத் தலையாலே
பரமகுரு வருணினைந்திட் டுணர்வாலே
கரவுதரி சனையையென்றற் கருள்வாயே
தெரிதமிழை யுதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருகசெம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே!

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA TEMPLE OF MISSISAUGA



தேவஸ்தானம் திறந்திருக்கும் நேரம் வாரத்தில் ஏழு நாட்களும்

காலை 9.00 மணிமுதல் பகல் 1.00 மணிவரை
மாலை 6.00 மணிமுதல் - 9.00 மணி வரை

**பூஜை நேரங்கள்**

காலை : 10.00 மணி
பகல் : 12.00 மணி
மாலை : 7.00 மணி

விசேட தினங்களில் பூஜை நேரம் மாற்றி அமைக்கப்படும்.

ஆலயத்தில் திருமணங்கள், கணபதி ஹோமம், நவக்கிரக சாந்தி, சர்ப்ப சாந்தி, பிதிர் தர்ப்பணம் என்பவற்றை நிறைவேற்ற ஒழுங்குகள் செய்து தரப்படும். மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:
ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர், சிவாகம கிரியா பூஷணம் சிவஸ்ரீ
பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள் (ராஜன் குருக்கள்)
(கனடிய திருமணப் பதிவு அதிகாரி, இந்து மதகுரு, புங்குடுதீவு -1ம் வட்டாரம்)
(ஆலயப் பிரதம குரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர், அறங்காவலர் சபை)

**7220 Tranmere Drive, Mississauga, On., L5S 1L6**
Tel: 905 405 0011/ 905 501 0011
ganeshadurga@hotmail.com

# தலைவர் செய்தி

## இங்கும் இப்படி நடக்க வேண்டும்!

அண்மையில் அமெரிக்காவிலுள்ள ஹவாய் மாநிலத்தின் குவாய் தீவில் அமைந்துள்ள இறைவன் ஆலயம் என்று திருநாமம் கொண்டுள்ள சிவன் ஆலயத்திற்குச் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. என்னுடன் இந்து மாமன்றத்தின் முக்கிய தொண்டரும், இந்து சமயம் தொடர்பாக சில நூல்களை ஆக்கியவருமான திருமிகு குமார் புனிதவேல் அவர்களும் மற்றும் ஐம்பத்தெட்டு அன்பர்களும் வந்திருந்தனர். அன்றைய தினம், அந்த ஆலயம் எங்கள் மனதில் ஒரு புண்ணியசேத்திரமாக நிறைந்தது, அதற்கான காரணங்கள் பல. அமைதியான ஆர்ப்பாட்டமில்லா பூசை முறை, பரிபூரணமானமான அமைதி. அனைவரின் கவனமும் இறைவனின் திருவுருவச் சிலைநோக்கியே இருந்தன. திருவாசகத்தினை ஒருவாசகமாய் ஒருமித்து ஓதியமை, ஆடம்பரமில்லா வெள்ளைக்கார அந்தணர்கள் பூநூல் பூண்டு, காவியணிந்து, அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணுமில்லாமல் ஆத்மார்த்தமான கசிவுடன் பூசை செய்தமையைக் காணப் பல கண்கள் வேண்டும்.

எங்கள் கனடா தேசத்தில் அமைந்துள்ள ஆலயங்களில் எப்போது இத்தகைய ஆலய வழிபாடுகளைப் பார்க்கப் போகின்றோம்? பக்தர்கள் என்று சொல்லப்படுகின்ற நாங்களும், பூசைகளைச் செய்கின்ற அந்தணப் பெரியவர்களும் இதை உணர்ந்துகொள்ளும் காலம் வருமா? ஈழத்தின் யாழ்ப்பாணச் சித்தன் யோகர் சுவாமிகளின் சீடன் வெள்ளைக்காரரான சுப்பிரமுனிய சுவாமிகளின் வழிகாட்டலில் இன்று இந்த ஆலயம் சிறப்புறு பெருமையுடன் எழுந்து நிற்கின்றது. ஆனால், இங்கு பல்லாயிரக் கணக்கான ஈழத்து தமிழ் இந்துக்கள் இருந்தும் ஏன் இங்குள்ள ஆலயங்கள் இன்னும் திருந்தாமல், நாளுக்குநாள் நமையெல்லாம் நகைக்க வைத்துக்கொண்டிருக்கின்றன? தற்போது இங்குள்ள சைவ அன்பர்களின் ஆதங்கமும், வேண்டுகோளுமெல்லாம் "இங்கும் இப்படி நடக்குமா" என்பதே.

சுபம்.

தம்பையா ஸ்ரீபதி
இந்து மாமன்றம், கனடா.

# அனுபவம் ஆற்றல் மிக்க சட்டத்தரணி

## தம்பையா சிறிபதி

### கனடிய வழக்கறிஞர்,
### பிரசித்த நொத்தாரிசு

## Thampiah Siripathy

*Barrister - Solicitor & Notary Public*

* குடிவரவுச் சட்டம், அகதி மனுக்கள், ஸ்பொன்சர், மேன்முறையீடுகள்
* காணிகள், வீடுகள், வாங்குதல், விற்றல், ஈடுகள் பதிதல்
* வியாபார ஸ்தாபனங்கள் பதிவுசெய்தல், வாங்குதல்
* குடும்பச் சட்டம் சம்பந்தமான விடயங்கள், விவாகரத்து, பராமரிப்பு, பாதுகாவல்
* குற்றவியல் சட்டம் சம்பந்தமான விடயங்கள்
* தத்துவப் பத்திரங்கள், இறுதி விருப்பாவணங்கள், சத்தியப் பத்திரங்கள் தயாரித்தல்

**Tel: (416) 759 - 4500**

**Fax: (416) 759 - 4510**

(கென்னடி சப்வேக்கு அருகாமையில்
சங்கர் அன் கோ கட்டிட மேல் மாடியில்)

2425, Eglinton Ave. E., Suite #211
Toronto, Ontario. M1K 5G8
(Eglinton & Kennedy)

# செயலாளர் செய்தி

## *Temple worshiping*

*We know that God exists everywhere, but still the idea does not get firmly established in our younger generation's mind and they ask why we have to go to the temple for worshiping. It does not get reflected in their daily actions. Seldom have they prayed in the morning and before bed. We all wait for his Grace somehow. So, we have to worship him regularly and get his grace.*

*The sun's rays contain a lot of heat energy. If we keep a piece of cloth in the sun, it does not catch fire by itself. But if we place a lens and focus the sun's heat rays on that piece of cloth, after some time, we find that the cloth catches fire. Similarly, electrical energy is everywhere, but in order to bring it to our daily use, we need to have generators to channel that energy and transmission systems to distribute it at the places where we need it. In the same way, in order to get the grace of the Omnipresent Lord, we have to go to temples, where we can focus the power of the Lord in a consecrated idol for our benefit in an easy way.*

*In our temple, a huge temple bell is rung at the time of puja. This is done so that the evil spirits may go away from temple premises, and all abuses or other bad sounds may be stifled from being heard. In our houses, we do not have such a huge bell, but we ring only a small bell at the time of puja. The puja that we do in our homes is for our own welfare. We do it according to our convenience and, according to our mental frame of mind. But the puja done in the temples is for the whole society and therefore, there is so much of fanfare, and sounding of musical instruments and singing of auspicious tunes; the deity is taken out in a procession during festival days.*

*If our thoughts are of a high order, then we worship the deity in the above manner, so that we may get supreme happiness. It is with this idea that we perform abhishekam and decorate the idol with ornaments etc. Thus, we worship God in these various ways by doing so many offerings (upacharas). This kind of worship is possible only in the Hindu religion.*

*Idol worship is very important in our religion, for the youngsters and adults. When we bow before an idol or pray before the deity consecrated in the idol, we never think that it is only a piece of stone, but we think that the deity in the idol is the protector and the root cause of the whole world.*

*Thus, temples help to increase the devotion of devotees to God and this devotion helps them to overcome or reduce their sufferings .Ordinary people may not have the capacity, and strength of mind to bear their sufferings. But with bhakti or devotion to God, they can face them, and get also the mental strength to bear them. It is for this purpose that an ordinary person goes to the temple. He goes there, offers some prayers and then he feels all right.*

In conclusion, Swami Vivekananda addressed to devotees and young Hindus at Rameshwaram Temple on temple worshiping as:

"It is in love that religion exists and not in ceremony, in the pure and sincere love in the heart. Unless a man is pure in body and mind, his coming into a temple and worshiping Shiva is useless. The prayers of those that are pure in the mind and body will be answered by Shiva, and those that are impure and yet try to teach religion to others will fail in the end. External worship is only a symbol of internal worship; but internal worship and purity are the real things. Without them, external worship would be of no avail. Therefore you must all try to remember this."

We humbly request our parents to involve their children to worship the God daily sincerely at home and take them to temple for worshiping on special days.

V. Nantheeswarar

Secretary,

Canada Hindu Maamantram.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



சர்க்கரைப் பொங்கல் இனிதே பொங்கட்டும்!

# யசோ சின்னத்துரை

கனடிய சட்டத்தரணி



2100 ELLSMERE ROAD, SUITE 202
(MARKHAM & ELLSMERE)
SCARBOROUGH,ON M1H 3B7

**Tel: 416 265 3456**
**Fax: 416 265 2770**

# மலராசிரியர் செய்தி

சைவத் தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் மலரும் புத்தாண்டு வாழ்த்தினையும், தமிழர் திருநாளாம் பொங்கல் வாழ்த்தினையும் இந்து மாமன்றத்தின் சார்பில் கூறிக்கொள்கின்றேன். தமிழ் மக்களாகிய நாங்கள் கொண்டாடி மகிழும் இனிய நாள் இத்தைப்பொங்கல் திருநாளாம். இத்திருநாளில், வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் சைவநீதி மலரும் மலரப் போகின்றது. அதனைப் பெற்றுப் பயன் பெறுவீர்களாக.

எமது சமயம் வெறுமனே பக்தி மார்க்கத்தை மட்டுமே போதிக்கவில்லை. மக்கள் வாழ வழிகாட்டுகின்ற வாழ்க்கை நெறிகளையும அன்பு, ஈகை, தியாகம், பொறுமை, நேர்மை, அஞ்சாமை, சத்தியம், நல்லொழுக்கம் என்பவற்றையும் போதித்து, மானிடம் தழைக்க வழி செய்கின்றது. ஒரு மனிதன் உயர்ந்தோனாக மதிக்கப்படுகிறான் என்றால், அவன் சமய விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்பவனாக இருக்கவேண்டும். "உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகின் உள்ளத்திலெல்லாம் உளன்". நல்லதை நினையுங்கள். நாடு, இனம், மொழி, சமயம், குலம், கோத்திரம் எல்லாம் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழலாம்.

தாய்நாட்டு வாழ்க்கையில் தனிப்பங்கு வகித்த நாம், புலம்பெயர்ந்த நாட்டுக்கு ஏற்ற முறையில் சில மாற்றங்களைப் பெறலாம். ஆனால், எங்கள் பண்பாடு, பழக்க வழக்கங்களை இழந்துவிடக்கூடாது. இன்றும், இன்னும் சில தமிழர்கள் தமது சைவ சமயக் கொள்கைகள் எதுவென்று அறியாமல் வாழ்கின்றனர். இதனால் அவர்கள் உடன்பாடற்ற தெய்வங்களின் பின்சென்று, அற்ப சலுகைகளுக்காக குறுக்கு வழியில் பயனடைய விழைகின்றனர். அறிவாளிகள் ஏமாற்றவும் மாட்டார்கள்; ஏமாறவும் மாட்டார்கள். திருமணம் சம்பந்தமாகவும் சமயம் மாறுகின்றனர். சமயம் மாறியவர்கள் தங்கள் வீடுகளில் வைத்து வழிபட்ட சுவாமி படங்களை கோவில்களில் கொண்டுசென்று வைக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது மனம் வேதனையாக இருக்கின்றது. குப்பைத் தொட்டிக்குள் போடாமல் கோவிலில் வைத்திருக்கிறார்கள் என்று எண்ணி ஆறுதல் அடைந்தேன். சிலர் சமயம் மாறுவதும், மீண்டும் சைவ சமயத்துக்குள் நுழைபவர்களாகவும் இருக்கின்றார்கள். எதிலும் நம்பிக்கையோடு வாழ்ந்தால் நன்மையடையலாம்.

கோயில்களில் பூசகர்கள் சமயத்தைப் போதிப்பவர்களாகவும் இருந்து மக்களுக்கு சமயத்தைப் பற்றிய அறிவை வளர்ப்பது சிறந்தது.

மழைநீரானது நிறமும் குணமும் அற்றது. விழுந்த பின்னர் நிலத்தின் இயல்பைத் தன்னியல்பாக்கிக் கொள்கின்றது. நல்லோரின் சேர்க்கை நல்வழியிலும், தீயோரின் சேர்க்கை தீய வழியிலும் சேர்த்துவிடும். மாணவர்கள் நல்லோரை இனங்கண்டு அவர்களோடு பழக வேண்டும். துரியோதனன், கைகேயி போன்றவர்களின் அழிவிற்கு தீயவர்களின் சேர்க்கையே காரணமாகும். பஞ்ச பாண்டவர்களுக்கு நல்லவர்களின் சேர்க்கை கிடைத்தமையால், அவர்கள் வாழ்க்கையில் உயர்வடைந்தனர்.

பெரியவர்கள், பிள்ளைகளுக்கு சமய சம்பந்தமான கதைகளையும், நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றையும் எடுத்துக் கூறி, அவர்களை நல்லவழிகளில் செல்ல வழியமைத்துக் கொடுக்க வேண்டும்.

உலகமெங்கும் சைவமும், தமிழும், நீதியும் தழைக்க "சைவநீதி" என்னும் மலருக்கு வருடாவருடம் புதுமையுடன் மலர கட்டுரைகள் தந்துதவியவர்களுக்கும், அட்டைப்படத்தை அலங்கரித்துத் தருபவருக்கும் நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் பல கட்டுரைகளை அனுப்பிவைக்குமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்க சைவநீதி.

நன்றி.

வணக்கம்.

திருமதி மனோன்மணி தனபாலசிங்கம்

மலராசிரியை,

கனடா இந்து மாமன்றம்.

Worldwide money transfers
currency exchange cheque cashing

Cash Point®
The Buck Starts Here!

**Tel: 416 284 7000**

Fax : 416 284 4562

**3852 Finch Ave. E. Unit - G03**
**Scarborough ON M1T 3T9**

# Iraivan Temple

Kumar Punithavel



The Sanmarga Iraivan Temple is a white granite stone temple sculptures in India and currently under construction Hawaii Island of Kauai. This temple was inspired by a vision of Satguru Sivaya Subramuniya Swami who was a disciple of Yogar Swami of Jaffna, Sri Lanka. He had seen Lord Shiva walking on the land where the temple is now located. He set the parameters as follows:

* The construction to follow traditional design according to the Saiva Agama tenants.
* It should with stand the perils of time for least thousand years.
* It to be hand carved without the use of machinery.

It takes the prime place, as the first all stone carved temple in United States of America. This temple has many rare architectural features. As desired by Subramuniya Swamigal it is being carved entirely by hand craftsmen following traditional Indian sculpture, shaping the stone with small hammers utilizing over seventy types of chisels. The second feature is the 4-foot-thick foundation is made of a crack-free, 7,000-psi formula using 'fly-ash' a by-product of coal burning. Fly ash consists of inorganic incombustible matter present in the coal that has been fused during combustion into a glassy structure. The foundation was the first project to demonstrate on the use of fly ash in concrete. The third set of features is exhibitions of the stone carver's craft. The foremost of these are two sets of "musical pillars" whose tall rods are designed to resonate precise musical tones when struck with a mallet. Others include six stone lions carved into the pillars each of which contains a stone ball freely rotatable in its mouth but not removable, a large stone bell, and 10-foot-long stone chains with loose links.

The temple is facing south and built according to *vastu sastra* (science). *Vastu* architecture aims at creating a space that will elevate the vibration of the individual to resonate with the vibration of the built space, which in turn is in tune with universal space. The whole space of the temple is defined in multiples and fractions of one unit, 11 feet and $7^{1/4}$ inches. Pillars through the temple are spaced and structured to serve as energy points for the building. Iraivan Temple will be completely free of electricity for mystical reasons, as decreed by Satguru Sivaya Subramuniyaswami.

The main Murthi, or worshipful icon, is a rare *spathika Sivalingam,* a pointed, six-faced 700-pound clear quartz crystal brought to Kauai following a vision. In the early 1980s, Subramuniyaswami had been seeing the crystal in his dreams. A local crystal shop owner, had similar visions of the same crystal, and traveled from Kauai to Arkansas, with no instructions other than to "find the crystal," located it and had it acquired for the monastery and shipped to Kauai. The stone, estimated to be 50 million years old, was not cut out of rock by the miner. Instead, it was found in a perfect state encased in mud, probably harvested from its original outcropping by an earthquake. In 1987, when it was brought to Kauai, it was celebrated as an "Earth keeper" crystal with properties that benefit and protect the planet earth.

The construction of the main pavilion is already complete, and a few other ancillary structures are being worked on. The temple is expected to be inaugurated with a *Maha Kkumbha Aabhishekam in 2017.*

# யோகர் சுவாமிகள் நற்சிந்தனைகள்

## ஓம் தத் சத்

அகமுகமாகு. அப்போதே ஆனந்தமுண்டாம். எதனால் கண் காணுகிறது? எதனால் மூக்கு முகருகின்றது? எதனால் வாய் பேசுகின்றது? அதுதான் ஆத்துமா அல்லது கடவுள். எவ்வளவு சுலபமான வழி! நினைத்துப் பார். அனைத்தும் உன் வசம். ஒரு கணம் நீ ஊன்றி யோசிப்பாயானால், நீ அதுவென உனக்கு நன்கு புலனாகும். உன்னுள்ளே தெய்வீகத் தன்மையை உணர். நீயே உனக்குத் தலைவன். நீயே உன்னை நடத்துபவன். நீயே உலகத்துக்கு ஏக சக்கராதிபதி. இந்தத் தூய எண்ணத்தை மறந்தால் இறப்புப் பிறப்பாகிய சமுத்திரத்திற் கிடந்து திக்கு முக்குப்படுவாய்.

எழுந்திரு, விழித்துக்கொள். உன்னை இனி ஒன்றும் வெற்றியெடுக்க முடியாது. விளக்கு எரியவேண்டுமாயின் திரியும் எண்ணெயும் வேண்டும். நீ பிரகாசமடைய வேண்டினால் ஓயாமல் "ஓம் தத் சத்" என உணர்ச்சியோடு (அதாவது உயிரை எழுப்பி) பிரார்த்தனை செய். சீக்கிரம் புத்தகத்தை மூடி.

## அஞ்சேல்

"அஞ்சுவ தியாதொன்றும் இல்லை,
அஞ்ச வருவதியாதொன்றுமில்லை"

என்னும் ஆன்றோர் மெய்ம்மொழி நம்மைப் "பிறப்பு, இறப்பாகிய கடலைக் கடப்பிக்குந் தெப்பம்". இதைத் துணையாகக் கொண்ட எமக்கென்ன குறை? ஆதலால் நிறைந்த மனத்துடன் இந்தப் பெரும் பிரயாணத்தைச் செய்வோமாக.

## உத்தம இரகசியம்

நாங்களெல்லாம் ஒரே சமயத்தையும் ஒரே சாதியையும் சார்ந்தவர்கள். எங்களுக்குள் ஒரு மாறுதலும் இல்லை. நாங்கள் பரிசுத்தரும், தெய்வத்துள் வைக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றோம். வித்தியாசம் வித்தியாசமான மாறுதல்கள் யாவும் உண்மைச் சுபாவத்தின் சிறப்புக்களாக இருக்கின்றன. இவைகளை மாயை எனப் பெரியோர் சொல்வர். ஒழுக்கத்தினால் வசீகரப்படுத்தப் பட்டோர்க்கன்றி, மற்றையோர்க்கு இவ்வுண்மை புலப்படாது. அதுபற்றியே தன்னுயிர்போல் மன்னுயிர் யாவையும் நேசித்தல் வேண்டுமென்று மகத்துக்களால் திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டு வருகின்றது. ஆகையால் யாவும் ஒழுக்கத்திலேயே தங்கி இருக்கின்றன. இவ்வொழுக்க வழியில் நின்று, எல்லாம் நாம் என்று பாவனை செய்து வரவர அற்புதமான அனுபவங்கள் மூலமாக நாங்கள் சடப்பொருள் அல்ல, சித்துப் பொருளென்று தெளியலாகும்.

## எங்கும் சிவம்

பகைத்தலும் விரும்புதலும் இல்லாதவன் சந்நியாசியானுஞ் சரி, அவனே பரமபுருடன். அதாவது அவன் சீவன் முத்தனென்று பெரியோர் சொல்லு கிறார்கள். இயற்கையோடு அளவளாவி வாழுதல்தான் பேரின்பம். அது ஒரு மாதிரியல்ல; உண்மை உணர்ச்சி. தனக்குத் தான் உண்மையாக இருந்தால் யாவும் விளங்கும். தன்னைப்போல மற்றவர்களையும் நேசித்தலே "தவம்". அதுவே அறம்.

## ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஒழுக்கம் உடையார் எல்லாமுடையார். ஒழுக்கங்களாவன: கொல்லாமை, கள்ளாமை, பிறர் வசை உரையாமை, பிறர் பொருள் கவராமை, தாழ்மை, பொய் உரையாமை முதலியனவாம்.

எக்கருமத்தைச் செய்யும்பொழுதும் ஊக்கத்தோடும், சிரத்தையோடும், மன மகிழ்ச்சியோடும் செய்து பழகுதல்வேண்டும். அப்படிச் செய்து பழகிவந்தால் மனவுறுதி உண்டாகும். அ∴தாவது: மனம் ஏகாக்கிர சிந்தையைப் பொருந்தும். பொருந்தவே ஆன்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்தே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்திற் புகுந்து கவலையை உண்டாக்காது.

# சைவசித்தாந்தத்தில் ஆன்மீக வளர்ச்சியின் படிநிலைகள்

ஆன்மீக அறிஞர் முனைவர் இளசை சுந்தரம்

சைவசமயத்தின்படி, ஆன்மா – அதாவது மனிதன் எதாவது ஒரு பிறப்பில் இறைவன் திருவடியை அடைய வேண்டும். சாதாரண மரணம் மீண்டும் பிறவியைத் தரும். ஆன்மா பிறவாத பெருநிலையை அடைவதற்கு நான்கு வழிமுறைகளை ஆராய்ந்து கூறி இருக்கிறார்கள். அவை: தொடக்கநிலை, வளர்ச்சி, கூடுதலான வளர்ச்சிநிலை, நிறைவுநிலை.

இதை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று வகுத்திருக்கிறார்கள். சாதாரண ஒரு பக்தனின் ஆன்மாவும் சுவாமி விவேகானந்தர் போன்ற மகான்களின் ஆன்மாவும் ஒரே மாதிரியாகவா இருக்கும்? ஒன்று தொடக்கநிலை. அடுத்தது முதிர்ந்த நிலை.

## சரியை:

உலகியலில் மண், பெண், பொன் ஆசையில் சிக்கி கடவுளை மறந்து வாழும் மனிதர்களை முக்திப் பேற்றிற்குத் தகுதியாக்குவதற்கு வகுத்த நெறிகளில் முதலாவது - சரியை. இதற்கு ஒழுங்கான வழியில் நடத்தல் என்று பொருள்.

இவர்கள் சின்னங்களை அணிந்து ஆலயங் களுக்குச் சென்று இறைத்தொண்டு செய்வார்கள். அதாவது, ஆலயத்தைச் சுத்தம் செய்தல், நந்தவனம் அமைத்தல், பூஜைக்கு வேண்டிய பொருட்களைச் சேசரித்தல், அடியார்களுக்கு அன்னமிடுதல், தண்ணீர் பந்தல் வைத்தல் போன்ற பணிகளைச் செய்வார்கள்.

## கிரியை

இது ஆன்மீகத்தின் அரும்பு நிலை. தனது வழிபாடு கடவுளை அகத்தும் புறத்தும் பூஜித்து வழிபடும் செயல் கிரியை எனப்படும். இது ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற இரு வகைப்படும். ஆன்மார்த்தம் என்பது தன் பொருட்டும் தனது குடும்பத்தார் நன்மைக்காகவும் செய்யப்படும் வழிபாடு, பரார்த்தம் என்பது பிறரது நலத்துக்காகவும், மேன்மைக்காகவும் வழிபடுவது ஆகும். இந்த வகையான பூஜை - நித்தியம், நைமித்திகம், காமியம் என்று மூன்று வைக்கப்படும். மந்திரம், யந்திரம், தந்திரம் என்ற மூன்றும் மிகவும் முக்கியம்.

சிவ ஆகமங்கள்

சிவ பூஜை முறைகளைக் கூறுகின்றன. நறுமலர்கள், தூப தீபங்கள், சுத்த நீர் கொண்டு, ஆத்மா சுத்தி, ஸ்தான சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி, லிங்க சுத்தி முதலானவை செய்ய வேண்டும். பின்னார் மூர்த்திக்குரிய மூல மந்திரத்தை ஜெபித்து பீடம் இடவேண்டும். இந்த ஐந்து சுத்திகளையும் செய்வது ஆணவம், கன்மம், மாயை, திரோதாயி, மாயேயம் என்ற ஐந்து வகைப் பாசங்களை அதாவது கட்டுகளைப் போக்குவதற்காகத்தான்.

## அபிஷேகம்:

இறைவனுக்கு அபிஷேகம் செய்வது முக்கிய வழிபாடு. அபிஷேகப் பொருட்களை வடித்தெடுத்த நீர், வாசனைத் திரவியங்கள் கலந்த நீர், இள நீர், பன்னீர், எண்ணெய், பால், பஞ்சாமிர்தம், விபூதி, சந்தனம் போன்றவற்றால் அபிஷேகம் செய்து, ஞானமே நீர் எனப் பாவித்து, ஒவ்வொரு முறையும் அவை நீக்கப்படும் போது நம்முடைய ஆன்மாவைப் பிடித்திருக்கிற அழுக்குகள் நீங்கும் என்பது ஐதீகம்.

அபிஷேகத்தைக் கண்ணாரக் காணும் போது நாம் புற உலகை மறந்து அகமெல்லாம் ஆண்டவனின் எண்ணமே நிறைந்து புத்துணர்வு பெற்று, புடம் போட்ட தங்கமாக மாறுகிறோம். தேவையற்ற எதையெதையோ பார்த்து அழுக்காகிப்போன கண்கள் அபிஷேகக் காட்சியை பார்த்து ஒளி பெறுகின்றன; புனிதம் அடைகின்றன.

## தீபாராதனை:

அபிஷேகம் முடிந்த பின் அலங்காரம், தீபாராதனை செய்வது வழிபாட்டின் நிறைவாகும். தீபாராதனையில் கற்பூரம் முக்கிய இடம்பெறுவதற்கான காரணத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும். தாம்பாளத்தில் சிறிது விபூதி பரப்பி அதற்குள்

கற்பூரத்தை வைத்து அதில் ஒளியேற்றி தீபாராதனை காட்டுவார்கள்.

இறைவனை ஒளிவெள்ளத்தில் பார்க்க இப்போது மின்சார விளக்குகள் வந்த பிறகும் அவற்றைப் பயன்படுத்தாமல் கற்பூரம் காட்டுவதற்குக் காரணம் உண்டு. இதில் ஆண்டவனைத் தரிசிப்பது என்ற நோக்கம் மட்டுமல்ல; அதற்கு மேலாக அதில் ஓர் உயர்ந்த தத்துவம் இருக்கிறது.

## விபூதி

விபூதி என்பது இறை சொருபம்; கற்பூரம் என்பது ஆன்மாவின் சொரூபம். அதில் பக்தி என்ற நெருப்பைவைத்தவுடன் கற்பூரம் கரைந்து கரைந்து இறுதியில் விபூதியில் இரண்டறக் கலந்துவிடும். இதைப் போலத் தான் பக்தர்களுடைய ஆன்மாவும் கரைந்து ஆண்டவனோடு கலக்க வேண்டும் என்று உணர்த்தவே தீபாராதனையில் கற்பூரத்தைப் பயன்படுத்துகிறார்கள்.

இது தெரியாமல் பல பக்தர்கள் தீபாரதனையின் போது கண்களை மூடி கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள். இது கண்களை மூட வேண்டிய தருணம் அல்ல: கண்களை நன்றாகத் திறந்து தரிசிக்க வேண்டிய காட்சி.

இது மட்டுமல்ல, இன்னொரு ஆழமான தத்துவமும் உண்டு. கற்பூரம் வெண்மை நிறம் கொண்டது. அக்கினியோடு இணையும்போது அதன் நிறத்தைப் பெற்று, ஒரு பற்றுமில்லாமல் கரைந்து, விபூதியோடு கலந்து விடுவதைப்போல், ஆன்மா சத்துவ குணத்தைப் பெற்று ஞானமாகிய அக்கினியுடன் சம்பந்தம் பெற்று எல்லாப் பற்றுகளும் நீங்கப்பெற்று பரமுத்தி அடையும்.

## யோக நிலை:

ஆன்மிகத்தில் சரியை, கிரியை நிலைகளைப் பார்த்தோம். கோவிலுக்குச் சென்று வழிபடுதல், சடங்குகள் செய்தல் என்ற நிலையில் இவைகள் இருக்க - அடுத்த வளர்ச்சி நிலைதான் யோகநிலை.

பக்தன் புறநிலை சடங்குகளில் இருந்து நீங்கி அகநிலையில் இறைவனை மனதில் நிறுத்தி இறைவனோடு ஒன்றி ஆன்மிக இன்பம் நுகர்தலே யோகநிலை எனப்படும். யோகம் என்பதற்கு சேர்க்கை என்று பொருள். அதாவது - ஜீவாத்மா பரமாத்மாவோடு உள்ளத்தால் ஐக்கியமாதல்.

## பேரின்பம்:

இந்த வழிபாட்டில் முக்கிய பங்கு வகிப்பது தியானம் தான். மனதைப் புற விஷயங்களில் போகவிடாமல் தடுத்து பிறகு மூலாதாரம் சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்று ஆறு ஆதாரங்களை அறிந்து அங்கு உறைகிற விநாயகர் பேரூன்ற அதிதேவதைகளைத் தியானித்து, அதில் உச்சநிலை அடையவேண்டும். இன்னும் மேலேறிச் சென்று அங்குள்ள தாமரை மொட்டு போன்ற ஒரு பகுதியை மலரச் செய்து அவ்வழியாக ஒழுகும் அமுதத்தை தேகம் முழுவதும் நிரப்புதல் வேண்டும். அதுவே பேரின்பம்.

தாமரை மொட்டு போல் சிரசில் இருக்கும் அந்த உறுப்பை மாங்காய்ப் பிஞ்சு போல் இருக்கும் என்றும் சொல்வார்கள். ஆழ்ந்த பரிபூரண தியானத்தின் போது அதில் பால் பொங்கிவரும். அதை அனுபவிப்பதே பேரின்பம். இல்லற வாழ்வில் நாம் அனுபவிப்பது சிற்றின்பம். இதைத் தான்:

"மாங்காய்ப் பாலுண்டு மலைமேல் இருப்பார்க்கு
தேங்காய்ப் பால் ஏதுக்கடி குதம்பாய்?"

என்று ஒரு சித்தர் பாடினார்.

மாங்காய்ப்பால் - ஆன்மிக வாழ்க்கை.

தேங்காய்ப்பால் - உலக வாழ்க்கை

யோக வகைகள் எட்டு.

யோக மார்க்கம் என்பது இயமம் நியமம், ஆசனம், பிரணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என எட்டு வகைப்படும்.

இயமம் : அகிம்சை, உண்மை, கள்ளாமை, பிறர்பொருள் விரும்பாமை, பிரம்மச்சரியம்.

நியமம்: தவம், சுத்தி, திருப்தி, ஞான நூலாராய்ச்சி, பிறருக்கு உணர்த்தல்.

ஆசனம்: ஆசனம் என்பது மேற்கூறிய யோகத்தை ஒழுங்காய் நடத்த உடம்பை தக்கபடி அமரச்செய்தல். பல வகையான ஆசன முறைகள் உண்டு. அதைத்தான் யோகாசனம் என்கிறோம்.

பிரணாயாமம்: பிராணவாயுவை அடக்குதல் ஆகும். இது மந்திர ஜெபத்தோடு அடக்குதல், ஒன்றுமின்றி அடக்குதல் என்று இரு வகைப்படும்.

பிரத்தியாகாரம்: ஐம்புலன்களை அலையவிடாமல் மனதை ஒருநிலைப்படுத்துவது.

தாரணை: குருவிடம் உபதேசம் பெறுதல், மழைத் துளியை தன்னுள் பெற்ற முத்துச்சிப்பி, அதை முத்தாக்குவது போல அந்த உபதேசத்தை தன்னுள் இறக்கி அதை அறிவுக் கருவூலமாக்கி பிறருக்கு வழங்க வேண்டும்.

தியானம்: மனதை இறைவனிடத்தில் சலனமின்றி நிலைநிறுத்தி வழிபடுவது.

சமாதி நிலை:

இவைகளையெல்லாம் கடந்து சமாதி நிலை ஒன்று இருக்கிறது. நாம் இந்த உலகில் இருந்துகொண்டே இல்லாமலிருப்பதுதான் அது. உடல் தரையில் இருக்கும், மனம் அதைவிட்டுப் பிரிந்து, ஆண்டவனோடு லயித்துக் கொண்டிருக்கும். உடல் வேறு, மனம் வேறாகப் பிரிக்கும் சக்தி படைத்தது சமாதி நிலை. ஒரு குறிப்பிட்ட எல்லைக்கும் பிறகு மனமும் உடலும் ஒன்று சேரும்.

ஒருசில மகான்களே இந்தக் கலை கைவரப் பெற்றவர்கள். மேலை நாடுகளைவிட இந்த அனுபவம் இந்தியத் தத்துவத்திலே அதிகம் உண்டு. இந்த நிலையைப் பெற்று வாழ்வில் நிம்மதி காண நினைக்கும் மேல் நாட்டுக்காரர்கள், நமது மகான்களைத் தேடி வருகிறார்கள்.

ஞான நிலை:

ஆன்மிகத்தில் ஞானநிலை என்பது சரியை, கிரியை, யோகம் ஆகியவற்றைத் தாண்டி ஞான நிலையில் தனக்குள்ளே இறைவனைக் காணும் பக்குவம். பூ, பிஞ்சு, காய், கனி என்று உதாரணம் சொல்லலாம். கனியான பிறகுதான் காம்பில் இருந்து விடுபட முடியும்.

ஞானம் வளர்ந்த பிறகுதான் உலக வாழ்க்கையில் இருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணம் பிறக்கும். இதுதான் ஆன்மிகத்தின் நிறைவு நிலை.

ஞான நிலை என்பதைப் பற்றி திருவள்ளுவர் சிந்திக்கிறார்:

'மனத்துக்கண் மாசிலன்ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற'

மனதில் ஆயிரம் குப்பைகளை வைத்துக் கொண்டு ஆன்மிகச் சிந்தனைகளைச் செய்வதில் பலனில்லை. மனதைச் சுத்தமாக்குங்கள். அதுவே முக்கியம்.

கோபம், குரோதம் போட்டி, பொறாமை, காமம், பேராசை, சூழ்ச்சி, சுயநலம், போன்ற அழுக்குகளை மனதிலிருந்து நீக்க வேண்டும். மனதை பூஜ்ஜியம் ஆக்குதல் என்று மகான்கள் சொல்கிறார்கள்.

பெரியபுராணம்:

ஆன்மிகத்தில் ஞான நிலை பெற்றவர்களின் மனோபாவம் எப்படி இருக்கும். பெரிய புராணம் இயற்றிய சேக்கிழார் விடை சொல்கிறார்.

"ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்
கேடும் ஆக்கமும் கேட்ட திருவினார்
கூடும் அன்பினால் கும்பிடலேயன்றி
வீடும்வேண்டா விறலின் விளங்கினார்"

ஓட்டாஞ்சல்லியையும், பொற்காசையம் ஒரே சம நிலையில் பார்க்கும் மனம் வேண்டுமாம். இது சாத்தியப்படுமா? ஞான நிலை அடைந்தால் சாத்தியப்படும்.

திருச்சிற்றம்பலம்

## கடையிற் சுவாமிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் ஈழநாட்டிற் கடையிற்சுவாமி முதலான சித்தர்கள் வாழ்ந்தனர் கடையிற்சுவாமிகள் பெங்களூரில் நீதிபதியாக இருந்தபோது குற்றவாளிக்கு மரணதண்டனை விதிக்க மனமொப்பாமையினால் அதனைத் துறந்துவிட்டு ஈழம் வந்தவர் என்பர். கடையிற்சுவாமிகள் பெரும்பாலும் யாழ்ப்பாணம் பெரிய கடைப்பகுதியில் காணப்பட்டமையால் அவர் கடையிற் சுவாமிகள் என்றழைக்கப்பட்டார் சுவாமிகளின் தோற்றம் வசீகரிக்கும் தன்மையது. கடையிற் சுவாமிகள் அற்புதங்கள் பல புரிந்துள்ளார். பெரியகடையிற் கடை வைத்திருந்தவர்கள் சுவாமிகளுக்கு ஏதேனுமொரு பொருளைக் கொடுத்தால் தங்கள் வியாபாரம் செழித்தோங்குமெனக் கருதினர். கடையிற் சுவாமிகளுக்கு வயிரமுத்துச் செட்டியார், சின்னச்சுவாமி குழந்தைவேற் சுவாமி, சடைவரதர், செல்லப்பா சுவாமி போன்ற பலதரப்பட்ட சீடர்கள் இருந்தனர். யாழ்ப்பாணம் நீராவியடியில் தம் இறுதிக் காலத்தைக் கழித்த கடையிற் சுவாமிகள் 1891 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் பூரட்டாதி நட்சத்திரத்தில் சமாதிநிலை எய்தினார்.

# LAW OFFICE

## T. JEGATHEESAN

உங்கள் சட்டப் பிரச்சினைகள் எதுவாயினும்
தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும் சட்ட
நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

- **REAL ESTATE - Purchase, Sale, Mortgage**
  காணி, நிலம், வீடு வாங்குதல், விற்றல், அடமானம் வைத்தல்
- **FAMILY LAW - Divorce, Seperation**
  குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிரிவு
- **BUSINESS - Purchase, Sale, Incorporation**
  வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை
- **IMMIGRATION - Refugee Matters, Sponsorship, Appeal**
  குடிவரவு அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை, மேன்முறையீடு
- **POWER OF ATTORNEY - Affidavits, Statutory Declarations, Last Will**
  தத்துவப் பத்திரம் சத்தியக்கடுதாசி, உயில்

இலங்கை, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட வல்லுனராகப் பயிற்சி பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்

## தி. ஜெகதீசன்

Barrister, Solicitor and Notary Public (ONTARIO)

**☎: Off: 416- 266 6154 Res: 416- 449 0358 Fax: 416- 266 4677**
**2620 Eglinton Ave. E., # 201 Scarborough, On., M1K 2S3**

# SELF AS GOD

**Siddhantaratnam Dr K. Ganesalingam**

Nature of soul or self is seen differently by different systems of philosophy. It is not recognised as an entity in some systems. Saiva Siddhanta sees soul as a separate and eternal entity. Various systems of Vedanta see it in various ways according to their interpretation of Vedanta Sutra and Vedic thoughts.

Vedas consist of volumes of Sanskrit literature which came during a period before the Common Era. Upanishads are the Vedic literatures which came at the end period of Vedas, and are also called Vedanta.

The Vedic literatures carry many inconsistencies and contradictions and are not clear in their teachings. They gave rise to various interpretations and commentaries. This has been pointed out by scholars from time to time. Prof. M. Hiriyanna, an Indian scholar in philosophy, in his book 'The essentials of Indian Philosophy', says, *'There are great, almost insurmountable, difficulties in deciding what exactly is the teaching of the Upanishads in certain important respects'.*

With a view of finding a synthesis of the varying Vedic thoughts, Badarayana wrote Brahmasutra which is also known as Vedantasutra. The scholars who came later wrote commentaries to Brahmasutra, explaining it. These commentaries varied among themselves and caused the formation of different philosophical schools. It is unfortunate that Brahmasutra, which aimed at removing the contradictions and providing unified views, gave rise to varying schools.

One Vedanta school which came up this way is that of **Sankara** (8th century) It is referred to as ***Advaita Vedanta*** (or ***Kevaladvaita Vedanta***). Brahmam is the only Reality; Soul is Brahmam; Soul is one but seen as many etc, are its views.

**Ramanuja** (11th century), another saint philosopher who came later, saw the unacceptable views of Sankara and formulated another school called ***Visishdatvaita Vedanta***. While Sankara placed Brahmam or God in the forefront and considered it as the only reality, Ramanuja showed the soul and the world also as realities and attributes of God. Ramanuya's Visishdtvaita appears to be a refutation to Sankara's Advaita.

In contrast to the Vedanta views of Sankara and Ramanuja, another saint **Matva** (12th century) formulated a philosophy called ***Dvaita Vedanta***. According to this philosophy, irrespective of their states, God and soul are different and real entities. Also the unintelligent world and worldly things are also real. These views are, to some extent, nearer to those of Saiva Siddhanta.

Although these schools of Vedanta philosophy differ among themselves, it is interesting to note that all of them claim their origin to the one and the same Brahma sutra. The views of these Vedanta schools also have their own defects which were pointed out by many scholars, particularly in the Tamil land.

As it is difficult to study and understand the vast Vedic literatures which are not clear in their teachings, four brief statements were selected and considered as giving a gist of the Vedas. These sacred statements are called *Maha Vakyas* (great sayings). They are, *'tat tvam asi'* ('You are that'), *'aham brahmasmi'* ('I am Brahman), *'ayam atma Brahma'* ('This Self is Brahmam') and *'prajnanam Brahma'* ('Wisdom is Brahmam'). The first three statements are same in contents.

It is believed that understanding these Maha Vakyas will enable one to gain knowledge of the gist of Vedas. Vedantists interpret these Maha Vakyas directly and claim that the self is Brahmam. Saiva Siddhantists see the meaning and import of these sentences differently.

A necessary spiritual practice in Saivism to see the Truth or Divine (*meipporul kaandal*) is continuous contemplation on God. It is called *Sivohambavana*. A Guru or Rishi, when teaching the Truth to his disciple, first makes the disciple to see himself as Divine. Guru also considers himself as Divine. That is, both of them 'sit' together with '*Sat*', the unchanging Reality, in their psyche. Recitation of Veda Mahavakyas like '*Aham Brahmasmi*' and '*Tatvamasi*' helped the Guru and the

disciple for this Sivohambavana. This is the explanation to be given to the import of these Mahavakyas, as seen from the words of Saiva saints.

Another reason for the Vedantists to consider Brahmam as the only Reality and the self as Brahmam, is the vague and confusing teachings of Vedas. A sentence in Rig Veda reads as '*Ekam eva athvithiyam Brahmam*' ('One is the Only One; non-dualistic is Brahmam)'). Vedantists interpret it as 'God (One) is the only one Reality; there is no second Reality apart from it'. On this understanding, they consider Self as Brahmam and other entities as illusion.

If self or soul has come from Brahmam or part of Brahmam, what made the individual soul to break away and get embedded in the physical body? How did the other entities, like world and worldly things, become illusions or images of Brahman? It is said that they are caused by mithya or avidya. Then, would it not mean that these entities are more powerful than Brahmam? If the soul ultimately goes to God, the source, what is the guarantee that it would not break away and get embedded again in physical body? No satisfactory answers are given by the Advaita Vedantists. They say that these questions cannot be explained by words (*anirvasaniya*).

Saiva Siddhanta considers the soul (pasu) and bondage (pasam) as also real and eternal like God (pathi). The embedded soul is in the darkness of anava which is the cause and source of its ignorance. From birth to birth, it moves from this darkness of ignorance to the light of Divinity and ultimately enjoys eternal bliss in the Grace of God Siva. The Saiva Siddhanta book *Thiruvarutpayan* explains it as follows:

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும்சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்."

*'Our Lord (Siva) is inseparable from Sakthy who makes the innumerable souls to reach His state'.*

As shown above, Advaita Vedanta claims that the Self is Brahmam (God), and ultimately it becomes Brahmam. Saiva Siddhanta says that **self is a separate entity which does not become God, but attains the state of God.**

Meykandaar gives the meaning of the line '*Ekam eva athvithiyam Brahmam*' as, 'God is One only and there is no second God'. He says,

"ஒன்றுஎன்றது ஒன்றேகாண்; ஒன்றேபதி; பசுவாம்
ஒன்று என்றநீ பாசத்தோடு உளைகாண்"

*'What is said as One is the only One (God); God is One only; You who said that the self under bondage is also the One (God)' are suffering under the bondage (of pasam)'*

In the said statement, Meykandar sees God (Pathi) as ONE Reality (while recognising the other two Realities of Pasu and Pasam). Other Saiva saints including Thirumoolar also see Pathi, Pasu and Pasam as eternal Realties. Thus, Saiva Siddhantists who understand and accept the triple entities are in a position to give acceptable rational explanations to Soul and God. Vedantists, who see God as the only Reality are not in a position to provide plausible explanations, except telling *anirvasaniya.*

Without realising their rational philosophy, some Tamils, even scholars, are becoming mesmerised by Sankara's Advaita Vedanta. Main reason appears to be their loss of political powers since about 1600 AD. The resulting helplessness moved them towards the mistaken belief of Advaita Vedantists that everything is unreal like a dream, but the self is Brahmam and everlasting. This belief may give a psychological thrust to them, but not move them upwards spiritually.

Another reason is the loss or decline of Tamil culture and intrusion of alien culture, which followed the loss of their political power. Study of Saiva Siddhanta, which is linked to Tamil language, had its roots in the Tamil land. It was gradually getting eroded. This lamentable situation made it easy for the Vedantists to intrude into the minds of the Tamils.

Today the Saiva Tamils show no interest in knowing their religion and its philosophy, and are falling prey to the propaganda of other faiths. It is time for them to realise that they are heirs to the rich and rational philosophy of Saiva Siddhanta which reigns supreme over Advaita and other philosophies.

# சங்க காலத்தில் சைவம்

பேராசிரியர் இ. பாலசுந்தரம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கனடா வளாகம்

சைவமும் தமிழும் தமிழர் பண்பாட்டிலே இணைந்து வளர்ந்த மதங்களாகும். சைவம் என்பது சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு, சிவ வழிபாட்டுடன் தொடர்புடையதாக, தமிழ் மக்களால் பேணப்பட்ட வழிபாட்டு மதமாகும். இதுவே தமிழரின் பூர்வீக மதமுமாகும். சிவம் என்பதற்குச் செம்மை என்றும் பொருளுண்டு. கடவுளைச் செம்பொருள் என்பது தமிழர் மரபு. சிவந்த மேனியுடையவராகவே சிவன் வருணிக்கப்படுகிறார். சிவம் என்பது தமிழ்ச் சொல்லாகும். சங்கப் பாடல்களில் சிவனைப் பற்றிய வருணனைகள் இடம்பெற்ற போதிலும் சிவன் என்ற சொல் இடம்பெறவில்லை. அதுபோன்றே தொல்காப்பியத்திலும் சிவன் என்ற சொல் குறிப்பிடப்படாமை ஆய்வுக்குரிய விடயமாகும். தமிழ்ப் பேரறிஞர் ஞா. தேநேயப்பாவாணர் (2009:93)இது பற்றிக் கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது:



"சேயோன் சிவந்தவன். சேந்தன் என்னும் பெயரும் அப்பொருளதே. முருகன், வேலன், குமரன் என்னும் பெயர்களும் இவனுக்குண்டு. சிவன் என்பது சேயோன் என்பதன் உலக வழக்கு வடிவம். இப்பெயர் வடிவு வேறுபாட்டைக் கொண்டு, பிற்காலத்தில் ஆரியர் ஒரே தெய்வத்தை இரண்டாக்கித் தந்தையும் மகனுமாகக் கூறிவிட்டனர். குமரன் என்பதற்கும் சேய் என்னும் குறுக்கத்திற்கும் மகன் என்று தவறாகப் பொருள்கொண்டதே இதற்கு அடிப்படை."

சிவனுக்கும் இமயமலைக்கும் தொடர்பு கூறுதல் சைவ மக்களின் நம்பிக்கையின் பாற்பட்டதாகும். பரத கண்டம் முழுவதும் பரவி வாழ்ந்து வந்த பூர்வீகத் திராவிட மக்கள் மிகவும் உயர்ந்த மலையாகிய இமய மலையைத் தமது கடவுளின் இருப்பிடமாகக் கருதியமையும் இயல்பானதே. பண்டைக் காலத் தமிழகத்தில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்தோர் சிவந்த – செம்மை நிறமுடைய கடவுளைச் சேயோன் என அழகு தமிழில் வழங்கினர். "குறிஞ்சி நிலத்தார் தம் தெய்வத்தை மலையில் தோன்றும் நெருப்பின் கூறாகக் கண்டனர். இதனாலேயே சிவனுக்குத் தீவண்ணன், அந்திவண்ணன், மாணிக்கக் கூத்தன் என்னும் பெயர்களை வைத்தனர்" என்பர் தேவநேயப்பாவாணர். பிற்காலத்தில் வடமொழியாளரின் புராணக் கதைகளும் ஆரிய சமயக் கோட்பாடுகளும் தமிழர் சமயத்தில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியதன் பயனாகப் பல்வேறு கலப்புகள் தமிழர் சமயத்தில் இடம் பெறலாயின. திருமுருகன் ஆறுமுகம் ஆனதும், முருகன் சுப்பிரமணியனானதும் அறிஞர் அறிந்த விடயங்களே. இவைபற்றி மேலும் ஆராய்வது பொதுமக்களுக்குச் சிக்கலைத் தருமாதலால் இதனை இதனோடு அமைவோம்.

சைவம் எனக் கூறும்போது காஸ்மீர சைவம், வீர சைவம், தமிழர் சைவம் என வேறு வேறு பிரிவுகள் உள்ளமை கவனிக்கத்தக்கது. இதனால் இவை வெவ்வேறு பிரிவுகளைக் கொண்டனவோ என்ற ஐயம் எழுதல் இயல்பே. தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களுக்கும் அவர்கள் பேசிய மொழிக்கும் அமைய அவர்கள் தனியாகச் சைவம் எனப் பெயரிட்டு வழங்கலாயினர். இந்து மதம் எனக் கூறும்போது சிவழிபாட்டுடன் தொடர்புடையனவும், இந்தியாவில் தோற்றம் பெற்றனவாகவும் உள்ள சைவம், வைஷ்ணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் முதலான மதங்கள் அடங்குகின்றன. இவை ஒரே அடிப்படையான மத நம்பிக்கை கொண்டவையாகும். ஆயினும் ஒவ்வொரு மதப் பிரிவினரும் மொழியாலும், வழிபாட்டு முறைகளாலும் தாம் நம்பிக்கை கொண்டுள்ள புராணக் கதைகளாலும் தனித்தனியாகப் பிரிந்து காணப்படுகின்றன.

சிவனை வணங்கும் வழிபாட்டுமுறை இந்திய உபகண்டத்திலே மிகப் பழங்காலம் முதலாக இருந்து வந்தது என்பதை கி. மு. 5000 ஆண்டுப் பழமையுடைய சிந்துவெளியில் கிடைத்த புதைபொருள் சிவ சின்னங்கள் சான்றுபடுத்துகின்றன. சிவ வழிபாடு மிகத்தொன்மை யானதாக இருந்த போதிலும் சைவம் என்ற சொல்லாட்சியும் அதுதொடர்பான கோட்பாடுகளும் மிகப் பிந்திய காலத்திலேயே நூல் வடிவம் பெறலாயின. சங்க காலத்தில் சிவவழிபாடு முதன்மை பெற்றிருந்தது எனக் கூறுவதற்குப் போதிய சான்றுகள் கிடைத்தில. அக்காலத்தில் முருக வழிபாடும் கொற்றவை வழிபாடும் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. சங்ககால மக்கள் தம் குடும்ப அல்லது சமூக வழிபாட்டுக்குரிய தெய்வமாகப்

போற்றிய முருகனைக் "கொற்றவை புதல்வன்" என்றே நம்பினர்.

சங்க இலக்கியங்கள் மக்கள் வழக்கில் நிலைபெற்றிருந்த தெய்வங்கள் பற்றி விரிவாகக் குறிப்பிடுகின்றன. குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலப்பாகுபாட்டுடன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மக்கள், தத்தம் நிலங்களுக்குச் சிறப்பாக ஒவ்வொரு தெய்வத்தை முதன்மைப்படுத்தி வழிபடலாயினர். இதனைத் தொல்காப்பியம் வருமாறு குறிப்பிடுகிறது:

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும்படுமே"
(தொல். பொருள். சூத். 5)

இதன்படி முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நாநிலங்களுக்குரிய தெய்வங்களாக முறையே மாயோன், சேயோன், இந்திரன், வருணன் ஆகிய தெய்வங்கள் போற்றப்பட்டனர். இவ்வாறு நோக்கும்போது நிலப்பாகுபாட்டின் அடிப்படையில் சிவன் சங்க காலத்தில் முதன்மை பெற்றிருக்கவில்லை என்பதும், எந்த நிலத்தினருக்கும் சொந்தமான தெய்வமாகச் சிவன் கருதப்படவில்லை என்பதும் மிகவும் தெளிவாகின்றன. அக்காலத்தில் மக்கள் மத்தியில் கொற்றவையும் முருகனும் மிகப் பிரபல்லியம் பெறுவதற்கு அக்கால அரசியல் மற்றும் சமூக நடைமுறைகளும் காரணமாக அமையலாயின. வீரயுகம் எனப் போற்றப்பட்ட அக்காலத்தில் வீரத்திற்கு முதன்மை அளிக்கப்பட்டமையால் கொற்றவை வழிபாடு மக்களிடமும் அரச செயற்பாடுகளிலும் முதன்மை பெறலாயிற்று. கொற்றவை புதல்வனான முருகன் காதற் கடவுளாகப் போற்றப்பட்டார். சங்கத் தமிழ் இலக்கியமான திருமுருகாற்றுப்படையில், ஆறுபடை வீடுகளில் முருகன் எழுந்தருளி மக்களுக்கு அருளும் பாங்கு பேசப்படுகிறது. அதே நூலில் ஆறுபடைவீடுகள் பற்றிக் கூறும்போது, திருச்சீரலைவாய் என்னும் தலத்திலே வீற்றிருக்கும் முருகன் ஆறு முகங்களும் பன்னிரு கைகளும் உடையவராகவும், சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றம் பெற்ற ஆரியக்கடவுளின் வடிவமாகவும் சித்திரிக்கப்படுதலும் கவனத்திற்குரியனவாகின்றன.

புறநானூற்றில் சிவனைப்பற்றிய செய்திகளாக மூவெயில்கள் எரித்தமை, நீலமிடற்றண்ணல், தலையிலே திங்கள் சூடியிருத்தல், நெற்றிக்கண், முக்கண் சிவனார் கோயில், அந்தணர் மந்திர ஒலி முதலான செய்திகள் இடம்பெறுகின்றன. இவ்வாறாகச் சிவனைப் பற்றிய வருணனைகள் இடம்பெறுகின்றனவே தவிர சிவன் என்ற பெயர் எந்தச் சங்கச் செய்யுளிலும் இடம்பெறவில்லை. சங்கப்பாடல்களிலே, முழுவாள்நெடியோன், காரியுண்டிக் கடவுள், நிலமணிமிடற்று ஒருவன், முரண்கெழு செல்வன், முக்கட்செல்வர், நீள்நிமிர்சடை முதுமுதல்வன், உமையாள் பாகத்தான் எனச் சிவனது பண்புகள் குறித்த அடைகளால் சிவன் வருணிக்கப்படுகிறாரே தவிர, சிவன் என்னும் நாமம் பேசப்படவில்லை.

வேத்தியல் - பொதுவியல் என்ற கலாச்சார தத்துவத்தின் அடிப்படையில் அரசர்கள் பிராமணியத்தைத் தழுவி பெரு வேள்விகள் செய்திருக்கிறார்கள். அதனால் அவர்கள் சிவ வழிபாட்டுக்கு முதன்மை அளிக்க வேண்டியதாயிற்று. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற மன்னனின் காலத்தில் சிவனுக்குக் கோயில் அமைக்கப்பட்டிருந்தமை புறநானூற்றுப் பாடல்வரிகளால் அறியப்படுகிறது. அக்கோயிலில் அந்தணர்களின் மந்திர ஒலியும் வழிபாடுகளும் ஆலய தரிசனங்களும் இடம்பெற்றிருந்தன என்பது அறியப்படுகிறது.

"முக்கண் செல்வர் நகர்வலம் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறைமுனிவர் ஏத்துதுகை எதிரே.."
(புறநானூறு- 6:வரி.18-20)

இப்பாடல்வரிகளிலே சிவன் கோயில் 'முக்கண்செல்வர் நகர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது. அக்காலத்தில் கோயில்கள் செங்கற்களாலும் சுண்ணாம்புச் சுதைகளாலும், மரத்தாலுமே கட்டப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு கட்டப்பட்ட கட்டிடங்கள் காலத்தால் அழியும் தன்மை வாய்ந்தவை. அதனாலேயே பிற்காலத்தில் ஆட்சி புரிந்த பல்லவ மன்னர் கருங்கற் கோயில்களை அமைக்கும் திராவிடக் கட்டிடக் கலையைத் தென்னகத்தில் தொடக்கிவைத்தனர். சங்க காலத்தில் கட்டப்பட்டு அழிந்துபோன ஓர் ஆலயம் பற்றி அகநானூறு வருமாறு சித்திரித்துக் காட்டுகிறது.:

"இட்டிகை செடுஞ்சுவர் விட்டகம் வீழந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து
எழுதணி கடவுள் போகலின் புல்லென்று,
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை"

கோயில் மாடம் அழிந்து போனதும் அங்கு பூசை வழிபாடுகள் இடம்பெறாது போயின என்பதை இப்பாடல் குறிப்பிடுகின்றது.

சிலப்பதிகாரம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் தோன்றியது என்பதே அறிஞர் கருத்தாகும். ஆனால் இளங்கோவடிகள் சங்ககாலத்தில் நிலவிய பண்பாட்டு விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, அவற்றைப் பதிவு செய்யும் நோக்குடனேயே தம் காப்பியத்தைப் படைத்தார் என்பதும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும். சிலப்பதிகாரத்திலே கூறப்படும் பல்வேறு கோயில்களும் ஆலய வழிபாட்டு முறைகளும் சங்க காலத்திற்கு உரியனவே. அவ்வகையில் சிலப்பதிகாரத்தில் இந்திரவிழாவூர் எடுத்தகாதையில் (வரி 169-173) இளங்கோ குறிப்பிடும் கோயில்களை அறிந்து கொள்வது பயனுடையதாகும்.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"

என்ற பாடல்வரிகளிலே பிறவா யாக்கைப் பெரியோன் (இறைவன்), முருகவேள், வெள்ளைமூர்த்தி, நெடியமால், வாசவன் ஆகியோருக்கான கோயில்கள் இருந்தமை அறியப்படுகின்றன.

சங்கப்புலவர் நக்கீரனார், "கறைமிடற்றண்ணல் காமர் சென்னிப் பிறைநுதல் விளங்கும்" (புறம்.55:வரி 1-5) சிவன், மக்களையும் தேவர்களையும் கொடுமைப்படுத்திய அசுரர்களின் மதில் சூழ்ந்த மூன்று கோட்டைகளை அழித்த புராணக்கதையை நினைவுபடுத்துகின்றார். மேலும், சிவன் எருதுக் கொடியை உடையவர் எனவும் உமையொருபாகன் எனவும், மற்றும் சிவனது தோற்றப் பொலிவும் திருமுருகாற்றுப்படையிலே வருணிக்கப்படுகின்றன. சிவன் "நீரும் நிலனும் தீயும் வளியும் விசும்போடு ஐந்துடன் இயற்றியவர்" எனவும், மழுவாள் தரித்தவர் எனவும், எல்லாக் கடவுளருக்கும் தலைவர் எனவும் மதுரைக்காஞ்சியிலே (வரி:453-455) சிவபெருமானைப் பற்றிய செய்திகள் பேசப்படுகின்றன. பல்லவர்காலப் பக்தி இலக்கியத்தில் சிவனது தோற்றப்பொலிவு கூறப்பட்டிருப்பதுபோல் அகநானூற்றிலே சிவபெருமான் பற்றிக் கூறும் வருணனைப் பகுதியும் அமைந்திருத்தல் நோக்கத்தக்கது:

."கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
மார்பின் அஃதே மையில் நுண்ஞாண்
நுதலது இமையா நாட்டம் இகலட்டுக்
கையது கணிச்சியொடு மழுவே மூவாய்
வேலுமுண்டு அத்தோலா தோற்கே
ஊர்ந்தது ஏறே சேர்ந்தோள் உமையே..."

இவற்றை நோக்கும்போது சங்ககாலப் புலவர்கள் சிவன் பற்றிய புராணக் கதைகளை நன்கு அறிந்திருந்தனர் என்பது நன்கு புலனாகின்றது. அன்றியும் முழுமுதற் கடவுளாம் சிவனை எல்லாத் தெய்வங்களிலும் மேம்பட்ட தலைவராகவும் கருதியுள்ளனர். சங்க இலக்கியம் கூறும் சிவனது தோற்றப் பொலிவு, சிவனுடன் தொடர்புடைய புராணக் கதைகள், சிவன் கோயில்கள், அந்தணர் மந்திர வழிபாட்டு முறைகள், வேள்வி வேட்டல் முதலான செய்திகள் யாவற்றையும் தொகுத்து ஆராயும்போது, கி. பி. ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் தோன்றிய பக்தி இலக்கியங்களுக்கு முன்னோடியாகச் சங்க காலத்திலே அதற்குரிய அடிப்படையான கடவுட் கோட்பாடும் வழிபாட்டு முறைகளும் இடம்பெற்றிருந்தமையை உணரக் கூடியதாக உள்ளது. சங்காலத்திலே சிவ வழிபாடும் சிவனுடன் தொடர்புடைய புராணக் கதைகளும் மக்களிடம் நிலைபெற்றிருந்தமை தெளிவாகின்றது.

இலிங்க வழிபாடு பூர்வீகத் திராவிடருடன் பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. தொல்காப்பியர் (புறத்திணையியல்- 27) இலிங்கத்தைக் கந்தழி வழிபாடு கடவுள் வாழ்த்தொடு அமையும் எனக் குறிப்பிடுவர். பஞ்ச பூதங்களின் எல்லையற்ற ஆற்றலைக் கண்டறிந்த மக்கள் (புறம்-30) அவற்றைப் பரம்பொருளான சிவனே படைத்தார் என்று நம்பினர். சிவனுக்குக் கோயில்கள் அமைத்து வழிபாடும் விழாக்களும் நடத்தினர். அவ்விழாக்களில் வெறியாட்டம் கொடுகொட்டியாட்டம், கோலாட்டம், காவடி என்பனவும் இடம்பெற்றன. கோயிற் சடங்குகளில் பூவும் நீரும் பயன்படுத்தினர். அதனால் (பூ - செய்) பூசை என்ற சொல்லாட்சியும் தமிழர் வழிபாட்டுடன் இடம்பெறுவதாயிற்று

சங்க காலத்தில் சிவனும் திருமாலும் வழிபடும் தெய்வங்களாக இருந்த போதிலும் சைவம் - வைஷ்ணவம் என்ற மத நிறுவனங்கள் தோற்றம் பெறவில்லை. சிவன் பற்றிய வருணனைகள் சங்க காலத்தில் ஆரிய நாகரிகக் கலப்பின் ஊடாகத் தமிழர் வாழ்க்கையில் படிப்படியாக ஏற்படத் தொடங்கிவிட்டது என்ற உண்மையைப் புலப்படுத்துகின்றது. பரிபாடலில் ஆரியரது புராணக்கதைகளின் தாக்கத்தைப் பெரிதும் காணலாம். வேத வேள்விகள் அரசர்களது பேராதரவில் நடைபெற்றிருக்கின்றன. பட்டணங்களில் வணங்கப்பட்ட நான்கு தெய்வங்களிலும் சிவன் முதன்மை பெறுகின்றான்" என்கிறார் அ.தட்சிணாமூர்த்தி (2011:197). நகர்ப்புறத்து மேல்நிலை மக்களிடமும் அரச சார்பான மேல்நிலைச் சமூகத்திடமுமே சிவ வழிபாடும் ஆரிய மந்திர வேள்விகளும் முதன்மை பெற்றிருந்தன என்ற கருத்துநிலைக்கு வருதல் பொருத்தமாகிறது.




**The Mortgage Centre**

We work for you, not the lenders.

- FREE mortgage consultation *
- Manage your debts and lower your monthly payments *
- How to improve your credit FREE mortgage consultation *
- First time home buyer – Special down payment programs *
- Affordable payments on a $300,000.00 property *
- Let me shop for you with just one credit check *

**Tel: 416.726.0822**

Email: mortgage@prabunanthee.com

Web: www.prabunanthee.com

**Unity Financial Mortgage Services Inc. Lic.10457**

An independent member of the Mortgage Centre Network

*Subject to change without notice

# நாயேன் - தமிழ்ப் பக்தி இலக்கியத்தில் நாயும் பக்தனும்

மைதிலி தயாநிதி

இந்து சமயத்தில் விலங்குகள் தொடர்பாகப் பொதுவாக இருவிதமான கருத்துகள் நிலவுகின்றன. சில விலங்குகள் கடவுளருக்கு மிக நெருக்கமானவையாக, பெரும்பாலும் அவர்களின் வாகனமாகக் கூறப்பட்டுள்ளன. சிவனுக்கு வாகனமாக எருதையும், விநாயகருக்கு எலியையும், முருகனுக்கு மயிலையும், துர்க்கைக்கு சிங்கத்தையும், வைரவர்க்கு நாயினையும் குறிப்பிடுவது வழக்கம். அதே வேளை, சில விலங்குகள் தெய்வத்தன்மை மிக்கனவாகக் கருதப்பட்டு கடவுளர் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளன. பசு கோமாதாவாகவும், குரங்கு அநுமானாகவும், பாம்பு நாகராஜனாகவும் வழிபடப்படுவதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இன்னொரு புறம், மானிடரைப் போன்று, விலங்குகளும் இறைவனிடத்தில் பக்தி பூண்டனவாக சித்திரிக்கப் படுகின்றன. பெரியபுராணத்தில் இடம் பெறும் கதையொன்றில் சிலந்தியும், யானையும் சிவலிங்கத்தைப் பூசித்து வந்தமையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். மேலும், மானிட அடியவர்கள் விலங்குடன் ஒப்பிட்டுத் தம்மைத் தாழ்த்திப் பேசுவதும் வழக்கம். ஆனால், அவர்கள் தம்மைச் சிலந்தி என்றோ யானை என்றோ குறிப்பிடாது, நாயுடனேயே ஒப்பிட்டுப் பேசுகின்றனர். தமிழ்ப் பக்தி இலக்கியங்களான தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப்பிரபந்தம் என்பனவற்றில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம்மைநாயேன் என்றே சுட்டுகின்றனர். தமிழிலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கிய காலத்திற்கு முன்னர் நாய் எவ்வாறு கருதப்பட்டது என்பதையும் நாயன்மார்கள் நாயேன் என்ற பதத்தினை ஏன் தம்மைக் குறிக்கத் தேர்ந்தெடுத்தனர் என்பதையும் இக்கட்டுரை சுருக்கமாக ஆராய்கிறது.

இக் கட்டுரை நான் மேற்கொண்டுவரும் ஆய்வின் மிகச் சில பரிமாணங்களை மட்டும் பிரதிபலிக்கிறது. சமூகவியற் செய்திகளின் பின்புலத்தில் வைத்து, சங்க இலக்கியங்கள், சங்க மருவிய கால இலக்கியங்கள், தேவாரம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் நூல்களில் நாய் பற்றிய குறிப்புகள், நாயை உவமானத்திற்குப் பயன்படுத்துவது, நாயேன் என்று நாயன்மார் தம்மைச் சுட்டுவது யாவும் எதேச்சையானவை அல்ல என்பதே இந்தக் கட்டுரையின் அடிநாதமாகும். அவ்வக் கால சமூக வரலாற்றுப் பின்னணி மூலமே இவற்றை விளங்கிக் கொள்ளமுடியும்.

பக்தி இலக்கியங்களில் நாயேன் என்ற சொற்பயன்பாடு சமூகத்தில் கீழ்ப்பட்ட அல்லது சமூக வரம்பு நெறிகளுக்கு அப்பாற்பட்ட மக்கள் அனைவரையும் ஈர்த்து உள்ளடக்கும் வல்லமை பொருந்தியதும், ஜைன, பௌத்த மதங்களின் அற நெறிக் கொள்கைகட்கு எதிராக சிவபக்தியை முன்னிறுத்தியதுமான பக்திக் கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்தது என்பதே இக்கட்டுரையின் வாதம். சங்க காலத்தில் வாழ்வாதாரத்திற்கு உதவியாக இருந்த நாய் எவ்வாறு சங்கமருவிய காலத்தில் விலங்குகளிற் கடையான மிருகமாகக் கருதப்பட்டு, கொல்லாமைத் தத்துவத்தினின்று வழுவியோர்களுடன் தொடர்புடையதாக நோக்கப்பட்டது என்பதும், அதற்குரிய காரணங்களும் சுருக்கமாக முதலில் ஆராயப்படுகின்றன. இக்காலத்திற்குப் பின்னர் எழுந்த தேவாரங்களில் மூன்று விதமான விடயங்களை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (அ) நாய் சிவனுடன் இணைக்கப்பட்டமை (ஆ) நாயன்மார்கள் நிலமற்ற விவசாய அடிமையாகத் தம்மைப் பாவனை செய்து, அந்நிலையைக் குறிக்கும் பதங்களைப் பயன்படுத்தியுள்ளமை (இ) சிவனாகிய எசமானிடத்திருக்கும் அன்பினதும், விசுவாசத்தினதும் தீவிரத்தைப் புலப்படுத்தும் வகையில் அவர்கள் தம்மை நாய், நாயேன் என்று குறிப்பிட்டுள்ளமை. இது தர்மத்தைப் பின்பற்றல் மூலமே கடை நிலையிலிருக்கும் ஒருவர் உயர்நிலை எய்த முடியும் என்ற ஜைன, பௌத்தமதங்களின் நிலைக்கு சவால் விடுவதாக அமைந்துள்ளது.

நாய் என்ற சொல் ஏன் என்ற தன்மைப் பெயர் விகுதி பெற்று நாயேன் ஆனது. இப் பதம் பக்தி

இலக்கியங்களில் அடிநாயேன் என்று வருவதுமுண்டு. அடிநாய் என்பதனை சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி "பெரியோர் முன் தன்னைத் தாழ்த்திக் கூறுஞ்சொல்" என்று வரையறுக்கிறது. அடிநாய் என்ற சொற்றொடர் விலங்குகளில் கடையானதாக நாய் கருதப்பட்டது என்பதற்குச் சான்றாகின்றது பெரியோர் - சிறியோர் உயர்ந்தோர்-தாழ்ந்தோர் என்ற பாகுபாடு, அதிகாரம், செல்வாக்கு மிக்கவர்களினால் சமூகத்தில் சிருஷ்டிக்கப்படும் செயற்கைப் பிரிவினையாகும், எந்தக் காரணிகளின் அடிப்படையில் இப் பாகுபாடு நிகழ்கிறது என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். அதேவேளை விலங்குகளில் கடையானதாக நாய் ஏன் கருதப்பட்டது என்பதும், சமூகத்தில் கடைப்பட்ட நிலையில் உள்ளவர்களின் குறியீடாக அது எவ்வாறானது என்பதும் ஆலோசிக்கப்பட வேண்டியவை. மேலும், சங்க இலக்கியத்தில் நாயேன் என்ற பதம் காணப்படாமையின் முக்கியத்துவம் என்ன என்பது குறித்தும் நோக்க வேண்டியுள்ளது.

சங்க காலம் (ஏறத்தாழ கி.பி 1-3 நூற்றாண்டுகள்), சங்க மருவிய காலம் (ஏறத்தாழ கி.பி 4-6 நூற்றாண்டுகள்), பக்தி இலக்கிய காலம் அல்லது பல்லவர் காலம் (ஏறத்தாழ கி.பி 7-9 நூற்றாண்டுகள்) என்ற மூன்று காலப்பகுதிகளிலும், நாய் தொடர்பாக எத்தகைய கருத்துகள் நிலவின என்பது பற்றியும், அக்கால சமூக, பொருளாதார நிலைமைகள் எவ்வாறு நாய் பற்றிய கருத்துகளைப் பாதித்தன என்பது பற்றியும், பக்தி இலக்கிய காலத்தில் நாய் சமூகத்தில் கீழோர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதே வேளை, ஜைன, பௌத்த மதங்களிற்கு எதிர்ப்புக் குறியீடாகவும் எவ்வாறு விளங்குகிறது என்பது பற்றியும் சுருக்கமாக நோக்குவோம்.

மேலும், மேற்குறிப்பிட்ட காலவரன்முறை தமிழிலக்கிய வரலாற்றறிஞர் செல்வநாயகம் அவர்கள் வகுத்த கால வரன்முறையைப் பின்பற்றியதாகும். இதை மிக இறுக்கமான கால வரன்முறையாக நான் கருதவில்லை. உதாரணமாக, சங்க மருவிய காலத்திற்குரியதாக நாம் கருதும் பண்புகளைச் சங்க காலத்திற்குரிய நூலான புறநானூற்றில் உள்ள சில பாடல்கள் பிரதிபலிக்கின்றன. அதே போன்று, பக்தி இலக்கிய காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் அப்பர் சம்பந்தர் தேவாரங்களுடன் தொடங்குகிறது என்று கொள்ளமுடியாது. கி.பி. ஆறாம் நூற்றாண்டிலேயே காரைக்கால் அம்மையார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார் என்பவர்கள் பக்திநூல்களை இயற்றியுள்ளனர். எனினும், வரலாற்றுரீதியாக சில விஷயங்களைச் சொல்ல முற்படும்போது மேற்கூறிய காலப் பகுப்பு உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சங்க காலம்

சங்க இலக்கிய நூல்கள் என்று கூறப்படுபவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இவை நில வேறுபாடுகளுக்கேற்ப வெவ்வேறு தொழின்முறைமை பொருந்திய சமூகக் குழுக்கள் அக்காலத்தில் நிலவின என்பதைக் காட்டுகின்றன. சங்க இலக்கியங்களில் ஞமலி என்றும் அழைக்கப்படும் நாய், மலையும் மலை சார்ந்த பகுதியான குறிஞ்சி, வெம்மையால் தகிப்புறும் பாலை நிலம் எனும் இருவகை நிலங்களில் மட்டும் காணப்படும் ஒரு விலங்காகும். குறிஞ்சிப் பாக்களில் வேட்டையாடலில் ஈடுபடும் குறவர்களுடனும், பாலை நிலத்திற்குரிய கவிதைகளில் வழிப்பறிக் கொள்ளை செய்யும் வடுகர், மறவர் என்போருடனும் நாய்கள் திரியும். சினம், வேகம், வலிமை, அச்சமூட்டுதல் என்பன நாயின் இயல்புகள். உக்கிரத்தில் அது புலிக்கு ஒப்பானது. இளமை மிக்க, ஆண்மை பொருந்திய முருகனை நிகர்த்த தனது எசமானனை நாய் பின்தொடர்வதாகக் குறிஞ்சிப் பாடல் ஒன்று கூறும். வயநாய் என்ற தொடர் பலமிக்க நாயைக் குறிக்கும் அதே வேளையில், வயவர் என்பது வலிமை மிகு வீரரைச் சுட்டும். சங்க இலக்கிய நூல்களை ஆராயும்போது குறிஞ்சி, பாலை நிலங்களில் சுதந்திரமாக இயங்கும் குடிகளின் வாழ்வாதாரத்திற்கு உதவும் ஒரு பிராணியாகவே நாய் விளங்கக் காண்கிறோம். அத்துடன், வலிமை, சினம், உக்கிரம் என்பன நாய்க்கும், தலைவனுக்கும் பொதுவான இயல்புகளாகக் காணப்படுகின்றன.

சங்கமருவிய காலம்:

இக்காலத்தைச் சேர்ந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை எனும் காவியங்களிலும் நாயினைப் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. சங்க காலத்தில் நாயைப் பற்றிய பார்வையிலிருந்து இவை பெரிதும் வேறுபடுகின்றன.

நாய் விலங்குகளில் கடைநிலைப்பட்டது என்ற கருத்தினையும், சமூகத்தின் கீழ் நிலையில் உள்ள அல்லது, சமூக விளிம்புத் தளத்திலுள்ள மக்களினை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்ற கருத்தினையும் இந்நூல்கள் பொதுவாகப் பிரதிபலிக்கின்றன. இதற்குரிய முக்கிய காரணங்கள் எனப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

முதலாவது காரணம், மலையிலும், பாலையிலும் வாழும் குடிகளுக்கும் சமநிலத்தில் வாழும் மருத நிலக் குடிகளுக்கும் இடையே நீறு பூத்த நெருப்பாக விளங்கிய பகைமை. இவ்விரு பிரிவினர்க்குமிடையே பகைமை நிலவிற்று என்பதைப் புறநானூறு (28), சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரி, கலித்தொகைப் பாலைப் பாடல்கள் முதலியன உணர்த்தும். மருத நிலம் ஏனைய நிலங்களில் அரசியல், பொருளாதார ரீதியாக அதிகாரம் செலுத்தத் தொடங்கியதன் விளைவாக, மருதநிலத்தோர் தமது நிலங்களின் எல்லைப்புறத்தில் வசிக்கும் மலைவாழ் மக்கள், அத்துடன் நெய்தல், முல்லை நில மக்களையும் தமது பண்பாட்டு ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தனர்.[1] இவ்வாறு ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்ட குறிஞ்சி மக்களின் சமூக அந்தஸ்து, வெற்றி கொண்ட மருத நிலக் குடிகளுக்குக் கீழ்ப்பட்டதாகவே கருதப்பட்டது. இதனால் குறிஞ்சிச் சமூகத்தின் ஜீவாதாரத்திற்கு உறுதுணையாக இருந்த நாயின் நிலையும் தாழ்ந்து செல்ல நேரிட்டது.

இரண்டாவது காரணம், அஹிம்ஸா பரமோ தர்ம என்று போதிக்கும் ஜைன, பௌத்த மதங்கள் இக்காலப் பகுதியில் செல்வாக்குற்றமை ஆகும். இக்கால கட்டத்தில் தென் தமிழகத்தில் ஆட்சியை நிலை நிறுத்திக் கொண்ட களப்பிரர்களும், எழுச்சியுற்ற வணிக சமூகத்தினரும் ஜைன, பௌத்த மதங்களின் ஆதரவாளர்களாகத் திகழ்ந்தனர். இக்காலத்தில் எழுந்த அறநூல்களில் இடம் பெற்றுள்ள நாயைப் பற்றிய குறிப்புகளை நோக்கும்பொழுது, சமூகத்தில் மேலோர்-கீழோர் என்ற இரு பிரிவினர்களில் நாய் கீழோரைப் பிரதிநிதித்துவப்படுத்தக் காண்கிறோம். கீழோர் என்பவர்களை அறநூல்கள் விதந்து கூறும் நற்பண்புகள் இல்லாதவர் என்றும், பிரதானமாக, கொல்லாமை தர்மத்தைக் கடைப்பிடிக்காதவர் என்றும் எண்ணக் கிடக்கின்றது. எடுத்துக்காட்டாக, நாலடியாரிலே குணுங்கர் என்பவர்களுடன் நாய் தொடர்புபடுத்தப்படுவதுடன் மட்டுமன்றி, நாயின் ஊன் உண்ணும் பண்பும் அங்கு அழுத்தமாகக் கூறப்படுகிறது.[2] குணுங்கர் என்ற சொல் புலையர்கள், தோல் வாத்தியங்களைக் கையாளுபவர்கள் என்போரைக் குறிக்கிறது. எனவே அவைதிக மதங்கள், முக்கியமாக ஜைனமதம் வலியுறுத்தும் கொல்லாமை தத்துவம் காரணமாக, குணுங்கர்கள் கீழானவர்களாகக் கருதப்பட்டனர்.[3] அத்துடன் அவர்கள் வளர்க்கும் நாய்களும் கீழானவைகளாகக் கருதப்பட்டன.

மேலும், எவரும் அற ஒழுக்கங்களைப் பின்பற்றி மேம்பாடு அடையலாம் என்ற கருத்து அறநூல்களில் காணப்பட்டபோதும், இவை வலியுறுத்தும் இன்னொரு கருத்து குடிக்கும், நற்குணத்துக்கும் இடையிலுள்ள நெருங்கிய தொடர்பு. இக் கோட்பாட்டின்படி, ஒருவரின் குணங்கள் அவருக்கு இயல்பாய் அமைந்தவை. அவற்றை மாற்ற இயலாது. உயர் குடியிற் பிறந்தவர்களிடத்து நல்லியல்புகளும், கீழ்க் குடியிடத்துப் பிறந்தவரிடத்து தீய குணங்களும் இயல்பாகவே உள்ளன என்பதாகும். இத்தகைய கருத்துகள் ஜைன, பௌத்த மதங்கள் பிற்காலத்தில் சாதி வேற்றுமைகள் ஊன்றுவதற்கு மறைமுகமாக உதவினவோ என்ற ஐயத்தினை எழுப்புகின்றன. இது மேலும் ஆய்வு செய்தற்குரிய விடயமாகும். இத்தகைய கருத்துகள் நிலை தளும்பிக் கொண்டிருக்கும் சமூக நிலைமைகளில் தங்களின் நிகழ்கால இருப்பினைத் தக்க வைக்க முயலும் செல்வாக்கு மிக்கவர்களுக்குச் சாதகமாக அமைந்தன என்பதை மறுக்கவியலாது. அதே வேளை, இவை கடைநிலைப்பட்ட மிருகமாகக் கருதப்பட்ட நாயின் இயல்பு மாற்றவியலாதது என்ற நிலைப்பாட்டிற்கும் இட்டுச் செல்கிறது. எடுத்துக் காட்டாக, "பொற்கலத்தில் உணவு அளிப்பினும், நாய் அதன் பெருமை உணராது. பிறர் உண்பதையே பார்த்திருக்கும் என்று நாலடியார் பாடல் ஒன்று கூறுகிறது. இது கடைநிலைச் சமூகக் குழுக்களுக்கு இயல்பான சில குணங்கள் உண்டு. அவற்றை மாற்றவியலாது என்ற கருத்தை எடுத்துரைக்கிறது.

மூன்றாவதாக, பிராமணர்களின் தூய்மை/தீட்டுக் கோட்பாடும் நாயின் நிலை தாழக் காரணமாயிற்று. சங்ககாலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சிறு தொகையினரான பிராமணர்களின் செல்வாக்கு சங்க

மருவிய காலத்தில் அதிகரித்ததை பரிபாடல், திருமுருகாற்றுப்படை, வடமொழி தர்மசாஸ்திரங்களைப் பின்பற்றி எழுந்த ஆசாரக் கோவை முதலிய நூல்கள் மூலமாக அறியலாம். பிராமணர்களின் இல்லங்களில் கிடைக்கக் கூடிய உணவு வகைகளில் மாமிசம் குறிப்பிடப்படாமை கவனிக்கத்தக்கது (பெரும்பாணாற்றுப்படை 304-310). சைவ உணவு உண்போராக விளங்கிய பிராமணர் கோழி, நாய் போன்ற மிருகங்களை வீட்டில் வளர்ப்பதைத் தவிர்த்தனர். அத்துடன் நாய் சமூகத்தில் மிக இழிந்த சாதியரான புலையர்களுடன் ஆசாரக் கோவையில் தொடர்புறுத்தப்படுகின்றது.

இவ்வாறு நாய், மருத நிலச் சமூகத்தில் படிப்படியாக உள்வாங்கப்பட்டு நிலை தாழ்ந்த குறிஞ்சி, பாலை நிலவாசிகளுடனும், அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றாதோருடனும் தொடர்புபடுத்தப்படலாலும், பிராமணிய கண்ணோட்டத்தின்படி அசுத்தமான பிராணியாகக் கருதப்படலாலும் சங்க மருவிய காலப்பகுதியில் அதன் நிலை இழிவடைந்தது எனலாம்.

நானறிந்தவரையில், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திணை மாலை நூற்றைம்பது எனும் நூலிற்றான் 'அடி நாயேன்' என்ற தொடர் முதன் முதலில் இடம் பெறுகிறது. இங்கு விறலி தன்னை இழிவான நாயைப் போன்றவள் என்ற பொருளில் அடி நாயேன் என்று குறிப்பிடுகின்றாள். ஆடல், பாடல், வாத்தியம் வாசித்தல் எனும் கலைகளில் சிறந்தவள் விறலி. காலப்போக்கில் அவள் பரத்தையரைத் தலைவனுடன் கூட்டிக் கொடுக்கும் வேலையை மேற்கொள்பவளாகவும், தலைவனுக்கும், தலைவிக்கும் இடையே ஊடல் நீக்க தூது செல்பவளாகவும் மாறினாள்.[4] பரம்பரை பரம்பரையாக இத்தகைய தொழில்களில் விறலியர் ஈடுபடலாயினர் எனக் கருதவும் இடமுண்டு. மருத நிலக் கிழார்கள், வணிகர்கள் என்பவர்களிடம் ஜீவனோபாயத்திற்கு தங்கியிருந்த விறலியர், பரத்தையர் என்போர் அறவியல் நூல்களில் கண்டிக்கப்பட்டனர். ஒழுக்க நெறியினைப் பின்பற்றாததால், கற்பு நெறியில் நிற்கும் தலைவியிலும் பார்க்க சமூக மதிப்பில் தாழ்ந்த தன்னிலையை அவளே ஒப்புக் கொள்ளும் விதத்தில் அவள் தன்னை அடி நாயேன் என்று குறிப்பிடுகின்றதாகப் புலவர் பாடுகின்றார். ஆனால் பக்தி நெறி கற்புடை இல்லக் கிழத்தியரை மட்டுமன்றி, ஆடற் பெண்டிரையும் அணைத்துக் கொண்டது. "பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினைப் பேணாத" சிவ தொண்டர் குழாத்தில் அவர்களை உள்வாங்கிக் கொண்டது. ஜைன, பௌத்த அற ஒழுக்கத்தினை மறுதலிக்கும் பக்தி இலக்கிய காலத்தில் நாயேன், அடி நாயேன் என்ற தொடர்கள் ஜைன பௌத்த எதிர்ப்புக் குறியீடுகளாக தேவார முதலிகளினால் பயன்படுத்தப்பட்டுள்ளமையை இனி நோக்குவாம்.

பல்லவர் காலம்:

இக்காலத்தில் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த நிலவுடைமை வர்க்கத்தினரான வேளாளர், வணிக சமூகத்தினரிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்ற பிராமணருடன் சேர்ந்து முயன்றனர்.[5] வேளாள-பிராமணக் கூட்டணி முன்வைத்த பக்தி எனும் கோட்பாடு அகிம்சா நெறியினை முதன்மைப்படுத்தும் ஜைன, பௌத்த மதங்களுக்கு எதிரானதாக இருந்தது. "தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலம் கொடுக்கும் நம்பி" (அப்பர் தேவாரம் 6.20.6) ஆகிய சிவனை வழிபடுவோர் தமராகவும், உயர்ந்தோராகவும், ஏனையோர் பிறராகவும் கீழோராகவும் கருதப்பட்டனர். மேலும் பக்திநெறி வருணம், சாதி வரையறைகளுக்குள் தன்னைக் குறுக்காது அனைத்து மாந்தரையும் ஒன்றிணைத்தது. ஆவுரித்துத் தின்றுழலும் புலையரும் சிவனுக்கு அன்பர் எனில் அவர்களை அரவணைத்துக் கொண்டது. பிராமணிய தூய்மைக் கொள்கைப் பிரகாரமும், ஜைன, பௌத்த மதங்களின் கொல்லாமைத் தத்துவம் காரணமாகவும் இழிநிலைப்பட்ட நாய் பக்திக் கோட்பாட்டில் உயர்நிலை உற்றது. இது சங்க இலக்கியத்தில் நாயினைத் தலைவனுடன் தொடர்புபடுத்தல் போன்று, சிவனுடன் தொடர்புபடுத்தல் மூலம் சாத்தியமானது.

பல்லவர் காலத்தில் தென்னிந்தியாவில் வளர்ச்சியுற்ற இரு சிவமூர்த்தங்கள் ஆலயங்களிலும், தேவாரங்களிலும் சித்திரிக்கப்பட்டுப் பெரும் முக்கியத்துவம் அடைந்தன: ஒன்று நடராஜ மூர்த்தம். மற்றது பிக்ஷாடன மூர்த்தம்.[6] பிக்ஷாடன மூர்த்தத்தின் வலப்புறத்தில் காணப்படுவது நாயாகும். மைலாப்பூர் காபாலீஸ்வரர் கோயிற் திருவிழாவில் பிக்ஷாடனர்

உற்சவமூர்த்தியாக நான்கு வேதங்களாகக் கருதப்படும் நான்கு நாய்கள் சூழ வருவர். பிக்ஷாடன மூர்த்தம் பற்றிய குறிப்புகளுக்கு எடுத்துக்காட்டாக சம்பந்தரின் 1.40, 2:2 பதிகங்களையும், அப்பரின் 6.9 பதிகத்தினையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

நாய் சிவனுடன் அநாதியாகவே தொடர்புடையது என வலியுறுத்தும் இதிகாச புராணக் கதைக்குறிப்புகள் தேவாரங்களில் இடம்பெற்றுள்ளன. ஒரு குறிப்பு சிவனின் பிக்ஷாடன மூர்த்தத்துடன் தொடர்புடையது (7.43.7). மற்றது, பாசுபத அஸ்திரம் பெற தவம் புரிந்த அர்ச்சுனனைச் சோதிப்பதற்கு சிவன் வேடனாய் வந்த இதிகாசக் கதையுடன் தொடர்புடையது (1:75:10). சமூகத்தில் இழிந்த நிலையில் இருப்பவர்களாகக் கருதப்படும் பிச்சை ஏற்போர், வேடர் என்பவர்களுடன், நாயினையும் சிவனையும் சம்பந்தப்படுத்துவதன் மூலம், தேவாரத்தில் காணப்படும் பக்திக் கோட்பாடு ஜைன, பௌத்த மதங்கள் இயம்பும் அற ஒழுக்கங்கள் மூலமாக நிர்ணயிக்கப்படும் சமூக உயர்வு/தாழ்வு வேறு பாடுகளைப் புறக்கணிக்கின்றது.

அதே சமயம் காடழித்து விவசாயம் ஊக்குவித்த பல்லவர் காலத்தில் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக ஏற்றத் தாழ்வுகள் பிறந்தன. காவிரியின் இருகரையும் எழுந்த வயல்களில் கொத்தடிமைத் தொழில் புரிந்தவர்கள் சமூகத்தின் அடிமட்டத்தில் வைக்கப்பட்டனர். காவிரியின் இருமருங்கும் உள்ள ஊர்களில் எழுந்தருளியிருக்கும் சிவனை அவ்வூர் நில உடைமையாளன் எனவும், சிவ பக்தர்களை அவருக்குத் தொண்டாற்றும் அடிமைகளாகவும் தேவாரங்கள் சித்திரிக்கின்றன. எனவே, நாயன்மார் தம்மை நாயேன் என்று கூறும் பொழுது, குறிப்பிட்ட தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனை உடைமையாளனாகவும், தம்மை அவர் அடிமையாகவும் கருதியே அத்தொடரை உபயோகிக்கின்றனர். பல்லவர் காலத்தில், அகிம்சைக் கோட்பாடு முதலான காரணங்களினால் இழிவாகக் கருதப்பட்ட நாய், பக்தி மார்க்கத்தில் இறைவனுக்கு உகந்ததாகின்றது. பிக்ஷாடனராக சிவன் நாயுடன் திரியும் அதே வேளை, அவரது பக்தர்களும் நாயேன் என்ற சொற்பிரயோகம் மூலமாகத் தம்மை நாயுடன் அடையாளப்படுத்துகின்றனர். சமூகத்தின் அடிநிலையில் இருப்பினும், பக்தி மூலம் சிவன் எனும் ஆண்டானுடன் தொடர்புற்று மேன்மையுற முடியும் என்பதையே இது காட்டி நிற்கின்றது. ஜைன, பௌத்த ஒழுக்க விழுமியங்கள் இத்தகைய பக்திக் கோட்பாட்டின் முன்னர் அடிபட்டுப் போய்விடுகின்றன. எனவே, நாய் (நாயேன்) என்பது ஜைன, பௌத்த மதங்களுக்கு எதிரானதோர் குறியீடாகவும் விளங்கக் காண்கிறோம்.

பொதுவாக, தேவாரங்களில் இடம் பெறும் நாயேன் என்ற பதத்தினை, பக்தனின் நாயைப் போன்ற கீழான தன்மை, பணிவு, நன்றியுள்ள பண்பு என்பவற்றினை மாத்திரம் குறிப்பதாகக் கொள்வது வழக்கம். ஆனால் இது ஒரு கருத்தாக்கத்தை (concept) அது வழங்கிய வரலாற்றுக் காலத்தின் பின்னணியில் வைத்து நோக்காது, பொருள் கொள்ளும் முறையாகும். பக்தி இலக்கியங்களில் நாயேன் என்ற சொற்பயன்பாட்டினை விளங்கிக் கொள்ள விரும்பின், நாய் பற்றிய அதற்கு முந்தைய காலக் கண்ணோட்டங்களைப் புரிந்து கொள்ளல் அவசியம். நாய் எப்பொழுதும் கீழான மிருகமாகக் கருதப்படவில்லை. சமூக பொருளாதார சூழலுக்கேற்ப அதன் அந்தஸ்து வேறுபட்டுக் கொண்டிருந்தது என்பது மனம் கொள்ளத் தக்கது.

## அடிக் குறிப்புகள்

1 Burton Stein, *Peasant State and Society in Medieval India* (Delhi: Oxford University Press, 1980),74-77.

2 மணிமேகலை காவியத்தில் (6:110) நாய் இடுகாட்டில் பிணம் உண்பதாகக் கூறப்படுகிறது.

3 Sudalaimuthu Palaniappan, "On the unintended influence of Jainism on the development of caste in post-classical Tamil society", International Journal of Jaina Studies, Vol. 4, No. 2 (2008), 1-65.

4 Saskia C Kersenboom, *Nitya sumangali:Devadasi Tradition in India* (Delhi: Motilal Banarsidass,1987), 18

5 க. கைலாசபதி, "நாடும் நாயன்மாரும்", பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும் (சென்னை:குமரன் பப்லிஷெர்ஸ், 1993 மூன்றாம் பதிப்பு), பக்.71-106.

6 Indira Peterson, *Poems to Siva: The Hymns of the Tamil Saints (* Delhi: Motilal Banarsidass, 1991), p.99.

# Pilgrimage in North India

Dr. Shan A. Shanmugavadivel

**Kasi** also known as Varanasi, Benares or Banaras is regarded as a very holy city by Hindus, Buddhists and Jains. It is one of the historical oldest continuously inhabited cities in the world. The scenes of pilgrims performing their rituals in the river Ganges at sunrise is probably an impressive sight, however some may get turned off by the rubbish in the river banks and the alleys of the old city. It is believed that the people are cleanses



physically and spiritually at the Gang Ghats where people perform ritual ablutions.

Varanasi is the site of holy shrine of Lord Kasi Vishwanath. This temple is one of the famous temples dedicated to the Lord Siva and is one of the Jyotilingas in India. Hindus believe that dying in this city circumvents reincarnation. At Vishwanath temple, security is tight- no bags, cellphones or camera are allowed. The temple was destroyed multiple times by Mughal invaders and was reconstructed by Hindu Kings.

We arrived into Kasi from Delhi by train. The train journey by "Shivganga Express" was very comfortable. Varanasi is well connected by trains and buses. We stayed at Sri Kumarasamy Madam in Sonarpura, Keda r ghat. This comlex belongs to Thirupanandal madam. Most of us took our early morning dip in the holy river which is only a walking distance. We visited Kasi Vishwanath and Vishalakshi temples on the first day. Ghats mean series of steps leading down to the river used by bathers. There are several ghats. In some ghats dead bodies are cremated. King Harischandra did the last rite for his son at Harischandra ghat. Kedareeswar temple that is managed by Thirupanandal Mutt is in Kedal ghat and is very near the Kumarasamy Madam. Ganga Aarthi is performed at the river banks around 7pm. Aarthi is spectacular on Deepavali day. Sivarathri is another great time to be in Varanasi. Over 60,000 people come down to the water's edge daily to take a dip in the sacred waters of Ganges. Boat rides are popular a sunrise and sunset to see the cremations in progress and the evening aarthi from the boat.



We had an opportunity of seeing the Banaras Hindu University. This was built during Indian freedom struggle. It is the largest residential university in Asia. A huge white marble temple called Vishwananth Temple is built by the founder of the university inside the campus.

## Hardwar

Hardwar, also called Haridwar is another important pilgrimage city in Uttarakhand, India. Har or Hari means god and dwar refers to gateway. This city is 199km NE of Delhi. This finds mention in the Vedas and Upanishads. It was then called Mayapuri.

It is also one of the four sites of the Kumbh Mela. The most sacred site, the Har ki Puri is a sacred ghat of river Ganga pool of water, called Brahmakund. It is one of the four sites where drops of elixir of immortality (Amirt) accidentally spilled from the pitched while being carried

by the celestial bird. Kumbh Mela, a huge Hindu festival takes place every 12 years in this city, in 2010 over 50 million people attended this gathering. As we drove into Hardwar from Rishikesh we were just in time to see the evening Ganga Aarthi.

We spent the night at Parkview Hotel in Hardwar. Next day early morning we were at Ha ki Puri for the holy



dip in the river. It is believed to cleanse our sins and dip in the river on Kumbh Mala cleanses the karma for many life times. It was a Sunday morning and there were a large crowd to perform the ritualistic bathing. The water was clear, cool and refreshing. We came back to the hotel for breakfast before our return journey to Delhi. One the way we visited Ramdevji's Ashram.

## Rishikesh

Rishikesh is 25km north of Hardwar. It is located in the foothills of the Himalayas and considered the gateway to the Himalayas. Rishikesh has been the abode of sages and has become the yoga capital of the world. There are several ashrams here. Sivananda Nagar, the home of Sivananda Ashram and Divine Life Society formed by Swami Sivananda is north of Rishikesh.

The sacred river Ganges flows through Rishikesh, the waters are unpolluted. The Ganga Aaati performed at dusk at Triveni Ghat is popular with visitors. Rishikesh is the starting point for visiting Badrinath, Kedarnath, Gangotri and Yamunotri. Vasistha Guha is 21km up from the town by the Ganges. The Ganges leaves the Shivalik mountains in the Himalayas and flows into the plains of north India.

Several temples, ancient as well as new can be found along the banks of the river. Rishikesh has several yoga centers and institutions promoting Vedantic studies. We visited the Sivananda Ashram and a Tamil speaking guide took us over the river walking on a hanging bridge, Ramjhula bridge also known as Shivananda Jhula and went down to the waterfont to wet our feet and wash our face in Ganges. There were several shops, temples bookshops and restaurants. After having lunch in one of the big restaurants some of us purchased items such as Rudraksha mala, crystal lingas etc. We also joined the evening pooja at the temple at Sivananda Ashram. The breathtaking view at Rishikesh and adjoining area need several days to absorb the beauty and tranquility of the land and the holy river that enchants as she flows by the foothills of Himalaya on her journey towards the sea.



## Mathura

After resting a day in Delhi we left early morning on our way to Mathura, a city in Uttar Pradesh approximately 145km south each of Delhi, 50km north of Agra and about 11km from Vrindavan. Mathura is an ancient city with historical reference in the Hindu epic, Ramayana. It is one of the seven most holy places for Hindus in India. Mathura is the birth place of Lord Krishna, born in a prison where his parents were held by tyrant King Kansa.

Mathura is an important place of pilgrimage. Foreign invaders demolished the temple at his birthplace several times. Adjoining the temple one could see the domes of the erected mosque.

# உயிரறிவும் உயரறிவும்

கவிஞர் கந்தவனம்

உயிர், ஆன்மா, பசு என்பன ஒரு பொருட் சொற்கள். உயிர்களை அறிவின் அடிப்படையில் ஆறாக வகுக்கின்றார் தொல்காப்பியனார். அவர் கூறுவது இது:

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நாலறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே.(1)

ஓரறிவு உடம்பினாலே அறிவது. ஈரறிவு உடம்பினாலும் நாவினாலும் அறிவது. மூவறிவு அவற்றுடன் மூக்கினாலும் அறிவது. நாலறிவு அவற்றுடன் கண்ணினாலும் அறிவது.

ஐயறிவு அவற்றுடன் செவியினாலும் அறிவது. ஆறறிவு உடம்பு, நா, மூக்கு, கண், செவி ஆகியவற்றுடன் மனத்தினாலும் அறிவது. இவ்வகை அறிவால் உயிர்கள் ஆறுவகைப் படுகின்றன. தொடர்ந்து இவற்றுக்கான சான்றுகளையும் 7 நூற்பாக்களில்(2) தொல்காப்பியர் தருகின்றார். அவை பின்வருமாறு:

ஓரறிவு உயிர்கள்: புல், மரம், தாமரை முதலிய தாவரங்கள்.

ஈரறிவு உயிர்கள்: நத்தை, சங்கு இனங்கள், முரள், சிப்பி, கிளிஞ்சல் முதலியன.

மூவறிவு உயிர்கள்: சிதல், எறும்பு, அட்டை முதலியன.

நாலறிவு உயிர்கள்: நண்டு, தும்பி முதலியன.

ஐயறிவு உயிர்கள்: விலங்குகள், பறவைகள், பாம்பு, மீன், முதலை, ஆமை முதலியன.

ஆறறிவு உயிர்கள்: மக்கள், தேவர், அசுரர், இயக்கர்.

கிளி, குரங்கு, யானை போன்றவையும் ஆறறிவு உடையன என்று ஒருசாரார் கூறுவர் என்றும் கூறுகின்றார்.

தொல்காப்பியருக்குப் பின் பல இலக்கண நூல்கள் எழுந்துள்ளன. அவற்றுள் மிகவுஞ் சிறந்ததாகப் போற்றப்படுவது நன்னூல். இதனை இயற்றியவர் பவணந்தி முனிவர். பவணந்தியார் அறிவின் அடிப்படையில் உயிர்களை ஐந்தாகவே பிரிக்கின்றார்.

மெய்ந் நா மூக்கு நாட்டம் செவிகளின்
ஒன்று முதலாக் கீழ்க்கொண்டு மேல்
உணர்தலின் ஓரறிவு ஆதியாம் உயிர ஐந்தாகும்.

என்பது அவரது பாடல்.(3) தொல்காப்பியனார் ஐயறிவுடையனவாகச் சொன்னவற்றையும் ஆறு அறிவுடையனவாகச் சொன்னவற்றையும் ஒன்றாக்கிப் பவணந்தியார் ஐயறிவுடை உயிர்களில் அடக்கி விடுகின்றார். அதாவது மக்கள், வானவர், நாகர் முதலியோரும் விலங்கு, பறவை ஆகியனவும் ஐந்தறிவுடைய உயிர்கள் என்பது அவரது ஆய்வு.

நன்னூல் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இயற்றப் பெற்றது. குட்டித் தொல்காப்பியம் என்று அறிஞர் அழைக்கும் இலக்கண விளக்கம் என்னும் நூல் 17ஆம் நூற்றாண்டில் எழுந்தது. அதனை ஆக்கியவர் திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்பவர். அவர் தொல்காப்பியரின் நூற்பாவை அப்படியே எடுத்தாண்டு உயிர்களை அறுவகையாகப் பிரிக்கின்றார்.(4) இது ஒருவகையில் பவணந்தியாரின் ஐவகைப் பிரிவை மறுப்பதாக வுள்ளது.

உயிரின் இயல்புகள்

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி" என்கின்றார் திருமூலநாயனார்.(5)

பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உண்மைகள். இவை மூன்றும் அனாதியானவை. ஆனால் இறைவன்

உயிர்களைப்போல் பாசங்களுக்கு உட்பட்டவன் அல்லன். இறைவன் எல்லாம் அறிபவன். உயிர்களும் அறிவுப் பொருள்தாம் எனினும் அவை தம்மளவில் எதனையும் அறியும் வல்லமை அற்றவை என்பதே சைவ சித்தாந்த தத்துவமாகும். அவை "உணர்த்த உணர்வன." (6) உணர்த்துபவன் இறைவன். இறைவனைத் தவிர எல்லா உயிர்களையும் ஆணவ மலம் பற்றியுள்ளது. இது தண்ணீரை மறைக்கும் பாசி போலவும் கண்பார்வையை மறைக்கும் இருள் போலவும் உயிர்களின் அறிவை மறைக்கின்றது.

எனினும் உயிர்களின் அறிவை ஒரேவிதமாக ஆணவம் மறைத்து நிற்பதில்லை. சிலவற்றின் அறிவை அதிக அளவிலும் சிலவற்றின் அறிவைச் சிறிய அளவிலும் மறைக்கின்றது. உதாரணமாக, கல், மற்றும் உலோகங்கள் போன்ற உயிர்களின் அறிவை முழுமையாகவும் தாவரங்களின் அறிவைக் குறைவாகவும் ஆணவம் மறைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்விதம் ஆணவத்தின் மறைப்பாற்றல் விலங்குகளிலும் பார்க்க மனிதரிடத்தில் மிகக் குறைவாகவே செயற்படுகின்றது. அதனாலேதான் பிற உயிர்களை மனிதரால் அடக்கி ஆள முடிகிறது.

விலங்குகளிலும் மனித அறிவு மேலானது என்பதை மறுப்பதற்கில்லை. பகுத்தறியும் ஆற்றல் மனிதனுக்கு அதிகம் உண்டு. மேலும் பிறப்புகளில் மானிடப் பிறப்பே உயர்வானது என்பதும் உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொன்றாகும்.

மனிதருள்ளும் அறிவுத்திறனில் எல்லோரும் ஒரே தரத்தில் உள்ளவர் அல்லர். அதற்குக் காரணம் அறிவு குறைந்தவரில் ஆணவ மலம் அதிகமாகவும் அறிவு மிகுந்தவரிடம் ஆணவம் குறைவாகவும் செயற்படுவதேயாகும். 'அறியாமை ஆணவம்' என்றுரைக்கின்றது உண்மை விளக்கம் என்னும் நூல்.(7)

ஆணவ மறைப்புக்கு உட்பட்டு நிற்கும் நிலையில் ஆன்மாவை சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் எனச் சைவசித்தாந்தம் மூவகைப்படுத்துகின்றது.

1. சகலர் ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையும் உடையவர்.

2. பிரளயாகலர் ஆணவம் மாயை ஆகிய இரு மலங்களை உடையவர்.

3. விஞ்ஞானகலர் ஆணவம் மட்டும் உள்ளவர்.

உயரறிவு

மும்மலங்களின் சார்பால் உயிர்கள் பல பிறப்புக்களை எடுக்கும். பிறப்பு,

புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்

என்று மணிவாசகப் பெருமான் சிவபுராணத்திலே கூறுவதுபோல பலவகைப்படும். அவை உயிர்களின் வினைப் பயன்களுக்குத் தக்கதாய் அமையும். வினை - கன்மம். வினைகளை அனுபவிப்பதற்கே இறைவன் உயிர்களுக்கு தனு கரண புவன போகங்களைக் கொடுத்தருள்கின்றான்.

வினைகளை ஏன் அனுபவிக்க வேண்டும்? முன்னைய பாவ வினைகளைப் போக்கிப் பக்குவம் பெற்றுப் பந்தபாசங்களைத் துறந்து உயரறிவு பெறுவதற்கு அனுபவம் அவசிய மாகின்றது. உயரறிவாவது மெய்ஞ்ஞானம். மெய்ஞ்ஞானம் - பதிஞானம். பதிஞானம் ஒன்றே முத்தியின்பத்தைக் கூட்டவல்லது.

உயிர்கள் வினைகளை அனுபவிக்கின்றன என்று நாம் பொதுவாகச் சொன்னாலும் அவை எதனையும் செய்வதில்லை; உடல்களே கை, கால், வாய், எருவாய், கருவாய் முதலிய கன்மேந்திரியங்களால் வினைகளைச் செய்கின்றன. சிந்தித்துப் பார்த்தால் உடல்களும் செய்வதில்லை. அவை சடப்பொருள்கள். சடப்பொருள்களால் எதுவும் செய்யமுடியாது. இறைவனே தனது திருவருட் சக்தியைக் கொண்டு எல்லாவற்றையும் செய்விக்கின்றான். இத்திருவருட் சக்தி சிற்சக்தி எனப்படுகின்றது.

வினைகளை அனுபவிக்கச் செய்யும் சிற்சக்திக்கு திரோதான சக்தி என்று பெயர். திரோதானம் என்றால் மறைப்பு என்று பொருள். உலக வாழ்க்கையில் நாட்டம் இருக்கும் வரை பசுவுக்குப் பதியைக் காட்டாது திரோதான சக்தி மறைத்து வைத்திருக்கும்.

# DILANI GUNARAJAH

**Barrister, Solicitor and Notary Public**



**Family Law**
Divorce, Custody, Agreements, Support

**Real Estate**
Residential & Commercial – Purchase, Sale Mortgages)

**Immigration Law**
Refugee Claim, Appeal, Humanitarian & Compassionate applications, sponsorship, Group Sponsorship, Sponsorship appeal, skilled worker

**Business Law**
Purchase, Sale, Incorporation)

**Estate Law**
Continuing Power of Attorney for Property/Personal Care, Wills and Estate Administration

2401 Eglinton Ave E., Suite #210, Toronto, Ontario, M1K 2N8
(Southwest corner of Eglinton & Kennedy)
675 Cochrane Drive, East Tower Suite #600, Markham, Ontario, L3R 0B8

**Tel: 416-755-7777 Fax: 416-288-8633**

**BY APPOINTMENT ONLY** (Markham location)

**E-mail: dilani@bellnet.ca**

வினைகளை அனுபவிக்கையில் உயிர்கள் இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்பும் கொள்ளுதல் இயல்பு. அனுபவ அறிவு பட்டறிவு எனப்படும். பட்டறிவினால் நாளடைவில் இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாக மதிக்கும் மனப்பக்குவமும் உண்டாகும். இது இருவினையொப்பு எனப்படும். இதனால் ஆணவ முனைப்புக் குறைந்து மலபரிபாகம் ஏற்படுகின்றது. மலபரிபாகம் என்றால் மலம் நீங்குதற்குரிய பக்குவத்தை அடைதல் என்று பொருள்

ஆணவ முனைப்புக் குறைய மெய்யறிவு மேலோங்கும். இதனால் இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. இறைவன் ஒருவனே நிலையானவன் என்ற உணர்வு ஓங்கும். இந்நிலையில் திரோதான சக்தி அருட்சக்தியாக மாறி இறை அனுபவங்களை வழங்கத்தொடங்கும். திரோதான சக்தி அருட்சக்தியாக மாறும் நிலைக்கு சக்திநிபாதம் என்று பெயர்.

அருட்சக்தியின் பார்வைக்கு உட்பட்டவர், அதாவது சக்திநிபாத நிலை எய்தியவர் தான் என்ற முனைப்பு இல்லாதவர். தன்னுயிர் தானறப் பெற்றவர். அதனால் எல்லாச் செயல்களையும் இறைவனது செயல்களாகவே கருதுவர். இத்தகைய பரிபக்குவ ஆன்மாக்களை இறைவன் குருவடிவத்தில் எழுந்தருளி ஞானத்தைக் கொடுத்தருள்வான். இதனையே,

அறியாமை உள்நின் றளித்ததே காணும்
குறியாகி நீங்காத கோ

என்றார் திருவருட்பயனில் உமாபதி சிவாச்சாரியார்.(8) இதனால் உள்நின்று அருள்பாலித்த அருட்சக்தியே ஆன்மா காணும்படியாக குருவடிவாகி வரும் என்பதை உணரலாம். அருட் சக்தியும் குருவும் ஒன்று என்று உணரும் ஆன்மா சிவாநுபூதி நிலையை அடைகின்றது.

உயிர் சார்ந்தன் வண்ணமாய் நிற்கும் இயல்புடையது. முன்பு உலகியலைப் பற்றிநின்ற உயிர் பக்குவம பெற்று பற்றுக்களைவிட்டு இப்பொழுது இறைவனையே பற்றுக்கோடாகக் கொண்டுள்ளது. இறைவனைச் சார்ந்து நிற்பதால் இறைவனின் சொருபத்தைத் தானும் அடைந்துவிடுகின்றது. இந்த நிலையே சிவாநுபூதி எனப்படுகின்றது.

சிவாநுபூதியில் ஆன்மா சிவஞானத்தில் திளைத்திருக்கும். இது அறிவானந்த நிலை. சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமே பவமதனை அறமாற்றும் ஞானம். இதுவே உயரறிவு. பிறவியைப் பிறவியால் அறுக்கும் அறிவு.

இந்த உயரறிவு நிலையை மனிதப் பிறவியினாலேயே எட்ட முடியும். அதனாலேயே மானிடராகப் பிறத்தல் அரிது என்றார் ஔவைப் பிராட்டியார். மண்ணுலகப் பிறப்புக்களில் மனிதப் பிறப்பு ஒன்றே உலகத்தைப் படைத்தவனைப்பற்றி - எல்லாம் வல்ல பரம்பொருளைப் பற்றிச் சிந்தித்து அதனையடைய முயல்கின்றது; அவ்வகையில் உயிர்களில் உயர்ந்ததுமாகின்றது.

---

1. தொல்காப்பியம்: பொருளதிகாரம், மரபியல் நூற்பா 27.
2. - மேற்படி - 28-34
3. நன்னூல்: நூற்பா 444.
4. இலக்கண விளக்கம்: நூற்பா 912.
5. திருமந்திரம்: 115
6. சிவஞான போதம்: நூற்பா 3.
7. உண்மை விளக்கம்: நூற்பா 22.
8. திருவருட்பயன்: ஐந்தாம் அதிகாரம் 1.

# அறிவியல் கலந்த அறநெறி வாழ்க்கை

கே.ஜி சிவானந்தசிங்கம்

உலகம் நிலையாமையை அன்றாடம் விளக்கி நிற்கிறது. பொய்யான வாழ்வின் நிஜங்களில் மயங்கி நிற்போருக்கு இவ்வுண்மை புலனாவதில்லை. இன்று அனைத்துத் துறைகளிலும் அறிவியல் உச்சம் எய்திய நிலை. சிந்தனைக் கூறுகளை உள்வாங்கி இயந்திரங்களோடு இன்று விஞ்ஞானத்தின் வேக வளர்ச்சி. எனினும் மனித மனங்களில் அமைதி இல்லை. எங்கும் கொலை, கொள்ளை, ஊழல். தன் வாழ்வைவிட மற்றவர் வீழ்விலேயே அனைவரும் அக்கறை. ஆதலால் வளர்ந்து வரும் அறிவியல் தேய்ந்துவரும் மானுடத்தால் மாண்டு போகிறது. இந்நிலை மாற்ற வழி என்ன? இன்று உலகெங்கும் விஸ்வரூபம் எடுத்திருக்கும் கேள்வி இது. அறிவியலும் மானுடமும் செம்மையற்று உலகம் உய்யும் வழியென்ன? அற எல்லை கட்டுப்பட்டு அவற்றை வளரச்செய்வதே ஒரே வழி. அறிவு ஆற்று நீராய் அனைவர்க்கும் பயன் செய்யின் மானுடம் மாண்புறும். எனவே இளம் தலை முறையை அற நெறிப்படுத்தும் தேவை அவசியமாகின்றது.

புலனொடுக்கத்தால் யோகக்காட்சி பெற்ற நாயன்மார்கள், தவப்பெருமையை உலக வாழ்க்கைக்குப் பயன்படுத்தி தம்மை உயர்த்திக் கொண்ட சித்தர்கள், மூச்சுப் பயிற்சியினால் புலன்களை அடக்கி மனதைக்கட்டுப்படுத்தி உலகவியலில் பற்றற்ற நிலையை பெற்ற யோகிகள், உயிரினங்களில் அன்பு காட்டி எண்ணம், பேச்சு, செயல் என்பவற்றால் மேன்மை பெற்ற சாதுக்கள், அஹிம்சை வழியில் பொதுச்சேவையில் இன்பம் கண்ட காந்தி, வாக்குறுதியைக் காபாற்றிய பீஷ்மர், இன்னல்களால் துவளாமல் வாய்மையில் நிலைத்து நின்ற அரிச்சந்திரன், விண்ணக கங்கையை மண்ணுக்குக்கொண்டு வந்த பகீரதன் போன்ற மகான்கள், இயற்கையின் இரகசியத்தை முற்றும் உணர்ந்து அறிவியல் தகவல் மையம் வேதத்தை வெளிக்கொணர்ந்த ஆதிசங்கரர், தங்களது சிந்தனை வாயிலாக மற்றவர்களைச் சிந்திக்க வைத்து முன்னேற்றிய புத்தன், ஜைனன் ஸ்ரீராமனுஜர், கௌதமர், கணாதரர், கபிலர் போன்ற ஞானிகள், குடத்திலிருந்து தோன்றி கடலைக் குடித்து சாகசம் செய்து விந்திய மலையை வளரவிடாமல் தடுத்த அகத்தியர், மறையின் சாரத்தை அறிமுகம் செய்து வைத்து, ஸ்ரீராமருக்கு திருமணம் செய்வித்து மகிழ்ந்த விசுவாமித்திரர், தவத்தால் ஆன்ம பலத்தைப் பெருக்கிக்கொண்ட துர்வாசர், வேதத்தை வகுத்து, புராணங்களை அறிமுகம் செய்து, அத்தனை மதங்களுக்கும் ஆதாரமான நூலை இயற்றி சந்திர வம்சத்தைச் செழிக்க வைத்த வியாசர் போன்ற முனிவர்களும், மந்திரங்களை அறிந்து வெளிக்கொணர்ந்தவரும், ஆயுளை வேதம் கற்க பயன்படுத்தியவரும் - விண்ணிலிருக்கும் வேத ஒலிகளை மக்களுக்கு வழங்கிய பரத்வாஜர் போன்ற ரிஷிகள் பலர் வாய்த்ததும், இவர்கள் இது அறம் - இது மறமென வாழ்வை வகுத்துத் தந்தும் வகுத்தவற்றை நூல்களாய் என்றும் நிலைக்கும் வண்ணம் இயம்பிய அறநூல்கள் இன்றுவரை எம்மைவழி நடத்துவதும் நாம் செய்த பாக்கியமும் தவமுமாகும். தூய வாழ்வு பெற்று பிறரையும் தூய்மைப்படுத்தி நல்வழி காட்டிய தனிப்பிறவிகள்.

சமயங்களும் அறநெறிகளும் அன்பின் வடிவில் இறைவன் இருக்கின்றான் எனச் செப்புகின்றன. வாழ்வோடு இணைந்த ஒரு நல்ல நெறிமுறை தான் சமயம். இதில் அன்பு நெறி அறிவு நெறியாக வாழ்க்கைத் தத்துவத்துடன் இசையும்பொழுது பொய்யை வாய்மையால் வெல்ல வேண்டும் என்கிறது திருக்குறள். பகையை நட்பால் வெல்ல வேண்டும் என்கிறது உபநிடதம். விபீஷணன் ராவணனின் தம்பி. ராமன் அவனை தன்னிச்சையாக மட்டும் நண்பனாக ஏற்கவிலை சிரஞ்சீவியாக்கினார். ராவணனை அழிக்க விரும்பவிலை. ராமன் அவனது பகையை எதிர்த்தார். சமாதானமாகப் போக முதலில் அனுமானை அனுப்பினார். அதுவும் தோல்வியைத் தழுவியது. கடைசியில் யுத்தகளத்தில் அவனோடு நேரடிப்பேச்சு வார்த்தையில் இறங்கினார். சீதையை ஒப்படைத்து விடு; மன்னிக்கின்றேன் என்றார் ராமன். அது மட்டுமல்ல. "உனக்கு சிந்திக்க அவகாசம் அளிகின்றேன். இன்று போய் நாளை வா" என்று கால அவகாசமும் அளித்தார். எல்லோரையும் இழந்து தனிமரமாக நிற்கும் இராவணனை அழிப்பது எளிது. ஒருவரை வஞ்சிப்பது

தவறு என்ற வேதத்தின் அறிவுரை செயல் வடிவில் அங்கு தென்பட்டது. ராவணன் தானாகவே மரணத்தை எதிர்கொண்டான். விட்டில் பூச்சி தானாகவே விளக்கொளியில் விழுந்து மாண்டு விடுகிறது. முருகன் எதிரியின் பூத உடலை அழித்து மயிலாகவும் சேவலாகவும் மாற்றி, தன்னோடு இணைத்துக் கொண்டான் என்று கந்தபுராணம் கூறுகின்றது. நடராஜரின் காலடியில் ஓர் அரக்கனைப் பார்க்கலாம். அந்த அரக்கனை அழிக்காமல் தன் காலடியில் அடைக்கலம் அளித்திருக்கின்றார் என்று ஆகமம் எடுத்துரைக்கின்றது. பாண்டவர்களின் மனத்தில் பகையுணர்ச்சி கிடையாது. கௌரவர்களிடம்தான் பகையுணர்ச்சி தென்பட்டது. ஒருதலைப்பட்சமான பகை. பாண்டவர்கள் தங்களது பங்கை அடைய பேச்சு வார்த்தையைப் பின் பற்றினார்கள் விதுரன், பீஷ்மர் ஆகியோர் தனித்தனியே பேச்சுவார்த்தை நடத்தினார்கள். பலனளிக்கவில்லை. கடைசியில் கண்ணனை அனுப்பினார்கள் அதுவும் தோல்வியைத் தழுவியது. யுத்த களத்தில் அர்ச்சுனன் கௌரவர்களைப் பகைவர்களாகப் பார்க்கவில்லை தன் நண்பர்களாக, தம்பியாக, அண்ணன்களாக, குருவாக, சித்தப்பாவாக, தாத்தாவாக, உறவினர்களாகவே எண்ணினான். அவன் மனதில் எள்ளளவும் பகை இருக்கவிலை போர் என்றால் மரணம் நிச்சயம். அது ஹிம்சை. ஹிம்சிப்பது பாவச்செயல். அதில் ஈடுபட விரும்பவில்லை என்று கண்ணனிடம் சொல்வதைப் பார்க்கவேண்டும். வேதம் அந்தப் பண்பை அவனுக்கு அளித்திருக்கின்றது. பகைவனை அழிக்காதே; முதலில் நல்லுரைகள் வழங்கி நல்வழிப்படுத்த வேண்டும். அதுவும் தோல்வியைத் தழுவினால் எதிர் விளைவுகளை எடுத்துரைத்து சிந்திக்க வைக்க வேண்டும் என்று சாணக்கியனின் சாம தான பேத தண்டம் எனும் அரசியல் நூல் எடுத்துரைக்கின்றது.

தேவர்களும் அசுரர்களும் சகோதரர்கள்தான். காசிப முனிவருக்கு இரு மனைவியர்கள். அதிதிக்குப் பிறந்தவர்கள் தேவர்கள். திதிக்குப் பிறந்தவர்கள் அசுரர்கள். உண்மையில் ஒன்றாக நட்புடன் வாழவேண்டியவர்கள். ஏன் ஒருவருக்கொருவர் பகைவர்கள் ஆனார்கள்? அசுரகளால் தேவர்களைப் போல் வாழ முடியவில்லை. தேவர்களை எல்லோரும் போற்றுகின்றார்கள்; நேசிக்கின்றார்கள். தேவர்கள் மற்றவர்களுக்கு உதவுகின்றார்கள். பிறரை மகிழ்விக்கின்றார்கள். எல்லோரும் வாழவேண்டும் என்கிறார்கள். இந்த நல்ல பண்புகள் அசுரர்களிடம் இல்லை. மற்றவர்களது தகுதியை தன்னால் அடைய முடியாமல் போனால் அவர்கள் மீது பொறாமை ஏற்பட்டு பகையைத் தோற்றுவிக்கும். அப்படியொரு பகை அசுரர்களிடம் வளர்ந்து விட்டது. தங்கள் மகிழ்ச்சிக்காக பிறரைத் துன்புறுத்தும் எண்ணம் அவர்களிடம் குடிகொண்டிருந்தது. அவர்களால் உலகத்தாருக்கும் அவர்களுக்கும் பயனில்லை. இதை அறிந்து கொள்ளும் திறனும் அவர்களிடம் வளரவில்லை. பகையுணர்வு சிந்தனையை மங்கச்செய்துவிட்டது. ஒருதாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நட்போடு வாழாமல் பகையோடு இருப்பதைக் காண்கின்றோம். எத்தனை பாகப்பிரிவினைகளை நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. பொறாமை, தாழ்வு மனப்பான்மை ஆகியன பகையை வலுவாக்கி நிரந்தர எதிரிகளாக மாற்றி விடுகின்றது. பகையை மறந்தால் அசுரர்களும் போற்றப்படுவார்கள். மனிதனாகப் பிறந்தவனுக்கு எத்தனையோ பாக்கியங்கள் உள்ளன. அவற்றில் எல்லாம் மேலான பாக்கியம் மனித சமுதாயத்திற்கு சேவை செய்வதே. உன்னைப்பற்றி புள்ளி விபரம் கணக்கெடுக்கப்படும் போது எத்தனை வீடு கட்டினாய், வாங்கினாய் என்று கணக்கெடுக்கப்படுவதிலை. எவ்வளவு மனித சமுதாயத்திற்குச் செய்தாய் என்பதே ஏட்டுக்கு வரும். இல்லாமை கொடுமையல்ல; இயலாமை குற்றமல்ல விரும்பாமையே பாவமாகும்.

"நேர்பட ஒழுகு. மேன் மக்கள் சொல் கேள். பெரியாரை துணைகொள்" என்று ஆத்திசூடியும்,

"அறிஞர்களுக்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல், வேதியருக்கு அழகு வேதமும் ஒழுக்கமும்" என வெற்றிவேற்கையும்,

"நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு, கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி" என கொன்றை வேந்தனும்,

"நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என மூதுரையும்,

"வஞ்சனைகுணம் இல்லாத நல்லோரிடத்தில் நீரும் நிழலும் நிலம் பொதியும் நெற்கட்டும் பேரும் புகழும் பெருவாழ்வும் ஊரும் திருவும் திருமகள் தருவாள்" என நல்வழியும் எடுத்தியம்புகின்றன.

இன்று மனிதன் வாழ்வோடு இணைந்து இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற உறுதியும், நம்பிக்கையும், மகிழ்வும் வாழ்வில் உருவாக, உருவாக்கப்பட்டவையே அற நூல்கள். இவற்றைப் பின்பற்றி வாழ்வில் அறிவியல் கலந்த அற நெறி வாழ்க்கை வாழ்வோமாக.

உள்ளுவதில் உயர் குறள் அதை ஆத்தவன் – புகழ்
வள்ளுவன் தமிழுக்கு வான் புகழ் சேர்த்தவன்
வல்லவன் துணையென ஒரு வாசுகி பூத்தனள் – துயர்
உள்ளவர் அவையற மறு வாசுகி வாய்த்தனள்

# Vasuki Devadas Law Office

## வாசுகி தேவதாஸ் - Barrister, Solicitor & Notary Public



## For all your legal needs

- ***Real Estate - Residential / Commercial***
- ***Immigration***
- ***Family Law - Divorce / Separation***
- ***Business law***
- ***Employment Law - Termination / Dismissal Clims***
- ***Last wills & Estate planning***
- ***Power of Attorney, Affidavits, Statutory declaration***
- ***Notarization & Commissioning***

Drop in for a free 30 minute initial consultation
Evening & weekends consultation by appointments

- வீடு, வர்த்தக நிலைய் விற்பனை
- குடிவரவுச் சட்டம்
- குடும்பச்சட்டம் - மணமுறிவு / மணப்பிரிவினை
- வர்த்தகச் சட்டம்
- தொழிற்சட்டம் - வேலை நீக்கம் / இழப்பீட்டுக் கோரிக்கை
- இறுதி விருப்பு ஆவணமும் மரணத் சொத்து ஏற்பாடுகளும்
- அத்தரணித்தத்துவம், சத்தியப்பத்திரம், நியதிச்சட்டப் பிரகடனம்
- நொத்தாரிசு உறுதிப் படுத்தல், அத்தாட்சிப்படுத்தல்

**30 நிமிட இலவச ஆரம்ப சட்ட ஆலோசனை**
**மாலை, வார இறுதி வேளைகளில் முன்னேற்பாட்டின் அடிப்படையில் சந்திப்புகள்**

***Vasuki Devadas Law office***
***(Midland & Eglinton)***
***10 - 2466 Eglinton Ave. East***
***Toronto, ON. M1K 5J8***

***Tel: 416 266 1234***
***Fax: 16-266-2000***
***Email: vasuki@vdlaw.ca***

# SAIVITE SAINTS

**Palendira Swaminathan, Australia**

Hinduism is the oldest living religion on Earth and the oldest branch of Hinduism is Saivism which is based on the worship of Lord Shiva as the Supreme God. There is evidence of Shiva worship having flourished during the period of the Indus Valley civilization. In modern India, Saivism is prevalent more in the South than in the North although Shiva worship is practiced all over India.

Several centuries ago, a number of Saivite Saints lived in present day Tamilnadu and a collection of their life histories was compiled in a book called Periya Puranam in Tamil by a Saint and poet called Shekizhar in the twelfth century. There were sixty three of them in all who were called as Nayanars or Nayanmars. Three of these Nayanars were females and all others were males. Some of these Nayanars composed beautiful devotional hymns in Tamil which were very appealing to the hearts and minds of people who listened to and understood them. A female Saint by the name of Karaikkal Ammeiyar was among the first to compose these devotional hymns. Incidentally, Tamil is one of the, if not the, oldest living language in the world as some of the oldest Tamil literature in oral tradition refer to rivers that had dried up over 10,000 years ago! Tamil is among one of the few languages recognized as Classical languages which have an unbroken chain of original literature extending to a period exceeding two millennia.

The Nayanars lived in different periods and they hailed from all segments of society and all walks of life. For examples, Thiruneelakanda Nayanar was a potter who hailed from Chidambaram; Ilayankudi Mara Nayanar was a farmer; Meipporul Nayanar was a king who renounced his throne; Sakaya Nayanar was originally a Buddhist monk who converted himself to Saivism and so on. There were Nayanars who were even from the lowest of castes. But what was common among all of them was that they all were ardent devotees of Lord Shiva so much so they became self realized or liberated souls. All of them are equally revered by all Saivites.

Three of these Nayanars were very famous for their devotional compositions referred to as 'Thevarams' in Tamil. Hence these three were often briefly but respectfully referred to as " Moovar" in Tamil meaning " The Three". They were namely Thirujnanasambanthar briefly referred to as Sambanthar, Thirunavukkarasar also referred to as 'Appar', and Sundaramoorthy Nayanar. They together composed several thousands of 'Thevarams' or devotional hymns and the vast majority of them were sung by Sambanthar who started singing from his infancy. Saint Karaikkal Ammaiyar also composed several devotional songs.Sambanthar attained Divinity at a tender age whereas Appar lived to ripe old age. The two of them were contemporaries. Even though Appar was several years older than Sambanthar he gleefully carried the latter ina palanquin and such was his humility!

Saivism preaches about four paths for attaining Divinity or becoming one with God. These four paths are Dasa Marga, Satputhra Marga, Saha Marga and Sat Marga. Dasa Marga is dedicating oneself as a ' slave of God' which path was originated by Saint Appar. Satputhra Marga was treating one as a 'noble son of God' which path was originated by Sambanthar.The third path 'Saha Marga' was to treat oneself as 'a friend' of God. God in his infinite mercy is very amiable to any of these paths opted by a true devotee. The fourth path 'Sat Marga' was the one followed by several Saints in India and the foremost one among the Tamil Saints who followed this path was Manickavasagar who probably lived in the ninth century but for some unknown reason had gone unnoticed by Sekizhar, the compiler of 'Periya Puranam'. The anthology of devotional verses called 'Thiruvasagam' in Tamil composed by Manickavasagar and are most heart rending, so much so that a proverbial saying came to existence that a heart that does not melt for 'Thiruvasagam' will never melt for anything!

The life stories of these Nayanars are most touching in their total devotion and it is very interesting to read

them. An example is that of Kannappa Nayanar who lived as a hunter in the Kalahasthi forest area of present day Andhra State in India. He offered with absolute faith some of the flesh of animals he hunted to a Sivalingam (an icon of Lord Shiva) that he noticed in the jungle almost daily. Lord Shiva wanted to test his Faith, one day. One day when Kannappa came to the shrine with the offerings of his flesh he found blood oozing from one of the eyes of the Sivalingam and Kannappa was shattered and as he could not bear to see his Lord bleeding in the eye and so he immediately plucked one of his eyes and placed it in the position of the bleeding eye. Then a very strange thing happened. The other eye of the Sivalingam started to bleed. That was too much for Kannappa to bear. He decided to sacrifice his other eye too. But how would he place it in a correct position once he loses both his eyes? So he lifted one of his legs and positioned the big toe to easily locate the bleeding eye of Sivalingam. He was about to pluck his second eye. Lo and behold! There appeared Lord Shiva in person in all his Divine splendor and shouted 'Stop that! Kannappa!- I admire your devotion and you are blessed!'. Kannappa gained both his eyes the same moment.

Another one of the Nayanars named 'Thirumoolar' composed a famous book called 'Thirumanthiram' which explained the tenets of Saivite philosophy. It is said that Thirumoolar was actually a Saint from Northern India who came down South and out of sympathy for a herd of cattle whose herdsman Moolan had died of a snake bite, transmigrated his soul into the body of Moolan and hence the name!

There were other Saints too besides the 63 Nayanars praised in Periya Puranam.One such Saint was Nandanar who hailed from the lowest caste in Chidambaram and one who was refused entry into the famous Temple in that City by the Brahmins who were in charge of that temple. His compositions are also heart rending.

It is good for all Tamil youth to learn the histories of at least some of these Tamil Saints and also learn to recite by rote at least some of their devotional hymns which are as powerful as the mantras.

சைவத் தமிழ் அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

அடுத்த வருடம் புத்தம் புது மலராய் சைவநீதி மலர் வெளிவந்து, நறுமணம் வீசி பொலிவுடன் விளங்க சைவசமய சம்பந்தமானதும் பலதரப்பட்ட மக்களுக்கும் பயன்தரக்கூடிய வகையிலும் உள்ள ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்படி ஆக்கங்கள் சைவநீதி மலரில் ஏற்கனவே வெளிவராதவையாக இருப்பது அவசியம். இவை தமிழிலோ ஆங்கிலத்திலோ கட்டுரைகள் ஆகவும், கவிதைகள் ஆகவும் வினா விடைகளாகவும், அல்லது கதைகளாகவும் அமையலாம்.

ஆக்கங்கள் ஒவ்வொன்றும் தரமானதாகவும் மலரின் 2 பக்கங்களுக்குள் அடங்குவதாகவும் இருத்தல் வரவேற்கத்தக்கது. இவற்றை கணனி மூலம் அச்சிட்டோ திருத்தமான கையெழுத்துப் பிரதியாகவோ 01.10.2013 க்கு முன்னர் அனுப்பி வைக்கவும். மாணவர்களின் ஆக்கங்களும் வரவேற்கப்படுகின்றன.

விலாசம்:
**114, Joycedale street,**
**Markham ON. L3S 3J2**
canadahindumaamantram@gmail.com

# தமிழ்ப் புத்தாண்டு

குருவடி பணிந்து இ. லம்போதரன் MD
www.knowingourroots.com

சூரியன் பன்னிரு இராசிகளில் முதலாவதான மேட இராசியில் பிரவேசிக்கும் காலம் தற்போது ள்ள தமிழ் வருடப்பிறப்பு ஆகும். இது சித்திரை மாதத்தில் நடக்கும். இவ்வாறு சூரியன் ஒவ்வொரு இராசிக்கும் பிரவேசிக்கும் காலத்தை சங்கிராந்தி என்று கூறுவர். சூரியன் மேடத்தில் பிரவேசிக்கும் சித்திரை மாதப்பிறப்பாகிய மேட சங்கிராந்தியே எமது தமிழ் புது வருடப்பிறப்பு ஆகும். இதையே இலங்கையில் உள்ள பௌத்தர்களும் பின்பற்றுகின்றார்கள்.

பத்தாம் நூற்றாண்டில் சித்திரையில் புத்தாண்டு கொண்டாடியதாகக் கல்வெட்டு உள்ளது. பங்குனியைக் கடை மாதம் என்று அகத்தியர் பன்னீராயிரம் சொல்லுகின்றது. "திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக" என்று பத்துப்பாட்டிலே நக்கீரர் ஆடு என்கின்ற மேடராசி மாதமாகிய சித்திரையை முதல் மாதம் என்று சொல்லுகின்றார். 500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கமலை ஞானபிரகாசர் தான் எழுதிய புட்பவிதி என்ற நூலிலே சித்திரையை முதல் மாதம் என்று கூறுகின்றார். இவ்வாறு பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மன்னர்களும், புலவர்களும், சன்றோர்களும், தமிழ் மக்களும் சித்திரையிலே புதுவருடத்தைக் கொண்டாடி வந்திருக்கின்றார்கள்.

ஒவ்வொரு புது வருடமும் அதற்கு முந்தைய வருடம் எந்த வாரத்தில் பிறந்ததோ அதற்கு அடுத்த நாளிலும், எந்த திதியில் பிறந்ததோ அதற்கு பன்னிரண்டாவது திதியிலும், எந்த நட்சத்திரத்தில் பிறந்ததோ அதற்கு பதினோராவது நட்சத்திரத்திலும் எந்த நேரத்தில் பிறந்ததோ அதற்கு 15 நாழிகை 31 விநாடிகள் கழித்தும் பிறக்கும்.

வட இந்தியாவிலும் தெலுங்கு மற்றும் கன்னட சம்பிரதாயத்திலும் அவர்கள் சந்திரனது சஞ்சாரத்தை அடிப்படையாகக்கொண்ட சாந்திரமான மாசங்களையே பிரமாணமாகக் கொள்வர். அவர்களுக்கு மாதம் ஆரம்பிப்பது ஒவ்வொரு மாதத்தினது அமாவாசைக்கு அடுத்த நாளான பிரதமையில் இருந்தாகும். இதிலிருந்து அடுத்த மாதத்தின் வளர்பிறைப் பிரதமை வரை ஒரு மாத காலம் ஆகும். இதுவேதான் சில வேளைகளில் மகா சிவராத்திரி நாளை நிர்ணயிப்பது பற்றிய விவாதங்களுக்குக் காரணமாகின்றது. சாந்திரமானப்படி இவர்களுக்கு பங்குனி மாதத்தின் அமாவாசைக்கு அடுத்த நாளான பிரதமை அன்றே சித்திரை மாதம் ஆரம்பமாகி விடுகின்றது. அதையே யுகாதி என்று தெலுங்கு மற்றும் கன்னட புதுவருடமாக தெலுங்கர்களும், கன்னடர்களும் கொண்டாடுகிறார்கள்.

மலையாளத்தில் நம்மைப்போல சூரியன் மேடத்தில் பிரவேசிக்கும் நாளாகிய மேட சங்கிராந்தியையே சித்திரை மாதப்பிறப்பாக வைத்திருக்கின்றார்கள். ஆயினும் இவர்கள் சூரியன் தனது சொந்த இராசியாகிய சிங்க ராசியில் பிரவேசிக்கும் ஆவணிமுதல் நாளையே தமது மலையாள வருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றனர். அம்மாதமே வருடத்தின் முதல் மாதமாகக் கொள்ளும் மரபு தமிழர்களிடையே இருந்தது என்று சில பழந்தமிழ் நூல்களில் இருந்து அறியக் கிடைக்கின்றது. இதுவே இப்பொழுதும் மலையாளத்தில் பின்பற்றப்பட்டு வருகின்றது. இதே போல பௌர்ணமியில் இருந்து அடுத்த பௌர்ணமி வரை ஒரு மாதமாகக்கொள்ளும் மரபும் வங்காளத்தில் காணப்படுகின்றது. ஹரே கிருஷ்ணா கோவில்களில் இந்த முறையிலான நாட்காட்டிகளே பின்பற்றப்படுகின்றன. எங்களுடைய சாந்திரமான அல்லது சூரியமான முறைப்படி கார்த்திகை மாதம் ஆரம்பமாவதுக்கு முன்னரே அவர்களது கார்த்திகை மாதம் ஆரம்பமாகி விடுகின்றது, இது கிருஷ்ணர் யசோதையின் தாயன்புக்கு அடங்கி உரலில் கட்டுண்ட மாதமாகும். இந்த மாதத்தை அவர்கள் தாமோதர மாதம் என்று கொண்டாடுவார்கள். தாமம் என்றால் கயிறு. தமிழில் தாம்புக் கயிறு என்று சொல்லும் வழமை உண்டல்லவா? உதரம் என்றால் வயிறு. வயிற்றிலே கயிறினால் கட்டுண்டபடியினால் கிருஷ்ணனுக்கு தாமோதரன் என்று பெயர்.

முற்காலத்தில் சூரியன் தனது சொந்த இராசியாகிய சிம்மத்தில் பிரவேசிக்கும் ஆவணி மாதத்தின் முதல் நாளை வருடத்தின் முதல் நாளாகத் தமிழர் கொண்டாடினர் என்ற குறிப்பு சில பழந்தமிழ் நூல்களில் காணப்படுகின்றது.

சூரியன் பத்தாவது இராசியாகிய மகரத்தில் பிரவேசிக்கும் காலமாகிய மகர சங்கிராந்தியே தை மாதப்பிறப்பும் அத்துடன் கூடிய தைப்பொங்கலும் ஆகும். இதையே 2009 இல் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு அரசாங்கம் தமிழ் வருடப்பிறப்பாகப் பிரகடனப்படுத்தியது.

வட இந்தியாவில் இந்துக்கள் கொண்டாடும் தீபாவளியை இராமர் வனவாசத்தில் இருந்து மீண்டும் அயோத்திக்கு திரும்பிய நாளாகக் கொண்டாடி அதையே புது வருடப்பிறப்பாகக் கொண்டாடுவர். ஆங்கில புதுவருடம் போலவே இதற்கும் எந்தவிதமான வானியல் கணித விஞ்ஞான அடிப்படையோ ஆதாரமோ அல்லது ஆகம நூல்களின் ஆதாரமோ இல்லை என்பது இங்கு நோக்கத்தக்கது. உண்மையில் இராமர் வனவாசம் முடிந்து அயோத்தி நகருக்குத் திரும்பியது சித்திரை மாதத்து வளர்பிறை சஷ்டி நாள் என்றும் அதற்கு அடுத்த நாளான சப்தமியில் அவர் முடி சூடினார் என்றும் வான்மீகி இராமாயணம் யுத்த காண்டம் 127ம் சர்க்கம் கூறுகின்றது. இராமர் மீண்டும் நாடு திரும்பிய நாள்தான் புதுவருடப் பிறப்பு என்றால் இது நாம் புதுவருடம் கொண்டாடுகின்ற சித்திரை மாதத்தில்தான் வர வேண்டும்.



இந்துமாமன்றம்

இசைவுடன் நடாத்தும்

இனிய "சர்க்கரைப் பொங்கல்"

இனிதே நடைபெற

இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!



P.KAYILASANATHAN

Professional Corporation

Barrister & Solicitor

2401, EGLINTON AVENUE EAST, # 302

SCARBOROUGH, ON M1K 2M5



Tel: 416 752 9561

Fax: 416 752 7262



# பக்தி இலக்கியங்களின் தோற்றமும் சைவசமயத்தின் வளர்ச்சியும்

கலாநிதி. எஸ்.சிவநாயகமூர்த்தி

இன்று உலகில் காணப்படும் சமயங்களில் இந்துசமயம் அநாதியானது. இதற்கு ஆதியும் அந்தமும் எவராலும் கண்டுபிடிக்க முடியாதது. இவற்றுள் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டுள்ள சமயம்தான் சைவசமயம். இதன் வளர்ச்சியில் பக்தி



இலக்கியங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. சங்ககாலத்தின் பின்னர் சங்கமருவிய காலத்திலே ஆரியப்பண்பாடும், நிலையற்ற ஆட்சி முறைகளும், ஒழுக்கக் கேடுகளும், குழப்பங்களும், சமயப் போட்டிகளும் ஏற்படலாயின. நிலையாமையையும், துறவையும் பெரிதும் போற்றிய சமண, பௌத்த மதங்களின் வருகை பெரியதோர் மாற்றத்தை ஏற்படுத்தியது. சங்க காலத்தில் அன்புக் காதலை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறைக்கு மாறானவற்றை இச்சமயங்கள் போதித்தன. ஐம்புல இன்பம் துறக்கப்பட வேண்டுமென்பதால் போலித்துறவு நிலையும் ஏற்பட்டது. இதனால் ஒழுக்கத்தை வலியுறுத்திய சமயங்களால் ஒழுக்கக்கேட்டைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இயற்கையோடு ஒன்றி வாழ்ந்து இசைபாடி மகிழ்ந்த தமிழ்மக்களின் கலையார்வமும் குன்றலாயின. இத்தகைய சூழ்நிலையில் இல்லறமே நல்லறம் எனக்காட்டும் கடவுள்களை முழுமுதற் பொருளாகக் கொண்ட சைவமும் வைணவமும் தலையெடுத்தன. இயல் இசைத் தமிழால் இறைவனை ஆடிப்பாடிக் களிக்கும் நிலையினைக் காரைக்காலம்மையாரும், முதலாழ்வார் மூவரும் நடைமுறைப்படுத்திக் காட்டலாயினர். பக்திப் பெருக்குச் சக்தி மிகுந்ததாயிற்று. ஐம்புலன்களும் தீங்கிழைப்பன என்னும் பௌத்த சமயக் கோட்பாட்டிற்கு எதிர்மாறாகச் சைவமும்,வைணவமும் ஐம்புலன்களால் பேரின்ப இறையின்பத்தைப் பெறலாம் என்பதை நிலை நாட்டலாயின. இதன் பெறு பேறாகப் பல்லவர் காலத்தில் பெருந் தொகையான

சைவ,வைணவ பக்திப் பாடல்கள் தோன்றலாயின. இவ்வாறு பக்திப் பாடல்கள் பெருந்தொகையாகத் தோன்றியமைக்கு வடமொழிப் புராணங்களும் இலக்கியங்களும் வடமொழிச் செல்வாக்கும் துணைக் காரணங்களாக அமைந்தன. இத்தகைய சூழ் நிலையிலே முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் இறைவன் அருளுக்கு ஆட்பட்ட நாயன்மார்களும், ஆழ்வார்களும் பெருந்தொகையாகத் தோன்றினர். அற்புதச் செயல்களாலும் பாடல்களாலும் வாழ்க்கை முறைகளினாலும் அரசாளும் மன்னர்களையும், மக்களையும் பக்திப் பெருக்கிலே திளைக்கச் செய்தனர். நாட்டு மொழியாகிய தமிழ் மொழி வாயிலாகப் பக்தி இலக்கியம் எங்கும் பரவியது. இசை, நடனம், நாட்டியம், ஓவியம், சிற்பம், கோயிற் கட்டிடக் கலைகள் என்பன பக்திப் பெருக்கை மேலும் வளர்த்தன. இவற்றோடு பெரியபுராணத்தில் கூறப்பட்ட நாயன்மார்களின் வரலாறுகளும் அவர்கள் செய்த அற்புதங்களும் மக்களிடத்திலே பக்தி நிலையை மேலும் வளரச்செய்தன.

தந்தையாரான சிவபாதவிருதயருடன் குளிக்கச் சென்ற மூன்றுவயதுப் பாலகனான திருஞானசம்பந்தர், குளத்திலே மூழ்கிய தந்தையாரைக் காணாது அழுதபோது, சிவனும் பார்வதியும், அம்மையப்பராகத் தோன்றி ஞானப்பாலை ஊட்டியமையும், வாயிலே பால் வடிவதைக் கண்ட தந்தையார் பாலைத் தந்தது யாரென அதட்டிக்கேட்கவே திருஞானசம்பந்தர் தோணியப்பர் ஆலயத்தைக்காட்டி "தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி" என்னும் தேவாரத்தைப் பாடினார். பின்னர் தந்தையாருடன் ஆலயங்களுக்குச் சென்று பன்னிரு திருமுறைகளில் முதலாம், இரண்டாம், மூன்றாந் திருமுறைகளான தேவாரப் பாடல்களைப் பாடியதோடு, பல அற்புதங்களையும் செய்தருளினார். சமணசமயத்திலே திளைத்திருந்த திருநாவுக்கரசரைத் தடுத்தாட் கொள்ளும்படி அவரது தமக்கையாரான திலகவதியார், சிவபிரானை வேண்டவே, திருநாவுக்கரசருக்குச் சூலை நோயைக் கொடுத்து, அந்நோயைச் சமணர்களால் தீர்க்க முடியாதுபோகவே, திருநாவுக்கரசர் சிவனை வேண்டி "கூற்றாயினவாறு விலக்ககலீர் கொடுமை பல செய்தன நானறியேன்" எனத் தொடங்கும் தேவாரத்தைப் பாடிச் சூலைநோய் நீங்கப் பெற்றார். அவர் சைவசமயத்திற்கு மாறியபின்னர் சமணர்களால் விளைவிக்கப்பட்ட பல சோதனைகளுக்கும் ஆளாகிச் சிவனருளால் அவற்றையெல்லாம வெற்றி கொண்டார். அத்துடன் நாலாம் ஐந்தாம், ஆறாந் திருமுறைத் தேவாரங்களைப் பாடி அருளினார். திருமணப் பந்தலிலே சுந்தரரைத் தனது அடிமையென வாதிட்ட கிழ உருவில் வந்த சிவபிரான் திருவெண்ணை நல்லூரில் தனது சுய உருவத்தைக்காட்டியதும் "பித்தா" என்று பாட அடியெடுத்துக் கொடுத்தமையும், சுந்தரர் "பித்தாப்பிறைசூடிப் பெருமானே" என்று தொடங்கிப் பாடியதோடு, ஏழாந் திருமுறைத் தேவாரங் களையும் பாடியருளினார். அரிமர்த்தன பாண்டியனின் மந்திரியாகவிருந்த மாணிக்கவாசகர் குதிரை வாங்கச் சென்று, குருந்தமரநிழலில் குருவாக அமர்ந்திருந்த சிவபிரானிடம் ஞானதீட்சை பெற்றதோடு, குதிரை வாங்கக் கொண்டுசென்ற பணத்தையெல்லாம் சிவனடியார்களுக்குச் செலவு செய்து வெறுங் கையோடு நாடு திரும்பியபோது, அவரைக் காப்பாற்ற சிவபிரான் காட்டிலுள்ள நரிகளையெல்லாம் பரிகளாக்கி, பாண்டியனிடம் அனுப்பியமையும், பின்னர் அவை மீண்டும் நரிகளாகியபோது, கோபங் கொண்ட அரிமர்த்தன பாண்டியன் மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தியதும், அவரைக் காப்பாற்ற சிவபெருமான் வைகையைப் பெருக்கெடுத்தோடச் செய்தபோது, பாண்டியன் அணைகட்ட மக்களை அழைத்ததும், சிவபிரானே செம்மனச் செல்வி என்னும் அம்மையாரின் கூலியாளாக வந்து பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியனிடம் அடிபட்டமையும், அந்த அடி உலகிலுள்ள எல்லா உயிர்கள் மேலும்பட, சிவபிரானே கூலியாளாக வந்தவர் என அறிந்து கொண்ட பாண்டிய மன்னன், மாணிக்கவாசகரை விடுவித்ததோடு மேலும் சிறந்த சைவசமயப் பக்தனானான். மாணிக்கவாசகர் எட்டாந் திருமுறையான தேனினும் இனிய திருவாசகங்களைப் பாடியருளினார். இவையாவும் புராணங்கள் தந்த வரலாறுகளாக அமைந்துள்ளன.

இவ்வாறு சேக்கிழார் சுவாமி தந்த பெரிய புராணமும், ஏனைய நாயன்மார்கள் பாடிய திருப் பாடல்களும் சைவசமயப் பக்தி இலக்கியங்களாகத் திகழ்ந்து சைவசமயத்தை மேலும் மெருகூட்டி வளர்த்தன. திருஞானசம்பந்தர் சிவன் பார்வதியைத் தந்தை தாயாகவும், திருநாவுக்கரசர் இறைவனை ஆண்டானாகவும், தான் அடியானாகவும் ஏற்று வழிபட்டமையும், சுந்தரரர் சிவபிரானைத் தோழனாகப் பரவையாரிடம் தூது அனுப்பியமையும், மாணிக்கவாசகர் இறைவனைக் குருவாக ஏற்று ஞானதீட்சை பெற்றமையும், சிவ வழிபாட்டின் உயரிய

தத்துவங்களை விளக்கி நிற்கின்றன. அவ்வாறே அறுபத்து மூன்று நாயன்மார்களினதும் வரலாறுகளில் அவர்கள் சைவத்தின்பால் கொண்டுள்ள பற்றையும் அவர்கள் சிவபிரானைத் தொழுதுபெற்ற அருளையும் அவர்கள் செய்த அற்புதங்களையும் பற்றிப் புராண இலக்கியங்களின் வாயிலாக அறிகிறோம். இவை சைவமக்களுக்குச் சமயத்தில் மேலும் வைராக்கியத்தையும் பற்றையும் வளரச் செய்தன. கடவுளைத் தெய்வமாகவன்றி,காதலனாக, தோழனாக, குருவாக, மகனாக, குழந்தையாக ஆள்பவனாகக் கருதி பலவாறு வழிபாடு செய்யப் பக்தி இலக்கியம் இடமளித்தது. மக்கள் குடும்பம்,குடும்பமாக வாழ்வது போன்று சிவபெருமானும் வாழ்கின்றார் என்னும் கருத்து மேலோங்கியமையால் உலக வாழ்விலேயே பேரின்பத்தைத் துய்க்கலாம் என்னும் கோட்பாடு வேருன்றியது. இக்கருத்தினாலேயே சிவன், சக்தி, என்றும் அவர்களின் பிள்ளைகளே விநாயகர், வீரபத்திரர், ஐயப்பன், முருகன், பைரவர் என்றும் அவர்களுக்கு, தனித்தனி வெவ்வேறு பெயர்களிலும் ஆலயங்களமைத்தும் வழிபடத் தொடங்கினர். இவ்வாறே வைணவர்களும் கண்ணனைக் குழந்தையாகத் துதித்தமையும், பல்வேறு அவதாரங்களைக் கண்ணன் பெற்றுள்ளார் என்பதும் பக்திப் பாடல்கள் பெருந்தொகையாகத் தோன்றக் காரணமாயின. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இயற்றிய பக்திப் பாடல்கள் யாவும் இசைப்பாடல்களாகவும், சேர்ந்து பாடத்தக்கனவாகவும், ஆட்டத்தோடு கோயிலை வலம் வந்து பாடக் கூடியனவாகவும் இருந்தமையால் பக்தி உணர்ச்சி மேலோங்க பரவச நிலை ஏற்படலாயிற்று.

புராணக் கதைகள் பாடலிலும், ஆடலிலும் சிற்பத்திலும், இலக்கியத்திலும் இடம்பெற்று ஊர்கள் தோறும் கோயில்கள் ஏற்பட்டன. அத்தோடு ஆலயங்களில் சைவத்தின் முழுமுதற்கடவுளான சிவனையும், ஏனைய சைவசமயக் கடவுள்களைக் குறிக்கும் விக்கிரகங்களும் ஆலயங்களில் இடம்பெற்றன. இவ்வாறு பல்லவர் காலத்திலேயே பக்திப் பாடல்கள் கோயிலை மையமாகக் கொண்டு மக்களையும் மன்னர்களையும் இணைத்து இறை நம்பிக்கையோடு வாழ்வாங்கு வாழ வழிகாட்டின. பல்லவர் காலப் பக்திப்பாடல்கள் தமிழ் உணர்வு, நாட்டுயர்வு, கலையுணர்வு, இறையச்சம், ஒழுக்கம், கட்டுப்பாடு ஆகியவற்றிற்கும் அடிப்படையாக இருப்பதனால் இன்றும் போற்றப்படுகின்றன. இவ்வாறு வாழ்க்கையோடு சைவசமயம் இணைக்கப்பட்டமையால் தெய்வங்களுக்கெனப் பல ஆலயங்களும் கட்டப்பட்டதோடு கிராமங்கள்தோறும் மக்களிடத்திலே சைவத்தின் பெருமை பிரசங்கங்கள் மூலமும், தேவார திருவாசகங்களின் மூலமும் வெளிக் கொணரப்பட்டன. இவ்வாறு வளர்ச்சி பெற்ற பக்தியானது தமிழோடு இணைந்து, பல சமயக் கதைகளும் சமயப் பிரார்த்தனைப் பாடல்களும் தோன்றக் காரணமாயின. இன்று இவ்வாறு மாற்றம் பெற்ற பக்தி இலக்கியங்களின் வாயிலாகச் சைவசமயத்தின் நீதிநெறிகளை மக்கள் அறியவும், அவற்றைக் கைக்கொள்ளவும் வழி வகுத்தன. இன்று இப்பக்தி இலக்கியங்கள் வளர்ந்ததன் காரணமாகப் பல சைவ நீதிகளை விளக்கும் பல கதைகளும் இடம் பெற்றன. இதனால் தான் பல ஆயிரம் ஆண்டுகள் சென்ற பின்பும் சைவம் மக்கள் மத்தியிலே குன்றாது வளர்ந்து வருகின்றது. தமிழ்மக்கள் வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் அவர்களின் சைவசமயத்திலுள்ள பக்தியானது மேலும் வளர்ந்து வருவதைக் காண்கிறோம். இதனால்தான் அவர்கள் சென்ற நாடுகளிலெல்லாம் தாம் விரும்பும் கடவுளர்களுக்கெல்லாம் அதிக பணம் செலவு செய்து ஆலயங்களமைத்து விழா எடுத்து வருகிறார்கள். அத்தோடு கனடா இந்து மாமன்றம் போன்று, பல மன்றங்களை அமைத்துச் சைவசமயப் பண்பாடுகளையும் நெறி முறைகளையும், சைவநீதியையும் வலியுறுத்தி வருவதோடு மக்களிடத்தே சைவ சமயம்பற்றிய புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தி வருகிறார்கள். இவற்றின் செயற்பாடுகளினால், கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலுமுள்ள தமிழ் மக்கள் மத்தியில் சைவசமயம் சிறப்பாக வளர்ச்சி பெற்றுவருகிறது. இதனால் வருடந்தோறும் புதிய ஆலயங்களின் கும்பாபிஷேகங்களும், ஆலயத் திருவிழாக்களும், தெய்வங்களுக்குரிய சிறப்பான விரதங்களும் மக்களால் அனுஷ்டிக் கப்பட்டும் வருவதைக் காணலாம். இவ்வாறு பக்தி இலக்கியங்களின் தோற்றமே சைவசமய வளர்ச்சியில் முக்கிய பங்காற்றி வந்துள்ளன.

வாழ்க சைவம்! வளர்க நம் தமிழ் மொழி!

# Navagraham

**Kumar Punithavel**



**N**avagraham is one of the very misunderstood words used loosely and misinterpreted. Unfortunately people tend to link that this word means planets and find fault that it is wrong. The main reason being many do not know the origin of the word. Navagraham is a Sanskrit word comprised of two words. The two words are 'Nava' and 'graham'.

Most know the meaning of the Sanskrit word 'Nava' which means nine. The word Graha in Sanskrit means seizing or holding. Hence the word Navagraham was given to the nine cosmic influencers of those occupying the planet earth. We may call it as nine realms for want of a better word. It so happens five of these realms is planets. But four are not. Suriya (sun) is a star and Chandra (moon) though a satellite that revolves around earth which is a planet.

The other two, the Ragu and Kethu are indeed not even a celestial body but only orbital nodes of the moon called lunar nodes. They are the points where the orbit of the moon crosses ecliptic (which is the apparent path of the Sun across the heavens against the background of the stationary stars). The ascending node is where the moon crosses to the north of the ecliptic and is called Ragu. The descending node is where it crosses to the south and is called Kethu. Eclipses occur only near the lunar nodes: Solar eclipses occur when the passage of the Moon through a node coincides with the new moon: Lunar eclipses occur when it coincides with the full moon. The moons distance will be less than about 1.5degree.

Though there is no celestial body, to justify its presence the Hindu mythology has the following story. Ragu is said to be thamas Asura who does his best to plunge any area of one's life he controls into chaos, and Ragu kaala is considered inauspicious. According to mythology, during the churning of the milky ocean the Asura Ragu drank some of the divine nectar which assures eternal life. But before the nectar could pass his throat, Mohini (the female avatar of Vishnu) cut his head. The head however, remained immortal and is called Rahu, while rest of the body became Kethu. It was told that this immortal head occasionally swallows the sun or the moon, causing eclipse. Then the sun or moon passes through the opening at the neck, ending the eclipse. Kethu is generally referred to as a 'Shadow' planet. He is considered as tail of the demon snake.

Can these celestial bodies control the human life? I very much don't believe, but these Grahas are considered as markers of influence,

that points us the karmic effect of our behaviour. One should realize they themselves do not cause anything but act like traffic signs giving us guidance.

Certain days not only people but even oceans behave differently. This could be explained easily by the law of Gravity. When these celestial bodies come in the same radian the gravitational pull will be great and that is how the high tide and low tide is formed. As human body is 80% liquid it certainly should pull the liquid to one side, and the brain liquid too must have this effect. Further even with child birth it is observed that child is born when these celestial bodies are in certain position. Even the great English poet Shakespere mentions the influence of the heavenly bodies on the human being. To quote on in Winter's Tale he mentions "There's some ill planet reigns I must be patient till the heavens look with an aspect more favourable". Let us too take heed in living using the cues from the planet!.

It is foolish to say there are no nine planets, because even the astrologers know it is so and Navagraha just means nine influencers.

## உயிருக்கு நலம்தரும் பிரார்த்தனை

நாம் கடவுள் நினைப்புடன் என்றும் வாழவேண்டியவர்கள். அதற்கு ஒரு வழி பிரார்த்தனை செய்தலாகும். இறைவனுடன் கொள்ளுகின்ற உறவுதான் பிரார்த்தனை என்றும், அதன்மூலம் எமது எண்ணங்களை இறைவன் பற்றியதாக, மேல்நிலைக்கு உயர்த்துகிறோம் என்றும் பெரியோர் கூறியுள்ளனர். கடவுளைச் சிந்தித்தல், தியானித்தல், துதித்தல், நாமங்களை உச்சரித்தல், தோத்திரஞ்செய்தல், வழிபடுதல் என்பவற்றில் ஈடுபடும் நேரம் தவப்பொழுதாக அமைகின்றது. அவனைப்பற்றிப் "பேசாத நாளெல்லாம் பிறாவா நாளே" என்கிறார் அப்பர் பெருமான்.

"பிரார்த்தனை ஆத்மாவின் அத்தியாவசியத் தேவையாகும். ஓவ்வொரு முறையும் கடவுளின் பெயரைத் திரும்பச் சொல்லும்போதும், கடவுளின் அருகே நீங்கள் வருகிறீர்கள்" என்கிறார் காந்தியடிகள். மகாத்மா காந்தி, பிரார்த்தனை மூலம்தான் மாபெரும் சாதனைகளையெல்லாம் நிலைநாட்டினார். நாம் கடவுளுக்கு அருகில் இருக்கும்போது எவ்வித அச்சமும் இருக்காது. அவருடன் அளவளாவி, அவரைக் கேட்டு எல்லாக் காரியங்களிலும் இறங்கலாம். கடவுளை முன்வைத்து, அவர் சம்மதத்துடன் செய்யப்படும் காரியங்கள் அனைத்தும் நன்மையானவையாகவே விளங்கும்.

எமக்கு உடல் தேவைகள் உள்ளன. பசி, தாகம், கழிவகற்றல் என்பன உடனுக்குடன் நிறைவேற்றப்படவேண்டிய உடல் தேவைகள். அவற்றைப் பின்பு, பிறகு என்று ஒத்திவைக்காமல் அவ்வப்போது நிறைவேற்றுவதில் ஆர்வமாக உள்ளோம். கொஞ்சம் தாமதமானாலும் உபாதை தாங்க முடியாமல் தவிக்கிறோம; நிறைவேற்றத் துடிக்கிறோம். உடல் தேவைகள் போன்றே ஆன்மாவுக்கும் அதாவது உயிருக்கும் தேவைகள் உண்டு. உயிரின் தேவைகளை நாம் பெரும்பாலும் நிறைவேற்றாமல் அலட்சியம் பண்ணிவருகிறோம். 'பின்பு, பிறகு' என்று ஒத்திவைத்துக்கொள்கிறோம். வயது முதுமையானதும் ஆன்மாவைப்பற்றி யோசிப்போம். அதன் தேவைகளை நிறைவுசெய்ய அப்போதுதான் கால அவகாசம் கிடைக்கும் என்கிறோம் எம்மில் பலர். ஆனால் முதுமையில் வேறு சோலிகள், அலுவல்கள் வந்துவிடுகின்றன. ஆன்மாவின் தேவைகள் நிறைவேற்றப்படாமலேயே போய்விடுகின்றன. பின்பு என்பதும் பிறகு என்பதும்

# அருள்

நா.க.சிவராமலிங்கம்

செல்வம் இருவகைப்படும். கண்ணாற் கண்டு மகிழ்வது ஒருவகை. நிலம், நீர், பொன், மணி என்பன இவையாம். மனத்தால் எண்ணி மகிழ்வது மற்றையது. கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், அருள் என்பன இவையாம். செல்வத்துள் செல்வம் அருட்செல்வம் என்பது வள்ளுவர் கருத்து. ஏனெனில் பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள என அதற்கு விடையும் பகிர்ந்துள்ளார்.

அன்பும் அருளும் ஒன்றல்ல. அன்புக்கு வேறானது அருள். அருளொடும் அன்பொடும் என்ற தொடர் இதனை மெய்ப்பிக்கும். அன்புடமை பற்றி முதலில் கூறியிருக்கும் வள்ளுவர் பின் அருளுடமைபற்றிக் கூறியிருப்பதும் இதற்குச் சான்றாக அமையும். ஆனால் அன்பும் அருளும் ஒன்றே என்பர் சிலர். ஏனெனில் இவை இரண்டும் கருணையுள்ள உள்ளத்திலேயே தோன்றுவதாகும் என்பர். அன்பும் அருளும் வேறாக இருந்தாலும் அவை இரண்டும் ஒன்று போலவே கருத்துடையன. தொடர்புடையாரிடத்திருந்து தோன்றுவது அன்பு. பிறரிடத்துத் தோன்றுவது அருள். சாதாரண மக்களிடம் தோன்றுவது அன்பு. அருளாளரிடம் தோன்றுவது அருள். இல்லறத்தில் காணப்படுவது அன்பு எனவும், துறவறத்தில் காணப்படுவது அருள் எனவும் கூறலாம். திருக்குறளில் அன்பு இருபத்து நான்கு இடங்களிலும், அருள் பதினெட்டு இடங்களிலும் கூறப்பட்டுள்ளன. அன்பு பற்றுதலையும், அருள் இரக்கத்தையும் குறிக்கும். அன்பினை மனிதத் தன்மையின் மீதும் அருளினை தெய்வத் தன்மையின் மீதும் ஏற்றிக் கூறுவதுண்டு.

ஒருவரையொருவர் அடித்துத் துன்புறுத்துவது விலங்குக் குணம். தன்னலம் கொண்டு உயர்ந்து செல்வது பறவைக் குணம். தீமை செய்தவர்க்குத் தீமை செய்வது தேள், பாம்பு என்பவற்றின் குணம். தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்க் குணம். தீமை செய்தவனை மன்னித்து அதை மறந்து அவனுக்குத் தீமை செய்யாதிருப்பதே மனிதக் குணம். இவற்றை எல்லாம் கடந்து தீமை செய்தவர்க்கும் நன்மை செய்வதே தெய்வக் குணம். இதுவே அருட் குணம் எனப்படும். அருள் பழுத்த நெஞ்சினர்க்கே இது சாத்தியமாகும். மன்னுயிர் ஓம்புதலே அருள் எனப்படும்.

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதும், 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதும், 'எவ்வுயிரும் பராபரன் சந்நிதி' என்பதும், 'பிறரை உன்னைப் போல நினை, நேசி' என்பதும், 'அவர்களை வாழவைத்து வாழி', 'அவருக்காகவே வாழ்' என்பதும் அருள் ஆளுபவர்களின் செயற்பாடுகளாக அமையும்.

அறிவால், ஆற்றலால், உடலால், வலிமையால், பொருளால், பிறவற்றால் உன்னைவிட மெலிந்தாரை ஏளனம் செய்யாதே. தாக்கும் நிலை வந்தால் உன்னைவிட வலிமை வாய்ந்தவர்கள் உன்னைத் தாக்க வருவதாக நினை. எனவே, அந்த நிலை வந்தால் உன் மனம் என்ன பாடுபடுமோ அதனையே அந்த ஏழை மனமும் படும் என அறியும்போது அருள் நிலைக்கு ஆளாவாய். துன்பப்படுபவர்களைக் கண்டால் விலகிச் செல்லாமல் விரும்பிச் சென்று உதவிசெய். அப்போது அருள் கிட்டும்.

சொல்லில் தீச்சொல், சுடுசொல், கடுஞ்சொல், கொடுஞ்சொல் எனப் பலவகை உண்டு. நாவினால் சுட்டபுண் ஆறாது. எனவே, இன்சொல் பேசும்போது அருள்நிலை ஏற்படும். தீச்சொல் அருட் செல்வத்தை அழிக்கும்; தீஞ்சொல் அருட்செல்வத்தை அளிக்கும்.

"தன்ஊன் பெருக்கற்குத் தான்பிறிதூண் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்"

என வினாவும் வள்ளுவர், உயிர்க்கொலையைத் தவிர்க்க வேண்டும் என்றும், ஊன் உண்ணலைத் துறக்க வேண்டுமெனவும் அறிவுறுத்துகின்றார். "ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே" இனியவை நாற்பதில் ஓர் அடி இது. திருவருட் கடாட்சத்தினால் பெறும் செல்வம் அருட் செல்வம். பூர்வபுண்ணியப் பயனாலும் அருள்நிலை எய்தலாம். மூன்று வயதில் ஞானசம்பந்தர் அருள் ஞானம் பெற்றார். பயிற்சியினாலும் முயற்சியினாலும் வாழ்க்கை முறையாலும் பரமன் அருளுக்கு ஆளாகலாம் என்பதை அப்பரடிகள் வாழ்க்கை உணர்த்துகின்றது. அவன் அருளாலே தான் அவனது அருளைப் பெறமுடியும் என்பது வாதவூரடிகளின் வாக்கு. எனவே, அருள் ஆள்பவர்க்கு அல்லல் இல்லை.

வாடிய பயிரைக் கண்டு வாடிய உள்ளம் அன்றே
தேடிய செல்வம் ஒன்று; அது திருஅருளாம் செல்வம்!

# இசையும் இறைவனும்

அமிர்தி புவனேந்திரா



“ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம் கார்மேனிச்செங்கண் கதிர் மதியம் போல்முகத்தான் நாராயணனே நமக்கே “பறை” தருவான் என்றும், “சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் பங்கயக் கண்ணனை” எனவும் “வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ” எனவும் இன்னிசையால் பாடிக் கொடுத்து நற்பாமாலையும் பூமாலையும் சூடிக்கொடுத்தாளாம் ஆண்டாள் திருப்பாவையில்.

“கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்’

என்று மணிவாசகர் திருவெம்பாவையில் அருளியதும் சங்கொலியின் மகத்துவத்தை இங்கு உணரலாம்.

எமது கோவில் சன்னிதிகளிலும் மங்களகரமான நிகழ்வுகளிலும் மங்கல வாத்தியமான தவிலும் நாதஸ்வரமும் முக்கியத்துவம் பெறுகின்றன. குறிப்பாக கொடியேற்றத் திருவிழாவின் போதும் இவற்றிற்குப் பூசை நடைபெற்ற பின்னரே துவஜா ரோகணம் நடைபெறும். இது போன்றே சேமக்கலம், சங்கு, மணி, தாளம் போன்றனவும் கோவில் வழிபாட்டிற்கு முக்கியத்துவம் பெறுகின்றன. பூஜை நேரத்தில் கோவிலில் ஒலிக்கின்ற மணிஒலி தெய்வீக ஒலியாகும்.

ஒலியும் இசையும் எமது இறை வழிபாட்டின் முக்கிய அங்கங்கள் ஆகும் இதனால்த்தான் “ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே” எனறு அப்பர் சுவாமிகள் தனது திருத்தாண்டகத்தில் குறிப்பிடுகின்றார். இறைவன் ஒலி வடிவானவன். ஏழிசையாய் விளங்குகின்றவன். இவற்றை எடுத்துக் காட்டுகின்ற அடையாளங்களாக சில தெய்வங்களின் கைகளில் இசைக்கருவிகள் திகழ்கின்றன. இவை பல தத்துவங்களை எமக்கு உணர்த்துகின்றன.

“ஆய கலைகள் அறுபத்து நான்கினையும் ஏய உணர்விக்கும் என் அம்மை”யாம் கலைவாணி வீணை செய்யும் ஒலியில் இருக்கின்றாள். இவ் வீணையிலிருந்து “ஓம்” என்ற பிரணவ நாதம் எழுகின்றது. “புத்தகத்துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே” எனும் சரஸ்வதி துதியிலிருந்தும் அறியலாம். கல்வித் தெய்வமாகப் போற்றும் கலைமகளாம் கலைவாணி வெள்ளைக்கலையுடுத்து, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் கலையரசியாம். இவள் அறுபத்து நான்கு கலைகளையும் எமக்கு அள்ளித்தருகின்றாள். இவ்வறுபத்து நான்கு கலைகளில் இசை என்பது கலைமகளின் உறைவிடமான நாவில் உறையும். கலைச் செல்வியானவள், வீணையும் ஏடும் எழுத்தாணியும் திருக்கரத்தில் ஏந்தியவாறு ஆன்மாக்களாகிய எமக்கு கல்வி ஞானத்தைப் புகட்டுகினறாள்.

“யாகுந்தேந்து துஷார ஹாரதவளா” என்று தொடங்கி, “யாவீணா வரதண்ட மண்டிதகரா” என்ற பாடல் கலைகளின் தாய்மகளான கலைத்தேவியின் பெருமையினை எமக்கு உணர்த்துகின்றது. சகலகலாவல்லி மாலையில் சண்முகப்பிரியா ராகத்தில் அமைந்த “வெள்ளைக் கனியிசைதான் நல்ல கொட்டுநல் யாழினைக் கொண்டிருப்பாள்” என்பதும் “படிக நிறமும் பவளச் செவ்வாயும் என்று தொடங்கும் சரஸ்வதி அந்தாதியில் “அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற் கல்லும் சொல்லாதோ கவி” என்பதிலிருந்து அறியலாம்.

உடுக்கை ஏந்தியவாறு கூத்தப்பெருமான் வெள்ளியம்பலத்தில் திருநடனம் புரிகின்றான். முன்னொரு காலத்தில், கலகங்கள் விளைவிக்கும் நாரதப்பெருமான் “தம்புரா” வாசிக்கவும் நந்திதேவர் “மத்தளம்” கொட்டவும் சரஸ்வதிதேவி “வீணை” மீட்கவும் மாயக்கண்ணன் “புல்லாங்குழல்” இசைக்கவும், மாதொரு பாகனாம் ஆனந்த நடராஜப்

பெருமான் உடுக்கை ஏந்தியவாறு கோரத்தாண்டவமாம் ஆனத்தச் சிவதாண்டவத்தை ஆடினான் என்பது வரலாறு. சுடலையில் நின்றாடும் எம்பெருமான் பரமேஸ்வரனுக்கு அவனது திருக்கரத்தில் இருக்கும் உடுக்கை என்ற வாத்தியத்திற்கு இன்னுமொரு தத்துவம் உள்ளது. உடுக்கை வாத்தியத்திலிருந்து பிறக்கும் சத்தம் ஆகாயத்திலிருந்து உண்டாகும். ஆகாயம் பஞ்ச பூதங்களில் முதலானதும் அவை எல்லாவற்றிலும் மேன்மையானதுமாகும். உடுக்கையின் ஓசை நாத தத்துவதைக் காட்டும். அதிலிருந்து விந்து முதல் பிரிதிவியீறான 36 தத்துவங்களும் பிறக்கும். இது இறைவனின் படைத்தல் தொழிலைக் குறிக்கும்.

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ நான்"

என்கிறாள் பெரியாழ்வாரின் கோதையான ஆண்டாள்.

"நடம தாடிய நாதன் நந்திதன் முழவிடைக் காட்டில்" என்கின்றார் தேவாரப்பதிகத்தில் ஞானசம்பந்தர்.

நந்தியின் நிறம் வெள்ளை. வெண்மை தூய்மையைக் குறிப்பது. அறமாகிய தர்மத்தின் நிறமும் வெண்மையே. நந்தி தூய்மையும் ஆண்மையும் நிறைந்தது. சிவாலயங்களில் உள்ள நந்திதேவர் மூன்று கால்களை மடக்கி ஒரு காலை மட்டும் நிமர்த்தியுள்ளதை நாம் காண முடியும். உருத்ரன், தூயவன், மிருதங்க வாத்யப்ரியன், சிவப்ரியன், இப்படி பல்வேறு சிறப்புப் பெயர்களோடு புராணங்களும் ஆகமங்களும் போற்றும் மூர்த்தி நந்தியெம்பெருமானே! இத்தகைய சிறப்பு வாய்ந்த நந்தியெம்பெருமான் அம்பலவாணனுக்கு மத்தளம் கொட்டியது எத்தகைய சிறப்பம்சமாகும்!

மதுரநாயகனாம் மாயக் கண்ணன் கையில் புல்லாங்குழல் இருப்பதும் அதன் 8 துளைகளின் தத்துவமும் மகத்துவமானது. கோபிகைகள் எல்லோரும் மயங்கியது கண்ணனிடத்திலா, புல்லாங்குழல் இசையிலா? புலாங்குழலின் வேணுகானத்தைக் கேட்டு கோகுலத்து பசுகள் பால் கறந்ததின் விந்தைதான் என்ன? புருஷோத்தமனின் புகழைப் பெரியாழ்வார் "செங்கண் கோடச் செய்யவாய் கொப்பளிப்பக் கோவிந்தன் குழல் கொடுதினபோது". என்று கூறுகின்றார்

பாஞ்சாலி மானம் காத்த மதுசூதனன் தன் திருக்கரத்தில் சங்கு, சக்கரம் ஏந்தியிருக்கின்றான். இதனைப் பெரியாழ்வார் "அப்பாஞ்ச சன்னியமும் பல்லாண்டு" என அழகாகக் குறிப்பிடுகின்றார். பாரதப்போரின் போது தருமம் நிலைக்க தனது சங்கெடுத்து போரை ஆரம்பித்து வைத்தானாம் கண்ணன்.

மாதவனாம், கேசவனாம் அனந்தசயனனை நினைந்து அவனை அடைய மீரா இசை மீட்டாளாம். மூன்று வயதில் ஞானப்பால் உண்ட ஞானக்குழந்தையாம் ஞானசம்பத்தர் இறைவனிடம் "பொற்றாளம்" பெற்று இறைவனின் புகழைப்பாடி மகிழ்ந்தார்.

"திருவாசகத்திற்கு உருகாதவர் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்பதற்கிணங்க மணிமொழியாரின் மணிவாசகங்கள் இறைவனின் புகழைப்போற்றி நிற்கின்றன. "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" என்று நாவுக்கினிமையாகப்பாடி 'நாவுக்கரசர்' என இறைவனால் போற்றப்பட்டார்.

சீதாப்பிராட்டியைக் கவர்ந்து சென்ற இராவணன் ஒரு முறை மகாதேவனின் திருக்கைலாயமலை அவனது வழியை தடுத்தது. இதனால் கோபம்கொண்ட இராவணன் கைலயங்கிரியைப் பெயர்க்க முற்படும்போது எம்பெருமான் தனது பெருவிரலால் இராவணனையும் மலையையும் நசுக்கினார். தனது அகங்காரத்தையும், தவறையும் உணர்ந்த இராவணன் தனது பத்துத் தலையில் ஒன்றைக் கொய்து, பத்துக்கரங்களில் ஒன்றை ஒடித்து நரம்புகளை வீணையாக மீட்டு திருக்கைலாய நாதன் மீது பிரியமான சாமவேத கானம் பாடி இறைவனை மகிழ்வித்தானாம்.

அக்காலத்தில் பாணர்களின் முக்கிய இசைக்கருவி யாழ். பாணர் சமூகத்தைச் சேர்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். சோமசுந்தரக் கடவுள் இவருக்கு தங்கப்பலகையிட்டு ஆலயத்தினுள் அவர்முன் அமர்ந்து யாழிசைக்கச் சொன்னதாகக் கூறப்படுகிறது. அதே போல் பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருப்பாணாழ்வாரை திருவரங்கப் பெருமான் தன் அருகில் இருத்தி பாசுரம் பாடக் கேட்டதாகக் கூறப்படுகிறது.

கருணைக்கடலான இறைவன் பல வடிவம் தாங்கி அருள் பாலிக்கும் திருக்கோலங்களை அலங்கரிக்க இசைந்து, இசையையும் இசைக்கருவிகளையும் ஏற்று ஆன்மாக்களாகிய எமக்கு கருனை புரிகின்றான்.

# இந்துசமயம் சித்தரிக்கும் பெண்ணின் பெருமை

"பெரியபுராண பெருநாவலர்" துரை நமசிவாயம்

## மெய்ஞ்ஞானமென்றால்:

இன்றைய வாழ்க்கை வசதிகளுக்குக் காரணமாக இருக்கும் கருவிகள் அனைத்துமே விஞ்ஞானத்தின் விளைவுகள் தான். ஆனால் அந்த வசதிகளே கூட நம்மை அசதிக்கு உள்ளாக்குவது உண்டு. மனத்தைக் குடைந்து நம் குணத் தொகுதிகளின் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துகின்றன.

அந்த நிலையில் நம் உள்ளத்தில் நம்பிக்கை ஊற்று சுரக்க வேண்டும் அல்லவா? அந்த நம்பிக்கை உணர்வு ஊற்றெடுத்தாலும் வற்றிப்போகாமல் இருப்பது அவசியம் அல்லவா? அந்த தேவையைப் பூர்த்தி செய்வது ஒரு வித ஞானம் அல்லவா? அந்த ஞானத்திற்குப் பெயர் தான் மெய்ஞ்ஞானம்.

இந்த மெய்ஞ்ஞானத்தை நமக்கு அள்ளித் தருபவை எவை? அவையே சமயங்கள் ஆகும். எல்லாச் சமயங்களுமே தாய்மையை போற்றுகின்றன.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்றார் வள்ளுவப் பெருந்தகை. பெண்ணை முன்னிறுத்தி பெருமைப்படுத்திய சமயம் இந்து சமயம் என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு.

இறைவியையே சக்தி வடிவமாகச் சித்தரிப்பதே இந்து சமயம். எனவே தான் "சக்தியில்லையேல் சிவமில்லை" என்ற உலக வழக்கும் உண்டாயிற்று. "மாதொருபாகன்" என்று சிவனைச் சுட்டி சொல்கிறது இந்து சமயம்.

## பிரசவம் பார்த்த தாயுமானவர்:

பல நூற்றாண்டுகளுக்கு முன் நடந்த ஒரு செய்தி: திருச்சிராப்பள்ளியில் வசித்த ஒரு பெண்ணுக்குக் பிரசவம் பார்க்கவேண்டும். உதவிக்கு வருவார் இல்லை. சிவபெருமானே தாய் உருக்கொண்டு உதவிக்கு ஓடோடி வருகிறார். பிரசவம் பார்க்கிறார். எதையும் எதிபாராது, கருணை காட்டி உருமாற்றிக் கொண்டு உதவி செய்தது யார் என்பது பின்னர் தெரியவருகிறது. அவரே திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டை திருக்கோயிலில் வீற்றிருக்கும் தாயுமான ஈசன்.

## அருந்ததியின் ஆயிரம் வகை காய்கறி விருந்து:

வசிஷ்டர் மிகப் பெரிய ஞானி, அவருடை தந்தையின் நினைவுநாளுக்குச் சடங்குகள் செய்ய வேண்டும். சடங்குகள் செய்ய சரியான நபர் தேவை. அவரால் மிகவும் மதிக்கப்படுகிற விசுவாமித்திரரை அழைக்க ஆவல்கொண்டார். விசுவாமித்திரரது விருப்பத்தை அறிய வேண்டி, அவரது இல்லத்திற்குச் சென்றார். உரிய மரியாதைகள் செய்து விசுவாமித்திரரிடம் செய்தியைச் சொன்னார். விசுவாமித்திரரும் வருவதாக ஒப்புக் கொண்டார். ஆனால் என் நிபந்தனையை ஏற்கவேண்டும் என்றார். சொல்லுங்கள் என்றார் வசிஷ்டர்.

"சிரார்த்த உணவு என் விருப்பத்திற்கு அளிக்கப்பட வேண்டும். காய்கறிகளின் எண்ணிக்கை ஆயிரத்தெட்டு இருக்கவேண்டும். இதற்குச் சம்மதித்தால் வருகின்றேன்" என்றார் விசுவாமித்திரர்.

வசிஷ்டர் குழப்பத்திற்குள்ளானார். "ஒரு காய்கறிச் சந்தையை விலைக்குப் பேசினால்கூட இத்தனை காய்கறிகள் தேறுமா?" என்று ஒரு கணம் யோசித்தார். "மன்னிக்கவும் இன்னொரு முறை வந்து அழைக்கிறேன்" என்று கூறி விட்டு வீட்டிற்குச் சென்றார்.

தனது தர்ம பத்தினியான அருந்ததியை அழைத்தார். விசுவாமித்திரர் தெரிவித்த நிபந்தனையை எடுத்துரைத்தார். காய்கறிகள் ஆயிரத்தெட்டு தேடி நம்மால் விசுவாமித்திரரை உபசரிக்க முடியுமா? என்று கலந்து ஆலோசித்தார் "கவலைப்படாதீர்கள், உடனே புறப்பட்டுப் போய் மாமுனிவர் விசுவாமித்திரரைச் சந்தியுங்கள். ஆயிரத்தெட்டு காய்கறிகளுடன் உண்பிக்க முடியும் என்று சொல்லுங்கள்" என்றார்

அருந்ததி. "நடக்கிற காரியமா இது? நன்றாக யோசித்து சொல் என்றார் பிரம்மரிஷி வசிஷ்டர். "நிச்சயம் ஆயிரத்தெட்டு காய்கறிகளுடன் விருந்து தயார் செய்து பரிமாற முடியும் தயங்காது விசுவாமித்திரரைக் குறித்த நாளில் வரச் சொல்லுங்களென்றார்" அருந்ததி.

அடுத்த நாள் விசுவாமித்திரரைத் தேடிப்போய் நிபந்தனையை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார் வசிஷ்டர். விசுவாமித்திரரோ விடுவதாக இல்லை. "ஒரு காய் வகை குறைந்தாலும் விருந்தை உதறிவிட்டு எழுந்துவிடுவேன்" என்றார். வசிஷ்டரும் சரி என்று சென்று விட்டார்.

சடங்கு நடக்கவேண்டிய நாளில் விசுவாமித்திரர் வசிஷ்டரின் வீட்டிற்கு வந்தார். அருந்ததி அன்புடன் உணவு பரிமாறும்போது இலையில் ஆயிரத்தெட்டு காய்கறிகள் வந்து சேருகின்றனவா என்று ஆவலுடன் பார்த்துக் கொண்டேயிருந்தார். அருந்ததி ஒரு நிலையில் இலையில் உணவு பரிமாறுவதை நிறுத்தி விட்டு "எல்லோரும் சாப்பிடுங்கள்!" என்று இனிய முகத்தோடு வேண்டினார்.

விசுவாமித்திரர் மிகவும் கோபக்காரர். பதினோரு வகை காய் கறிகள்தான் வைக்கப்பட்டிருக்கிறது. நான் கூறியபடி ஆயிரத்தெட்டு காய்கறிகள் வைக்கப்பட வில்லையே! ஏன்? என்று கேட்டார்.

"தாங்கள் நிரம்ப அறிவுடையவர். சாத்திரங்கள் கற்றறிந்த மேதை" என்று நயமாகப் பேச்சைத் தொடங்கினார். "பதினொரு காய்கறிகளில் முதல் எட்டுக் காய்கறிகள் ஒவ்வொன்றும் தனித்தனியே கணக்கீடு செய்யப்படவேண்டியவை. மீதமுள்ள "பாகல்", பிரண்டை", "பலாக்காய்" மூன்று ஆயிரம் காய்களுக்கு ஒப்பானவை. பாகற்காய் நூறு காய் கறிகளுக்கும், பிரண்டை முந்நூறு காய்கறிகளுக்கும், பலாக்காய் அறுநூறு காய்கறிகளுக்கும் சமமானவை என்று சாத்திரம் சொல்லுகிறது. ஆதலால் ஆயிரத்தெட்டு காய்கறிகளுடன் உணவு அளிக்கப் பட்டிருக்கிறது. தங்கள் நிபந்தனை நிறைவேற்றப் பட்டதால் தாங்கள் உணவு ஏற்கத் தயங்கமாட்டீர்கள் அல்லவா" என்றார்.

"ஆமாம்! நீங்கள் கூறுவது சரியே! உங்களது நுண்ணறிவு கண்டேன்; மகிழ்ச்சி, அன்னபூரணியே நீ வாழ்க!" என்று மனம் நெகிழ்ந்து பாராட்டி விருந்து உண்ணத் தொடங்கினார் விசுவாமித்திரர்.

"பெண்ணறிவு நுண்ணறிவு" என்பதை நிரூபித்தவர் அருந்ததி. அருந்ததி கற்புக்கரசி. இன்றைக்கும் இந்து சமய மக்களின் திருமண விழாக்களில் அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் சடங்கு உண்டு. அருந்ததி விண்மீனாக வானில் ஒளிவிட்டுக் கொண்டு இருப்பதாக சமய நம்பிக்கை.

## மங்கையர்க்கரசியின் மதி நுட்பம்

தமிழகத்தில் சமண சமய செல்வாக்கு வேரூன்றத் துவங்கிய நேரம். மதுரையை ஆட்சி செய்த கூன் பாண்டிய மன்னன் சமண மதத்திற்குத் தாவினான். அவனது இல்லத்தரசி மங்கையர்க்கரசியோ தான் பிறந்து வளர்ந்த சைவ சமயத்திலேயே இருந்தாள். சைவ சமயத்தின் உயிர் நாடியாகப் போற்றப்படும் நால்வரில் ஒருவராகிய திருஞானசம்பந்தரை மதுரைக்கு எழுந்தருளச் செய்கிறார் மங்கையர்க்கரசியார். மங்கயர்க்கரசியாரின் வேண்டு கோளுக்கிணங்கி அவளது கணவனை வருத்திய நோயைக் குணப்படுத்தினார் திருஞானசம்பந்தப் பெருமான். மன்னன் மகிழ்ந்து சமண சமயத்திலிருந்து விலகி சைவத்திற்கே மீண்டும் வந்து விட்டான். "மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி" அல்லவா? பாண்டிய நாடு முழுவதுமே சமணத்தின் ஆதிக்கத்திலிருந்து விலகி, தாய்ச்சமயமாகிய சைவத்திற்குத் திரும்பக் காரணமாக அமைந்தது. மங்கையர்க்கரசியாரின் மதி நுட்பம் நிறைந்த இவ்வரிய செயலை எப்படிப் புகழ்ந்துரைப்பது! தெய்வச் சேக்கிழார் தாம் எழுதிய பெரிய புராணத்தில் இவ்வரலாற்றினைத் தெரிவிக்கிறார்.

மங்கயர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர் திருக்குலக் கொழுந்து வளைக் கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளினாலே
இருந்தமிழ் நாடுற இடர் நீக்கித் தங்கள்

பொங்கொளி வெண்டிருநீற்று பரப்பினாரைப்
போற்றுவார் கழலெல்லாம் போற்றலாமே.
(மங்கையர்க்கரசியார் புராணம்)

## கற்புக்கரசி கண்ணகி:

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் சித்தரிக்கும் செய்தியை நாம் அறிவோம். கண்ணகி பிறப்பால் தெய்வப் பெண் அல்ல. வளர்ப்பாலும் தெய்வப் பெண் அல்ல. ஆனால் வாழ்ந்துகாட்டிய முறையால் விண்ணோரும் மண்ணோரும் வணங்குகிறார்கள். தன் கணவன் கோவலன் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனால் கள்வன் என குற்றம் சாட்டப்பட்டுக் கொலைசெய்விக்கப்படுகிறான். அதனை எதிர்த்து, கொலையுண்ட கோவலன் தனது கணவன். குற்றமற்றவன் என்பதை நிரூபித்து மன்னனை உணரச்செய்கிறாள். உணர்ந்த அந்நிலையில் மன்னன் உயிர் பிரிகிறது. கண்ணகியின் பெருமையை அறிந்த சேர மன்னன செங்குட்டுவன் கண்ணகிக்கு கோயில் எழுப்புகிறான். இவ்வரலாறு இளங்கோவடிகளே கூறுவதுபோல "உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்" என்ற நிலையை விளக்குவதாக அமைகிறது. இன்று இந்துசமய மக்களால் வணங்கப்படும் மாரியம்மன் தெய்வம் கண்ணகியே என்று இன்றும் வழக்காற்றில் உள்ளது.

ஆண்டாள் எழுதிய திருப்பாவை வைணவ சமய இலக்கியமாகப் போற்றப்படுவது மட்டுமல்ல வைணவர்களுக்கு ஆண்டாள் வழி காட்டும் தெய்வமாகவும் விளங்கி வருகிறார்.

பெண்களின் பெருமை (நவராத்திரி விழா)

சிவனுக்கு ஒரு இரவு மட்டுமே விழா நடைபெறும். ஆனால் சக்தியின் வடிவங்களாகிய லக்ஷ்மி, பார்வதி, சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்களுக்கு "நவராத்திரி எனப்படும் ஒன்பது இராத்திரி" விழா ஒன்பது நாட்கள் விழா நடைபெறுதல் கண்கூடு.

இந்து சமயம் துறவு நிலையை விட இல்லறத்தையே வலியுறுத்துகிறது. பெண்ணுக்கு பெருமை தந்து இணைந்து வாழும் நிலையையே என்றும் விரித்துப் பேசுகிறது! இறைவன் இறைவியோடு இணைந்து இருக்கும் திருக்கோலத்தை வணங்குவதால் -

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை
கண்ணினல் அஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே"

என்கிறார் திருஞானசம்பந்தப் பெருமான்.

இணையற்ற பெண்களை மனித நிலையில் இருந்து தெய்வ நிலைக்கு உயர்த்தியிருக்கிறது இந்துசமயம். இல்லத்தரசிகளேயாயினும் அவர்களது அறிவாற்றலை கணவன்மார்கள் அங்கீகரித்து கலந்தாலோசித்திடும் செய்தியை விளக்குவது இந்து சமயம். சமயப் பாதுகாப்புக்குப் பெண்களும் அரண் செய்திருக்கிறார்கள் என்பதை விளக்குகிறது இந்து சமயம். சுருங்கச் சொன்னால் இந்து சமயம் வாழையடி வாழையாகப் பெண்ணின் பெருமையை கண்ணைப்போல் என்றும் போற்றிவருகிறது.

## தாய்மையின் பெருமை

"இந்துவின் குடும்பம் என்பது தாய்மையையே தலையாகக் கொண்டது. அங்கிருந்துதான் ஒவ்வொரு கிளையும் தொடங்குகிறது. தாயை மகன் நேசிப்பதுபோல், மருமகளும் நேசித்தாக வேண்டும். தாய் வேர், மகன் மரம். அந்த மரக்கிளையில் வந்தமரும் பறவை தான் மனைவி. தன்மீது விளையாட அந்தப் பறவைக்கு இடம் கொடுத்தால் மரத்தின் வேரை அது கொத்தித் தின்னமுடியாது."

- விவேகானந்தர் -

# இந்து மதமும் நாமும்

கலாபூஷணம் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு **B.A, M.A**

எமது வாழ்க்கைக்கு சமயத்தை யாம் பற்றுக்கோடாக அமைத்தாகவேண்டும். சமயம் என்பது ஒரு மொழியாக எமக்கு வழிகாட்டியாக அமைந்தாக வேண்டும். அப்போதுதான் நாம் பிறந்த பயனை அடையமுடியும். மண்ணில் நல்ல வண்ணம் வாழமுடியும். சமயம் பக்தி மார்க்கமாக, அன்பு வழியாக எமக்கு இறையைக் காட்டி நிற்கின்றது. நாம் நல்லொழுக்க நெறியில் வாழ்ந்து நன்மையடைய வேண்டுமேயானால் எமக்கு இறையின் துணை அவசியமாகின்றது. இறையை வணங்கிப்போற்றித் துதித்து வழிபட்டு நாம் நலமடையவே சமயங்கள் ஏற்பட்டன. இறை அருள்பெற்ற மெய் அருளாளர்கள் தத்தமது நாட்டின் கல்வி ஒழுக்கம் வழக்கம் இவற்றிற்கமைய சமய நெறிகளை அமைத்தனரே தவிர ஒவ்வொருவரும் தமது மதமே உயர்ந்ததென வாதிடவோ அல்லது போராடவோ அல்ல. மதங்களுக்குள் வழிபாட்டு நெறிகளில் முறைகளில் வேறுபாடு காணப்படின் அனைத்து மதங்களின் சாராம்சமும் ஒன்றே. உண்மை ஒன்று. அது பல வழிகளில் விளக்கப்படுகின்றது.

எமது இந்து மதத்தை நோக்கின் சகல மதங்களிலும் இந்துமதம் தொன்மை வாய்ந்ததாகும். இத்தொன்மைக்கு பழம்பெரும் நூல்களும், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும், கல்வெட்டுக்களும் வரலாற்றுக் குறிப்புகளும், வழிபாட்டு முறைகளும் ஆதாரமாய் அமைகின்றன.

மேனாட்டவரான டாக்டர் மக்கே, சேர் ஜோன் மார்ஷல் போன்றவர்களது ஆராய்ச்சிக் குறிப்புகள் மூலம் ஆரியர் வருகைக்கு முன்னரே பஞ்சாப் பிரதேசத்தில் இந்து நதிக்கரையை அண்டி அமைந்த □ரப்பா, மொகஞ்சதாரோ போன்ற நகரங்களில் இந்து சமய வழிபாடு இருந்தமைக்கு சான்று பகர்கின்றன, இவ்விடங்களில், இந்து சமயத்தைச் சார்ந்த இலச்சினைகள், முத்திரைகள், உருவங்கள், பெண்தெய்வ வடிவங்கள் இலிங்கங்களின் கற்கள், நந்தி வடிவங்கள், மரம், நாகம், பறவை ஆகியன சிவ வழிபாட்டின் ஆரம்ப நிலையைக்காட்டி நிற்கின்றன. முத்திரை ஒன்றில் காலைத்தூக்கி நின்றாடும் நடராஜ உருவமும் மற்றொரு முத்திரையில் தியான வடிவ ஆண் வடிவம் அமர்ந்திருக்க, அதைச்சுற்றி யானை, புலி, எருது, மான்கள் போன்றவற்றின் உருவங்கள் காணப்படுகின்றன. இவை அங்கு சிவ வழிபாடு நிலவியமைக்குச் சான்றாக அமைகின்றன. அங்கு வாழ்ந்த மக்களது வீடு, வாசல், குழியலறைகள், வீதி அமைப்புக்கள், நீர் வாய்க்கால்கள் ஆகியவற்றின் இடிபாடுகளை நோக்குமிடத்து இம்மக்கள் மிக உயர்ந்த அகத்துாய்மையுடனும் புறத்துாய்மையுடனும் வாழ்ந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

இத்தகைய தொன்மை வாய்ந்த வரலாற்றுப் பெருமை வாய்ந்த எமது மதத்தின் ஆதார நூலாக - மூல இலக்கியமாக - விளங்குவது வேதம். வேதங்கள் ரிஷிகளின் நேரடியான இறை தரிசன அனுபவத்தின் மூலம் வெளிப்பட்டவையாகும். மக்களுக்கு இவை புரியாத காரணத்தால் வேதம் என்றும் மனிதனால் ஆக்கப் பெறாமையால் “அபௌரு சேயம்” என்றும், ஏட்டில் எழுதப்பெறாது குரு சிஷ்ய முறையினாலேயே செவி வழியாகக் கேட்கப்பெற்று வருவதால் சுருதி என்றும் நாமங்களையும் பெற்றுள்ளது.

வேதங்கள் அளிக்கும் உயர் உண்மைகள் எவை என நோக்கின் ஆங்கு பக்திக்கோட்பாடு இறை நம்பிக்கை கருமக்கோட்பாடு யாகங்கள் கிரியைகள் வழிபாட்டு முறைகள் வருணப் பாகுபாடு மறுபிறப்புக் கோட்பாடு போன்றவை கூறப்பட்டுள்ளன. வேதத்தை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வேத வியாசர் வகுத்துள்ளார். ஒவ்வொரு வேதமும் மந்திரம், பிராமணம், ஆரணியம், உபநிடதம் என நான்கு உட்பிரிவுகளாக கொண்டுள்ளன. இவற்றுள் உபநிடதம் நிறைந்த தத்துவக் கருத்துக்களை எமக்குத் தந்துள்ளன. இவற்றை அடிப்படையாகக்கொண்டே சைவ சித்தாந்த, வேதாந்த நூல்கள் ஆக்கம் பெற்றுள்ளன. இவற்றை விட இத்தத்துவ உண்மைகள் மிக எளிமையான, விரிவான வகையில் விளங்க வைக்கும் கதையமைப்பில் புராணங்களும், இதிகாசங்களும் ஆக்கப்பட்ட நூல்களாகும்.

மகாபாரதத்தில் இடம் பெறும் பகவத்கீதை உபநிடதத்தின் சாராம்சமேயாகும். புராணங்கள் இறைவழிபாட்டு முறைகளையும் ஈசன் அருட் திறன்களையும் கூறுகின்றன. தொடர்ந்து தர்ம சாஸ்த்திரங்கள் எமக்கு நிரம்பிய அருட்கருத்துக்களைத் தந்துள்ளன. இங்கு விஷேடமென்னவெனின் இவை வேதம் கூறும் உண்மைகளை எம்மால் எளிதில் புரிந்து கொள்ள உதவி நிற்கின்றன. அடுத்து வேதங்கள் கூறும் உண்மைகளை மீண்டும் எளிதாக்கி பண்ணோடு, பாமர மக்களும் புரிய படித்து ஈடேற வழிகாட்டி நிற்கின்றன. நாயன்மார்களது தேவார, திருவாசக பாடல்கள் ஆழ்வார்கள் தந்தருளிய பிரபந்தங்கள் என்பனவாம்.

வேதங் கூறும் தத்துவக் கருத்துக்களை யாம் புரிந்து வைத்தால் மாத்திரம் போதாது. அவற்றைச் செயலாற்றி நாம் ஆத்மீக உயர்வுபெற எமக்கு வழிகாட்டியாக உதவி நிற்பவை ஆகமங்கள். இங்கு சைவர்களுக்குரிய ஆகமங்கள் சிவாகமங்கள் எனவும், வைணவர்களுக்குரிய ஆகமங்கள் பஞ்சராத்திரம் எனவும், சக்தியை முழுமுதற்கடவுளாக வழிபடும் சாக்தர்களுக்குரிய ஆகமங்கள் தந்திரங்கள் என்றும் அழைக்கப்படும்.

இதற்கு மேலாக கிரியைகள் ஆற்றல், ஆலயங்கள் அமைத்தல் விழாக்கள் கொண்டாடும் முறைகள்பற்றி யாம் ஆகமங்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். பொதுவாக வேதத்தைப் பசுவிற்கும் ஆகமங்களை அதன் பாலுக்கும் ஒப்பிடுவது வழக்கம். பால் எவ்வண்ணம் உடலுக்கு சத்துணவு ஆகின்றதோ அது போன்று ஆகமங்கள் எமது ஆன்மீக வளர்ச்சிக்கு வேண்டிய நன்னெறிகளை செயற்பாட்டில் கொண்டு வரக்காட்டி உதவுகின்றன. வாழ்க்கைகுரிய நன்னெறிகளை காட்டும் ஆகமப்பொருளை முதன் முதலாக தமிழில் கூறிய நூல் திருமூலரின் திருமந்திரங்களாகும். வேதங்களில் கூறப்பெற்ற யாகங்கள் காலப்போக்கில் விரிவடைந்து அபிடேகங்கள், பூசைகள், அர்ச்சனைகள், ஆராதனைகள், பண்ணிசை ஓதல், விழாக்கள், உபசாரங்கள், அனுட்டானங்கள் என வளர்ச்சியடைந்தன. ஆலயங்கள் இல்லங்கள் ஆகிய இரண்டிலும் இடம்பெறும் கிரியைகள் சடங்குகள் ஆகியவற்றிற்கு ஆகமங்களே வழிகாட்டியாகவுள்ளன.

இவற்றோடு இந்துமதம் நான்கு புருடார்த்தங்களான வாழ்க்கையின் நான்கு நிலைகளைப் பற்றியும் தெளிவாகக் கூறியுள்ளன. அவையாவன மனிதனது மாணவப் பருவமான பிரம்மச்சரியம், தொடரும் இல்லற நிலைகளான கிரகஸ்தம், மூன்றாவது நிலையான வானப்பிரஸ்தம், இறுதி நிலையான துறவி மேற்கொள்ளும் சந்நியாசம் ஆகியன பற்றியும் எமக்கு விரிவான விளக்கம் தந்துள்ளன.

இந்த வகையில் இந்துமதம், இந்துசமயியான ஒருவன் தன் வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டிய நிலைகளை ஒரு மரத்தில் அரும்பு மலராகி, காயாகி, கனியாவதுபோல் படிப்படியாக மேற்கொண்டு மானிட இலட்சியத்தை உறுதியாய் அடைய வழிகாட்டி நிற்கின்றது. இறுதி நிலையான பக்குவத்தை அடைய ஒவ்வொருவருக்கும் தூய மன உணர்வு வேண்டும்; பக்குவம் வேண்டும் நாம் எந்தக் கொள்கையைப் பின்பற்றுகின்றோம் என்பதல்ல முக்கியம். அதனைத் தொடர்ந்து நம்பிக்கையுடன் அவற்றைப்பின் பற்றி இறுதிவரை வாழ்தலே முக்கியம். இந்த வழிபாட்டு முறைகளை வயது வித்தியாசம் பாராது குழந்தைப் பராயம் தொடங்கி பருவத்திற்கேற்றவாறு நாம் வாழப்பழகியாக வேண்டும்.. எனவே காலம் வரும்; சமய வாழ்வு வாழுவோம் என்று பின் போடக்கூடாது. எமது குழந்தைச் செல்வங்களுக்கும் அதன் மிக முக்கியத்துவதை உணர்த்தி வாழப்பயிற்சி அளித்து எல்லோரையும் ஆத்மீகத்துறையில் ஆரோக்கியமாக அமைக்க முன்வரவேண்டும் காரணம் இந்துமதம் இதையே மீண்டும் மீண்டும் கூறி வருகின்றது. வாழ்க்கை வேறு சமயம் வேறல்ல. வாழ்வோடு இணைந்ததுதான் சமயம். வாழ்க்கையை வளம்படுத்துவதும் சமயம்தான். இத்தகையதோர் வாழ்வினையே எமது மதப்பெரியார்கள் வாழ்ந்து காட்டியுள்ளார்கள். வாழ்ந்தும் வருகின்றார்கள்.

## மனுவல் யேசுதாசன்

கனடிய சட்டத்தரணி

# Manual Jesudasan

**Barrister, Solicitor & Notary Public**
**Solicitor (England Wales), Attorney at Law (Sri Lanka)**
**Former Senior State Counsel (Seychelles)**

| | |
|---|---|
| **Real Estate Law** | - வீடு கொள்வனவு, விற்பனவு செய்தல் |
| **Immigration & Refugee Law** | - குடிவரவு அகதிச் சட்டம் |
| **Criminal Law** | - குற்றவியல் சட்டம் |
| **Family Law** | - குடும்பச்சட்டம் |
| **Business Law** | - வியாபார, வர்த்தகச் சட்டம் |
| **Power of Attorney** | - அதிகாரக் கையளிப்பு |
| **Civil Litigation** | - சிவில் வழக்குகள் |

## Legal Aid Certificate Accepted

சட்ட உதவிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

## Tamil, English Translations undertaken

தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகள் செய்து கொடுக்கப்படும்.

**80, Corporate Drive Suite # 210**
**Scarborough, Ontario M1H 3G5**

# Tel: 416 444 8070
# Fax: 416 444 9105

**Web: mjlawyers.com**
**Email: mjesudasan@mjlawers.com**

இட்டமுடன் தமிழை இனிது வளர்ப்போம்
சட்டப் பிரச்சினையை சரிவர நாம் தீர்ப்போம்
சட்ட உதவிச் சான்றிதழ்கள் தரின் நாம் ஏற்போம்
குற்ற குடிவரவுப் பிரச்சினைகள் பொறுப்பேற்போம்.

# திருவெம்பாவை

சாமினி சாந்தலிங்கம்

ஆதியும் அந்தமுமிலா அரும்பெருஞ் சோதியாகிய சிவபெருமானின் அளக்கலாகாப் பெரும் புகழை வீதி தோறும் பாடிச்சென்று எல்லோரையும் துயிலெழுப்பி ஆலயத்துக்கு அழைத்துச்சென்று திருவாசகம், திருவெம்பாவை பாடிப் பணிந்து அவனருளைப் பெறும் அற்புதம் நிறைந்தது திருவெம்பாவை.

மார்கழி மாதத்தில் சஷ்டியும் சதயமும் இணையும் நன்னாளில் தொடங்கி, திருவாதிரையுடன் முடிவடையும் விரதம் திருவெம்பாவையாகும். சிவனுக்கு உரிய விரதங்கள் எட்டினுள் தலையாயது திருவெம்பாவை என்பார்கள். இத்தனை மாதங்கள் இருக்க ஏன் இந்தக் குளிர்காலத்தில் இது நடைபெறுகிறது என்ற வினா இயல்பாகவே எழும் ஒன்றுதான்.

மார்கழி மாதம் மிகப் புனிதமானது. இறைவன் திருவருளை மிக எளிதாகப் பெறலாம். புற உடம்பைப் புனிதமாக்க காணுமிடம் எல்லாம் நீர் நிறைந்திருக்கும். அக உடம்பை புனிதமாக்க ஆலயங்கள் தோறும் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மார்கழி மாதத்தின் மகத்துவத்தை“மாதங்களில் நான் மார்கழி” என கிருஷ்ண பரமாத்மா கீதையில் கூறியுள்ளதனாலும் காலங்களில் அவள் வசந்தம், கலைகளிலே அவள் ஓவியம், மாதங்களில் அவள் மார்கழி எனக் கவியரசர் கண்ணதாசனின் பாடலினாலும் அறியமுடிகிறது.

மார்கழி மாதம் மிகப் பழங்காலத்திலிருந்தே இறை வழிபாட்டுக்கு உரிய சிறந்த மாதமாகக் கொள்ளப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. உலகில் உள்ள அநேக சமயங்கள் மார்கழி மாதத்தைப் புனித மாதமாகப் பிரகடனப்படுத்தி, இறையருளை வேண்டி நிற்பதைக் காணக்கூடியதாய் இருக்கிறது. கிறிஸ்தவர்கள் இம்மாதத்தில் கிறிஸ்து பெருமான் பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர். வைஷ்ணவ சமயத்தினர் மார்கழி சுக்லபட்ச ஏகாதசியை மோட்ச ஏகாதசி என்றும், வைகுண்ட ஏகாதசி என்றும் ஏற்றிப்போற்றிக் கொண்டாடுகின்றனர். ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதம் அனுட்டித்து வழிபடுவர். நாம் அதாவது சைவப் பெருமக்கள் திருவெம்பாவை விரதம் இருந்து இறையருளை இறைஞ்சுகின்றோம்.

சைவத் திருமுறைகளில் உலகம் உய்யத் தோன்றி அருளிய மணிவாசகப் பெருமானின் திருவாசகப் பாடல்கள் உயிருக்கும் உள்ளத்திற்கும் உறுதிசேர்க்க வல்லன. “திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்” என்பது அனுபவ வாக்கு.

“வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை
கலந்து
வான்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே”

என்பது வடலூர் வள்ளல் பெருமான் திருவாய்மொழி. மணிவாசகப் பெருமானின் திருவாய்மொழி அனைத்தும் படிக்குந்தோறும் பக்திவெள்ளம் பீறிட்டு ஓடும். மெய் சிலிர்க்கும். அவரது திருவாசகத்தைத் தேன் என்பர். அது படிப்பவரின் ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி ஆனந்தமாய அன்பினில் ஈடுபடச் செய்யும் ஓர் அற்புத மருந்து. அதிலும் தேனல்லவா? சுவைக்குச் சொல்லவும் வேண்டுமோ! அத்தகு பெருமைமிகு திருவாசகத்துள் திருவெம்பாவை ஒரு தனிரகம். எல்லாம்வல்ல எம் பெருமானின் அருமை பெருமைகளை எடுத்துக்காட்டும் அற்புதப் பகுதி.

இருபது பாடல்களைக் கொண்டது திருவெம்பாவை. ஒவ்வொன்றின் ஈற்றடியும் ஏலோர் எம்பாவாய் என முடியும்.

“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியை”
“பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்”
“முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்து எதிரெழுந்து”
“ஒள்நித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ”
“மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்”
“மானே நீ நென்னலே நாளைவந்து உங்களை”
“அன்னே இவையும் சிலவோ பல அமரர்”
“கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்”

என உள்ள எட்டுத் திருப்பாடல்களிலும் சிவபெருமானது அருமை பெருமை போன்ற தன்மைகளை வெளிப்படுத்தி அக்கம் பக்கத்தில் உள்ள தோழியரைக் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப்

போக்காது விரைந்து துயிலை எழுப்பும் வகையிலும் அடுத்துவரும் -

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே",

"பாதாளம் ஏழினும் கீழ் சொற் கழிவுப் பாதமலர்"

"மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்ன"

எனத் தொடங்கும் மூன்று பாடல்களிலும் எம்பிரானைப் புகழ்ந்த வண்ணம் வண்டுகள் மொய்க்கும் தேன் மலர்த் தடாகத்துக்குச் செல்லும் வகையிலும், அடுத்து,

"ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்",
"பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்",
"காதார் குழை ஆட பைம் பூண் கலனாட ஆடே",
"ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம் பெருமான்",
"முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையான்",
"செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்",
"அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்",
எனத் தொடங்கும் ஏழு பாடல்களிலும் இறைவனை எந்தெந்த வகையில் புகழ முடியுமோ அவ்வாறே புகழ்ந்தும், நாடு செழித்து நலம்பல விளைய மழையை வேண்டி நீராடும் வகையிலும், இறுதியான "உம்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று" தொடங்கும் பாடலிலும் "போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்" என்று தொடங்கும் பாடலிலும் திருக்கோயில் சென்று அப்பாவையர் தம் கற்புநெறி தவறாத உருக்குப்போன்ற உறுதியான நிலையை எடுத்துக் கூறி அதாவது "எங்கள் பெருமான் உனக்கொன்று உரைப்போம் கேள்! எம்கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க! எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க!" என்றவாறு கூறி இறைவனை வாழ்த்தும் வகையிலும் அமைந்துள்ளன.

திருவெம்பாவையின் தத்துவப் பொருள் யாது என்று நோக்கின் ஆன்மாவானது மலமாகிய துன்ப இருளில் கிடந்து அல்லற்படாது விண்ணுக்கொரு மருந்தாக, வேத விழுப் பொருளாக விளங்கும் எம்பெருமானது திருவருளைப் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு பெற்றிட வேண்டும் என்பதேயாகும். அதனை மிக அருமையாகத் தெரிவிக்கும் பாடலாக "பைங்குவளைக் கார்மலரால்" என்ற பாடல் விளங்குகிறது. அப்பாடலில்,

"தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மருவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்ப சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடே லோரெம் பாவாய்"

என்று கூறப்பட்டிருப்பதன் மூலம் அனைத்தையும் அறியக்கூடியதாய் உள்ளது. திருவெம்பாவை குறிப்பாகக் கன்னிப் பெண்களுக்குரிய நோன்பையே குறிப்பதனால் "பாவை நோன்பு" அல்லது மார்கழி நோன்பு" என்றும் அழைக்கப்படுகிறது.

திருவெம்பாவைக் கடைசி நாளாகிய திருவாதிரை மிகமிக முக்கியமான ஒன்று. அன்றுதான் தில்லையம்பலத்திலே நடராசப் பெருமானின் தரிசனம் நடைபெறும். திருவாதிரை நட்சத்திரத்திலே அது நடைபெறுவதால் "ஆருத்திரா தரிசனம்" எனப் பெயர்பெற்றுள்ளது. நடராசப் பெருமானின் திருநடனத்தை திருமூலர், காரைக்காலம்மையார், பதஞ்சலி, வியாக்கிரபாதர் போன்ற மெய்யடியார்கள் பல கோணங்களில் கண்டு களித்திருக்கிறார்கள். திருமூலநாயனார் இருந்த இடத்திலிருந்தே இந்நடனத்தைக் கண்டு அனுபவித்துள்ளார் என்பார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள் இந்நடனத்தைக் காண மீண்டும் பிறவி எடுக்க வேண்டும் என்றார். அவர் தாம் கண்ட கோலத்தை,

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மானிலத்தே"

என அருமையாக எடுத்துக் காட்டியுள்ளார். எனவே, பல்வகைத் திருவும் நிறைந்த திருவெம்பாவை நோன்பை மனம், மொழி, மெய்யால் உய்த்துணர்ந்து, பாடிப் பரவி உன்னத பதவியைப் பெற்றிடுவோமாக".

# சக்தியின் மகாத்மியம்

கொத்தணி அதிபர் திரு.ச.செல்லத்துரை



வைதிக சமயங்கள் யாவினுள்ளும் சக்தி வழிபாடு உயரிய ஓர் இடத்தினை வகிக்கின்றது. அவை யாவும், சக்தியை அன்னையாகவே போற்றி வழிபடுகின்றன. சைவ சமயத்துள்ளும் இவ்வாறே சக்திக்கு உயரிய ஓர் இடம் அளிக்கப்பட்டு, அன்னையாகவே போற்றப்படுகின்றாள். சக்திக்கு உயர்நிலை அளித்தற்கும் போற்றற்கும் காரணங்கள் இல்லாதும் அல்ல.

மகா பாரதத்தினுள் 'பகவத் கீதை' எத்தகையதொரு முக்கியத்துவம் பெறுகின்றதோ, அத்தகைய முக்கியத்துவத்தினைப் பிரம்மாண்ட புராணத்துள், வியாசர் பகவான், 'லலிதா சகஸ்திர நாமத்திற்கு' வழங்கி உள்ளார். லலிதாசகஸ்திர நாமம் வியாசர் பகவானுக்கு, மகரிஷி அஸ்வானனர் அவர்களால் உபதேசிக்கப்பட்ட வரலாறே அற்புதமானது.

வியாசர் பகவான் வினவுகின்றார்: "முனி சிரேஷ்டர் கயக்கிரீவர் அவர்களே! (கயக்கிரீவர் - அஸ்வானனர்) தாங்கள் எனக்கு தேவி மகாத்மியம், பட்டாபிஷேகம், பண்டாசாரவதம், ஸ்ரீபுரம் என்பனவற்றினைத் தடையின்றி உபதேசித்தீர்கள். ஸோடாந்தயாசம், அந்தர் யாகம், மகாயாகக் கிரமம் போன்றனவற்றையும் விபரமாக அருளினீர்கள். லலிதா சகஸ்திரநாமம் மட்டும் உபதேசிக்கவில்லை. தாங்கள் அதனை மறந்துவிட்டீர்களா? அல்லது யான் அதனைக் கேட்கத் தகுதியற்றவன் எனக் கருதிவிட்டீர்களா?"

இவ்வாறு வியாசர் பகவான் வினாவலும், அஸ்வானனர் மகிழ்வுடன் கூறுகின்றார். "வியாசரே! அது மிகவும் ரகஸ்யமானது. விரும்பிக் கேட்கப்படாத நிலையில், எந்தவொரு சீடனுக்கும் உபதேசிக்க முடியாது. பக்தியும் சிரத்தையும் உள்ள உங்களால் இப்பொழுது கேட்கப்பட்டுவிட்டது. மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். கேட்டுக்கொள்வீர்."

இதன்மேல் லலிதா சகஸ்திரநாமம் தேவியின் மாஹாத்மியத்தினைக் காட்டும் முறையினை நோக்குவாம்.

லலிதா சகஸ்திரநாமத்தில், மகாதிரிபுர சுந்தரியாகிய அன்னையைக் குறிக்கும் முதலாவது நாமம் 'மகாமாதா' என்பதாம். இதன்பொருள் சர்வ அண்டங்களையும் ஈன்ற தேவ அன்னை. இதன்மூலம், அவளே அண்டங்கள் அனைத்திற்கும் காரணம் என்பது பெறப்படுகின்றது.

இரண்டாவது இடம் பெறுவதோ ஸ்ரீ மகாராஜ்னீ. படைத்த அண்டங்கள் அனைத்தையும் போஜித்துப் பாதுகாக்கும் தேவ அரசியாகிய அன்னை. இவ்விரு நாமங்களும் பஞ்சகிருத்தியங்களுள் முதல் இரண்டினையும விளக்கி நிற்கின்றன. லலிதா சகஸ்திரநாமம் இண்டாவதன் பொருளையே தைத்ரீய உபநிடதம் "ஏன ஜாதானி ஜீவந்தி" என்கின்றது.

"படைக்கப்பட்டவை எவளால் வாழ்கின்றனவோ" அவளை அன்னை என்கின்றது.

'தேவகார்ய சமுத்யதா' - சகஸ்ரநாமத்தில் இன்னொரு முக்கிய நாமம். தேவியின் மகாத்மியங்கள் இதன்மூலம் புலனாகின்றன. "தேவகாரியங்களை நிறைவேற்றுவதன் பொருட்டே அவள் அவதரிக்கின்றாள்." என்பதே நாமத்தின் பொருள்.

பரமசிவனின் நெற்றிக் கண்ணால் மன்மதன் சாம்பராயினான். சம்சார இயக்கம் தடையுறாதிருத்தல் வேண்டும் எனும் விருப்பில் அவனது சாம்பரை மானிட உருவில் அடைத்து, அவனை மன்னித்து உயிரளிக்குமாறு பரமசிவனை வேண்டிக்கொண்டனர் இந்திராதி தேவர்கள். பரமசிவனும் அச்சாம்பரை நோக்கினார். நோக்கவே, அஃது உயிர்பெற்றது. ஆனால், பழைய மன்மதனல்லாது, பண்டாசுரன் என்றவொரு கொடிய அசுர வடிவுகொண்டு எழுந்தது. அவன் மூவுலகினையும் தனது ஆட்சியின்கீழ் எடுத்துக் கொண்டு, இந்திராதி தேவர்களையும் அட்டதிக்குப் பாலகர்கள் போன்ற யாவரையும் தன் கட்டளையினையே புரியுமாறு பணித்தான்.

இந்திரன் முதலியோர் அவனைக் கொல்லும்படியாகப் பரமசிவனாரை வேண்டினர். சிவனோ தன்னால் அவனை அழிக்கமுடியாதென்றும், தேவியின் அருளைப்பெற்று, அவள்மூலம் அவனை அழிக்கலாமென்றும் கூறினார்.

இந்திரனும் தவமிருந்து அதன்பின் பெரியவோர் யாகம் புரிந்தனன். அந்த யாகாக்கினியில் இருந்து மகாதிரிபுரசுந்தரி தோன்றினாள். தேவர்களும் தமது வேண்டுகோளினை அவளிடம் விடுத்தனர். தேவியும் அசுரனை வதைப்பதாக ஆறுதல் கூறினார். பின்னர் யாவருங்கூடிப் பிரமதேவரைக் கொண்டு பட்டாபிஷேகம் போன்றனவற்றைச் சிறப்புறச்செய்து முடித்தனர். இதன்பின்னர் பெருந்தொகை மாதிரு கணங்கள் புடைசூழ மகாதிரிபுரசுந்தரி, அவனது சோணித புரத்திற்குப் படைமேற் சென்று, பலநாட்களாகக் கடும் போர் நிகழ்த்தியே அவ்வசுரன் கொல்லப்பட்டான். அதன்பின்னர் யாவும் வழமைக்குத் திரும்பின.

'தேவகார்ய சமுத்யதா' என்னும் நாமத்திற்குப் பொருத்தமாகப் பல்வேறு வதங்கள் இடம்பெற்றபோதிலும் அனைத்திற்கும் சிகரம்போல் விளங்கும் 'சும்ப', 'நிசும்ப' வதத்தினை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

முன்னொருகால், சும்பன், நிசும்பன் என்னும் இரு அசுரர்களால் இந்திரனுடைய மூவுலக ஆட்சியும் யஞ்ஞாபாகங்களும் அபகரிக்கப்பட்டன. சூரியன், சந்திரன், குபேரன், யமன், வருணன் என்போருடைய அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. வாயு, அக்கினி என்போர் அதிகாரங்களும் இவர்கள் கையிலேயே.

இவ்வாறு கொடிய அவ்விரு அரக்க சகோதரர்களால் கலைக்கப்பட்ட இந்திரனாதியோர், "ஆபத்து வேளையில் தன்னை நினைந்தால், உடன்வந்து உதவுவதாகத் தேவி கூறியிருந்த கூற்றினை நினைந்து இமயமலையின் தெய்விகச் சிறப்பு மிக்க ஒரு பகுதியை அடைந்து, தேவியைப் பக்திசிரத்தையுடன் புகழ்ந்து கூறி முறையிட்டுக் கொண்டிருந்தனர்.

அவ்வேளை, மலையரசன் மகளாக அவதரித்த உமையம்மையின் இரண்டாம் அவதாரமாகிய பிரமசாரிணீ என்பாள் அவ்விடம் வந்தவள், அவர்கள் ஒரு தேவியைத் திரும்பத் திரும்ப வேண்டி நமஸ்கரிக்கிறார்கள் என அறிந்து, "நீங்கள் எந்தத் தேவியை நினைந்து தோத்தரிக்கிறீர்கள்" என்றனள். உடனே அவளது உடலில் இருந்து வெளிவந்த கௌசிகா தேவி, "சும்ப, நிசும்பர்களால் தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டுக் கலைக்கப்பட்ட இவர்கள், என்னை நினைந்துதான் இத்துதியினைச் செய்கின்றார்கள்" எனக் கூறினாள். இவ்வாறு கௌசிகா தேவி கூறியதும் பிரமசாரிணி உடலம் கருநிறமாக மாறிக் காளிதேவியின் உருவம் எய்தினள். உள்ளத்தைக் கவரும் சிறந்த உருவினளாகக் கௌசிகா தேவி விளங்கினாள்.

இவ்வேளை அவ்விடம் வந்த சும்ப, நிசும்பர்களின் பணியாட்களாகிய சண்டனும் முண்டனும் கௌசிகாதேவியின் அழகில் மயக்கம் அடைந்தனர். எங்கள் அரசர் பெருமானால் மூவுலகத்திலும் கிடைத்தற்கரிய இரத்தினங்கள் யாவும் பெறப்பட்டுள்ளனவே! கஜரத்தினம், அஸ்வரத்னம், விருட்ஷரத்னம், விமானரத்னம் - சகல ரத்தினமும். ஏன் இன்னும் இந்தக் கன்யாரத்னம் பெறப்படவில்லை?

சண்டனும், முண்டனும் சும்பனிடம் சென்று பிரமசாரிணியின் அழகினை வர்ணித்தனர். சும்பன் அரசு சிரேஷ்டன் ஒருவனை அழைத்து "சிரேஷ்ட! நீ சென்று என் வார்த்தைகளை எல்லாம் இப்படி யான் கூறுவதுபோல் அவளிடம் கூறி அவளை அழைத்து வருக என விடுத்தான். சிரேட்டனும் சென்று அவன் கூறியனவற்றை தேவியிடம் அப்படியே உரைத்தான்.

அந்த மங்கள வடிவினளாகிய கௌசிகா எனப்படும் பகவதி துர்க்காதேவி சிரேஷ்டனிடம், "சிரேஷ்ட! உன்னால் கூறப்பட்டவை உண்மை. இதில் பொய்யொன்றும் இல்லை. சும்பன் மூவுலக நாயகன். தம்பி நிசும்பனும் அப்படியே. ஆனால், இது விஷயத்தில் நான் ஒரு பிரதிஞ்ஞை செய்துவிட்டேன். அதனைப் பொய்யாக்க முடியாது. எனது அல்ப புத்தியால். என்னுடன் யுத்தம்செய்து எவன் என்னை வெல்கின்றானோ அவனே என் பர்த்தா. அதனால், சும்பனாவது நிசும்பனாவது காலதாமதமின்றி வரட்டும். என்னை வென்று, கொண்டுசெல்லட்டும். நீ போய்ச்சொல்" என்று சொல்லிமுடித்தாள்.

சிரேஷ்டன் மீண்டும் முயன்றான். பயனில்லை. சிரேஷ்டன் வாயிலாக நிலைமையை அறிந்த சும்பன் தன் சேனைத் தலைவன் தூம்ரசேனனிடம், "நீ சென்று அந்த துஷ்டையைக் கேசத்தைப் பற்றியிழுத்து வா. யாராவது தடுக்கவந்தால் அவர்களை அழித்துவிடு" என்றான். தூம்ரசேனன் பெரும் படையுடன்சென்று தேவியிடம் "சும்ப நிசும்பர்களை அடைவதற்கு உடனே புறப்படு. இல்லையேல் கேசத்தைப் பற்றி இழுத்துச்செல்வேன்" என்று அதட்டினான்.

தேவி, அவனை நோக்கி "நீ பலவான். சேனைகளுடன் வந்திருக்கின்றாய். என்னை அப்படியே இழுத்துச் செல்லப் போகின்றாய். நான் என்ன செய்ய?" என்றனள். தூம்ரசேனன் தேவியைப் பற்றுவதற்கு உடனே பாய்ந்தான். பாய்ந்தவனைத் தேவி ஹுங்காரத்தால் எரித்தாள். (ஹுங்காரம் என்பது பிரணவ மந்திரத்தை அக்கினியை நினைத்து சினத்துடன் ஒலித்தல்) தலைவன் எரிந்து மடிந்ததும் சினமுற்ற அசுரப் படை தேவியைக் கைப்பற்றப் படைக்கலங்களை வீசிக்கொண்டு தேவியைச் சூழ்ந்தது. சீற்றம் கொண்ட சிங்கம் அசுரப் படைகள் முழுவதையும் தாக்கி அழித்தது.

தூம்ரசேனன் கொல்லப்பட்டதும் சேனைகள் சிங்கத்தால் அழிக்கப்பட்டதும் அறிந்த சும்பன், பெருந்தொகை வீரர்களுடனும் ஆயுதங்களுடனும் சண்டன், முண்டன் என்னும் அசுரப் பிரதானிகளை யுத்த களத்திற்கு அனுப்பி, தேவியை முடியைப் பிடித்துக்கொண்டு வரும்படியும் இல்லையேல் எதிர்ப்பவர்களை அழிக்கும்படியும் கட்டளையிட்டான். அசுர ராஜனின் கட்டளை பெற்றுவந்த சண்ட, முண்டர்கள் சிறிதும் முன்னேறவிடாது மிக்க சீற்றத்துடன் துர்க்காதேவி தன் வாகனத்தில் ஏறி, பகைவரைத் தாக்கினாள். காளி தேவியும் களமிறங்கி கணக்கற்ற வீரர்களை அப்படியே விழுங்கினாள். இதற்கு ஈடுகொடுத்துநின்று போர்புரிந்த அசுர வீரர்கள் பெருந்தொகையினர் கொல்லப்பட்டு, இறுதியில் முண்டனும் சண்டனும் தேவியின் வாளினால் முறையே சிரச்சேதம் செய்யப்பட்டனர். சண்டனும் முண்டனும் இறந்ததும். மற்றும் நடந்தனவும் அறிந்த சும்பன் சினத்தால் அறிவிழந்து அசுர சேனை அனைத்தையும் திரட்டினான்.

முக்கிய அசுர சேனைகள் மூலபலமாகிய கோடி வீரர்கள் சூழ, காலகேயர் என்பாருடனும் சும்பனும் நிசும்பனும் தேவியையும் சிங்கத்தினையும், காளி தேவியினையும் ஒழிப்பதே நோக்கி களம்புகுந்தனர். கணக்கற்ற சேனைகளுடன் சும்பனும், நிசும்பனும் வருவது கண்டு, சண்டிகை தனது நாணொலியால் விண்ணையும் மண்ணையும் நிரப்பினள். எதிர்கொண்ட அசுரர் படை தேவியையும் சிங்கத்தையும் காளி தேவியையும் சுற்றி வளைத்தவர்களாய் தாக்கத் தொடங்கினர். தாக்குதலும் எதிர்ப்பும் ஒன்றையொன்று விஞ்சுவதாக யுத்தம் நீடித்தது. இந்த யுத்தத்தில் தேவ சிரேட்டர்களின் நன்மைக்காகவும். சத்துருக்களின் நாசத்திற்காகவும் பிரம்மா, ஈஸ்வரன், நாராயணன், குகன், இந்திரன் முதலியோரின் சக்திகள் தத்தம் ஆயுதங்களுடனும், வாகனங்களுடனும் கலந்து கொண்டனர். யுத்தத்தில் வாளுடன் தேவிமேல் பாய்ந்த நிசும்பன் தேவியின் சூலப்படையால் பிளக்கப்பட்டு புவியில் வீழ்ந்து உயிர்விட்டான்.

உயிருக்கு நிகரான நிசும்பன் இறந்தது கண்டு, சும்பனும் சண்டிகையை எதிர்நோக்கி "பலத்தால் கொழுப்பேறி மதிகெட்ட துர்க்கையே! நின் கர்வத்தை என்னிடம் கொண்டுவராதே. நீ கர்வம் கொண்டுள்ளாய்

எனினும், நீ பிறர் உதவிபெற்றே யுத்தம் புரிகின்றாய்'' என்றான். இக்கூற்றுடன் யுத்தம் ஒரு புதிய பாதையில் செல்வதாயிற்று. இக்கூற்றினைக் கேட்ட தேவியும் பின்வருமாறு கூறினள்: ''மூடனே! உலகில் உள்ளவள் யான் ஒருத்தியே. இங்கு காட்சியளிப்பன யாவும் எனது அம்ச அவதாரங்கள். என்னைத் தவிர வேறல்லர். அவைகள் யாவும் என்னுட் புகுவதைக் காண்'' என்றவுடன் பிரம்மாணி முதலிய தேவிகள் யாவரும் கௌசிகி தேவியின் உடலுள் மறைந்தனர். அம்பிகை ஒருத்தி மட்டும்தான் அப்போது காட்சியளித்தாள்.

இவ்வாறு ஆயவள் சும்பனை விழித்து, ''எந்தப் பல வடிவங்களை என்னுடைய ஐஸ்வரிய சக்தியால் தோற்றுவித்தேனோ அவை யாவும் என்னால் மீண்டும் கவரப்பட்டு, யான் ஒருத்தியாகவே நிற்கின்றேன். யுத்தத்தில் ஸ்திரம் கொள்வாய்'' என்றாள். அதன்பின் தேவர்களும் அசுரர்களும் பார்த்துக் கொண் டிருக்கையிலேயே தேவிக்கும் சும்பனுக்கும் இடையே யுத்தம் ஆரம்பமானது.

பாணவர்ஷணத்துடனும், கூரிய சஸ்திரங் களுடனும், கொடிய அஸ்திரங்களுடனும் உலகு அனைத்தையும் நடுங்கவைக்கும் போர் மீண்டும் அவர்களிடையே தோன்றியது. அம்பிகை நூற்றுக் கணக்கில் விட்ட திவ்ய பாணங்களை அசுர ராஜன் எதிர்த்து வெட்டும் அஸ்திரங்களால் வெட்டினான். அசுரன் விடுத்த திவ்யாஸ்திரங்களை பரமேஸ்வரி ஹுங்காரம், உச்சாரனம் என்பவற்றால் அழித்தாள்.

அசுரன் நூற்றுக்கணக்கான பாணங்களால் தேவியை மறைத்தான். தேவியும் சினத்துடன் அவனது வில்லினை அம்புகளால் ஒடித்தாள். வில் இழந்ததும் அசுரன் சக்தி ஆயுதம் எடுக்க, தேவியும் சக்கர ஆயுதத்தினால் வெட்டினாள். அசுர ராஜன் வாளையும் பிரகாசிக்கும் கேடயத்தினையும் பற்றிக்கொண்டு தேவிமேல் பாய, அவைகளை பாணங்களால் சேதித்தாள் தேவி.

அப்போரில் அசுர ராஜன் சாரதியையும் இழந்து, குதிரையையும் இழந்து வில்லும் இன்றி, முத்கரம் கையிலெடுத்துக்கொண்டு முன்னே பாய்ந்தான். எதிர்த்துவரும் அவனது முத்கரம் பாணத்தால் பிளக்கப்பட்டது. அசுர சிரேஷ்டன் தேவிமேல் பாய்ந்து முஷ்டியால் தேவியின் மார்பில் இடித்தான். தேவி அவனது மார்பில் தனது உள்ளங்கையால் அறைந்தாள். கைத்தலத்தால் அறையுண்டவன் பூதலத்தில் வீழ்ந்தான். பூதலத்தில் வீழ்ந்தவன் விரைந்தெழுந்து தேவியைப் பற்றிக்கொண்டு, ஆகாயத்தில் தாவினான். அங்கு இருவரும் ஆதாரமின்றியே போர்புரிந்தனர். சண்டிகையும் அசுரனும் அப்பொழுது ஆகாய வெளியில், சித்தர்கள், முனிவர்கள், தேவர்கள், அசுரர்கள் யாவரும் வியக்கும்வகையில் புதுமுறையில் நெருங்கி யுத்தம் புரிந்தனர். நீண்ட நேரத்தின் பின் தேவி அசுர ராஜனைத் தூக்கி சுழற்றி நிலத்தில் வீசினாள். எறியப்பட்டவன் விரைந்தெழுந்து, முஷ்டியை மேலே உயர்த்திக்கொண்டு ஆகாயத்தில் மீண்டும் பாய்ந்தான்.

தைத்திய மக்களின் அரசனாகிய அவன் அவ்வாறு வருகையிலேயே சூலத்தால் அவனது மார்பில் குத்திப் பிளந்து, தேவி அவனைத் தரையில் வீழ்த்தினாள். பிளவுண்ட அசுர ராஜன், கடல்களும், துவீபங்களும், மலைகளும் கொண்ட முழு உலகினையும் நடுங்க வைத்துக்கொண்டு, பிராணனை விட்டு தரையில் வீழ்ந்தான்.

அசுரன் மடிந்ததும் உலகனைத்தும் ஆனந்தத்தில் மெய்மறந்தது. ஆகாயம் நிர்மலமானது. நதிகள் அமைதியாகிச் சென்றன. கந்தர்வர்கள் இசைபாடினர். சிலர் வாத்தியங்களை முழக்கினர். காற்று சுகமாக வீசியது. சூரியன் மிக்க பிரபையுடன் விளங்கினான். திக்குகள் யாவும் சாந்தமடைந்தன. தப்பிய அசுரர்கள் பாதாளம் சென்று மறைந்தனர்.

யாவராலும் தேவி ஏத்தப்பட்டாள்.
சக்தியே வணக்கம்.


SOLD OVER ASKING
FOR SALE
RE/MAX
Suresh Sellathurai*
Remax Vision Realty Inc. Brokerage.
416-321-2228
* Sale representative
Suresh Sellathurai
* Sale representative
416.844.5626

# ஞானமா, அஞ்ஞானமா.....?

திரு.சி.நம்பியாரூரன்

"பொய்யாயின எல்லாம் போயலக வந்தருளி
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே"
– மாணிக்கவாசகர்

ஞானம் என்பது அறிவு. அஞ்ஞானம் என்பது அறியாமை. இந்துமத ரீதியில் "ஞானம்" என்பதற்கு விரிவான ஒரு கருத்தும் தரப்படும். "ஞானம்" என்பது மூளையில் தோன்றும் அறிவு மட்டுமல்ல; அது உயிரில் அல்லது ஆத்மாவில் தோன்றும் அறிவுமாம். இந்த இடத்தில் "அது என்ன?" என்ற கேள்வி வரும். "பருவம் அடைந்தவர்களுக்கு அனுபவம், விழிப்பு, காட்சி என்பது அக்கேள்விக்குப் பதில். இதை அடைந்துவிட்டவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் மனிதர்களுக்கு "வழிகாட்டிகள்" என்ற பதவிகளுக்கு உயர்த்தப்படுவார்கள்.

மேலே போவதற்கு முன் ஒன்றை மனதில் கொள்ளுதல் தகும். பொதுவாக. துணிச்சலான ஒரு கேள்வியை எழுப்புதல், திருப்தியான ஒரு பதிலைப் பெறுவதைவிட பெறுமதி மிக்கது என்ற நிலைப்பாடு அறிவுக்கு முதல்நிலை என்பதை உணர்தல் நல்லது. "கல்வி, கேள்வி" என்ற ஒரு பேச்சு வழக்கு உண்டு. கேள்வி இல்லாமல் கல்வி இல்லை என்பது கருத்து.

அறிவு என்ற சொல்லுக்கு வள்ளுவரின் விளக்கம்:

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" – குறள் - 423

பிறர் சொல்வது எல்லாவற்றையும் நம்பிவிடாதே. அது உண்மையானதுதானா என்பதை ஆராய்ந்து, அறிந்துகொள். ஆராய்வின் பலனாகத்தான் உண்மை, பொய் புலப்படும் என்கிறார் வள்ளுவர். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து கருவிகளும் முறையே இவற்றால் கிட்டும் தொடுதல், சுவைத்தல், பார்த்தல், முகர்தல், கேட்டல் என்ற ஐம்புலன்களால் எமது மூளைக்குக் கிடைக்கும் தரவுகள், தகவல்கள் அறிவிற்குத் தேவைப்படும் முதல் நிலைகள். ஒரு நேரத்தில், ஒருவர் பெறும் தகவல்களை, ஒருவர் வாழ்ந்த காலம் முழுவதும் பெற்றுவிட்ட அனுபவங்களையும், மூளையில் பாவித்து முடிவு காணும் ஆற்றலில் பிறப்பது அறிவு.

ஒருநாள் ஒரு நண்பர் எனக்கு ஒரு கதை சொன்னார். ஒரு ஐரோப்பியர். அவர் இந்திய புராணங்களையோ, இதிகாசங்களையோ படித்ததில்லை. இந்துமத தெய்வங்களின் படங்களையோ, விக்கிரகங்களையோ பார்த்ததில்லை. அவர் இந்து மதத்தவர்களோடு பழகியவரும் அல்லர். ஆனால், ஒரு நாள் அவரது கனவில் சிவனும் முருகனும் தோன்றினார்கள். பரவசப்பட்ட அவர் இந்து மத பிரியரானார். சிவனுடைய பெயரையும் முருகனுடைய பெயரையும் இணைத்து தனக்கு ஒரு பெயரையும் சூட்டிக்கொண்டார். அவர் பலரும் போற்றும் சாமியாராயினார். இதுதான் அந்தக் கதை.

இந்தக் கதையில் ஒரு வழு இருக்கிறது. ஒழுங்காக சிந்திக்கும் முறையிலிருந்து நீங்குவதால் வரும் தவறு அது. தொடரப்போவது, கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பது பற்றியது அல்ல. கடவுளுக்கு நாங்கள் ஒரு காலத்தில் கொடுத்த தோற்றங்கள் பற்றியது. புராணங்களில் வரும் தெய்வங்கள் எங்கள் கற்பனையில் பிறந்தவை என்பது பற்றியது. அந்த உருவங்களில் உண்மையில் தெய்வங்கள் இல்லை என்பது பற்றியது. அதை நன்கு உணர்தல் பற்றியது.

இப்படியிருக்க, இந்த ஐரோப்பியர், தன் ஐம்புலன்கள் கொண்டு அறியாத கற்பனைத் தெய்வங்களின் தோற்றங்களை எப்படி கனவில் கண்டிருக்க முடியும் என்பது கேள்வி. இதற்கு விடை இப்படி வரலாம். "இது மூளையில் தோன்றிய அனுபவம் அல்ல. ஆத்மாவில் தோன்றிய அனுபவம். அது

ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்டது.' இருக்கலாம் என்று வைப்போம். ஆனால் இவைதான் உண்மையான தெய்வ உருவங்கள் இல்லையே. இவை கற்பனை உருவங்கள் அல்லவா? இயற்கையில் இல்லாத செயற்கையில் வந்த உருவங்கள். அவற்றைக் காணாத ஐரோப்பியரின் கனவில் எப்படி வந்திருக்க முடியும்? முடியாது அல்லவா? மணிவாசகர் சொன்னதுபோல் நாம் "பொய்மையைப் பெருக்கி பொழுதினைச் சுருக்கி" வாழத்தான் வேண்டுமா?

"மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று முன் குறிப்பிட்ட குறளை வைத்து வள்ளுவரின் மற்றொரு குறளைப் பார்க்கலாம். அதில் இருக்கக்கூடிய "ஞானம்" அல்லது அறிவு பற்றி.

"அறத்தால் இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானொடு ஊர்ந்தான் இடை" – குறள் 37

"கர்மா" என்ற சமஸ்கிருத சொல்லின் தமிழ் வடிவம் 'கர்மம்" அல்லது "கருமம்" மற்றும் "வினை" அல்லது "செயல்" எனப்படும். ஒருவர் வாழ்வில் அனுபவிப்பது அவரது நல்வினை, அல்லது அறம் என்பதைப் பொறுத்தது. அல்லது தீவினைகளால் வருவது. இந்த குறளில் அறம் செய்தவன் பல்லக்கில் இருக்கிறார். தீயவை செய்தவர்கள் பல்லக்கைக் காவுகிறார்கள். வாழ்வின் சிக்கலான நிலைமைகளை விலத்திவிட்டு, இலகுவாக "கர்மா"வுக்குத் தரப்படும் விளக்கம் இந்தக் குறளில் உண்டு.

நான் யாழ்ப்பாணத்தில் வளர்ந்து வந்த காலங்களில் அங்கு பயங்கர படுகொலைகள் நடந்ததில்லை. எனது கர்மத்திற்கு ஒரு கெடுதி நடக்கவேண்டும் என்றிருந்தால் ஒருவேளை நான் சைக்கிளால் விழுந்து எனது முழங்காலை உராஞ்சியிருப்பேன். ஆனால் நான் சிக்காக்கோவில் வளர்ந்துவந்திருந்தால் என் தீய பலனுக்கு துப்பாக்கிக் குண்டினால் இறந்திருக்கலாம் அல்லவா? கொனெக்ரிகற்றின் நியூரவுண் பள்ளியில் இறந்த பாலர்களில் ஒருவராக. இந்த பாலர்கள் அப்படி என்ன கெட்ட "கர்மம்" செய்தார்கள் ஒரு நொடிப் பொழுதில் அத்தனை குண்டுகளையும் தமது பிஞ்சு உடல்களில் வாங்கி இறப்பதற்கு? இருக்கிறது என்கிறது இந்துமதம். "சஞ்சித கர்மம்" என்பது இதற்குப் பெயர். இந்துமதம் கூறும் ஒன்பது வகை கர்மங்களில் இதுவும் ஒன்று. இந்த பாலர்கள் இந்த பிறவியில் பாவங்கள் செய்ய அவகாசம் பெறவில்லையென்பது உண்மைதான். ஆனால் அவர்கள் பூர்வஜென்மங்களில் செய்த பாவங்களின் கூட்டுத்தொகை இருக்கிறதல்லவா? அதன் பலனைத்தான், பாவம் அந்த பாலர்கள் அனுபவித்தார்கள் - அவர்களின் சஞ்சித கர்மத்தால்!

2004ல் இந்து சமுத்திரத்தில் சுனாமி. அதில் 230,000 பேர்வரை இறந்தார்கள். 2009ல் பல ஆயிரம் பேர்கள் இறந்தனர் முள்ளிவாய்க்காலில். இவர்களின் அவலங்களையும், பரிதாபங்களையும் சொல்ல வேண்டாம். இவர்களுக்கு இந்த கர்ம பலன் ஏன்? இந்து மதத்தில் இந்த கர்ம பலனுக்கு இடப்பட்ட பெயர் "அதிபௌதிகர்மம்". ஒரு தொகுதியினர் பூர்வ ஜென்மங்களில் செய்த "கூட்டு கர்மம்" அது. அந்த கூட்டத்தினரின் அங்கத்தவர்களாய் இருந்ததால் கிடைத்த பலன் அவர்களுக்கும் உரியது ஆகியது.

"சஞ்சித கர்மம்", "அதிபௌதிக கர்மம்", என்பன உண்டு என்பது எப்படித் தெரியும்? "இப்படியும் நடக்குமா, நடக்கலாமா?", "அவர்கள் செய்த கர்மம், அப்படி அவர்களுக்கு அந்தக் கெதி, நாங்கள் ஏதோ செய்த புண்ணியத்தால் இங்கு சுகமாக இருக்கிறோம்', இதை எங்களில் பலரும் சொல்லக் கேட்டிருக்கிறோம். "யார் யார் வாய் கேட்பது" "எல்லாவற்றையும் நம்பலாமா? எங்கள் ஆராய்வும் அறிவும் ஓய்வு நிலையில்தான் இருக்க வேண்டுமா?

பிறர் துன்பங்களுக்குக் காரணம் காட்டி நியாயம் வழங்குவதற்கு என்ன தகுதி உண்டு எங்களுக்கு? இருக்கிறது என்றால் - அதில் இருக்கிறது அஞ்ஞானம். பிறர் துன்பங்களை உணர்தலிலும், அவற்றிற்கு நிவாரணம் செய்வதிலும் இருக்கிறது ஞானம்.


No One Beat Us!
On high with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PRO MAR
Awards &Promotions Ltd.
www.promarawards.com
One stop for all your promotional Ideas...
Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing
416-291 2344
Fax: 416-291 1231
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

# விரதங்கள் மூலம் பயனடைய ......?

எழுத்தாளர் பசுந்தீவு கோவிந்தன்

எல்லாச் சமயங்களிலும் விரதங்கள் முக்கிய இடம் பெறுகின்றன என்பது யாவரும் அறிந்த விடயம். அதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் உண்மை விரதங்களினால் ஏற்படும் நற்பயன்களை யாரும் மறுப்பதற்கில்லை என்பதாகும். அந்த வகையில் சைவசமயம் எமக்கு அளித்திருக்கின்ற பல்வேறு விரதங்கள் எமது தேவைக்கேற்ப அனுட்டிக்கப்பட வேண்டுமென்பது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயமாகும். அதாவது எல்லா விரதங்களையும் எல்லோரும் அனுட்டிக்க வேண்டும் என்ற தேவை இல்லை என்பதாகும். அப்படியாயின் யாருக்கு என்ன விரதம் தேவை? வேறு வார்த்தையிற் சொன்னால், யார் எந்த விரதத்தை அனுட்டிக்க வேண்டும் என்பதை எப்படி அறிவது?

ஜோதிடம் சைவசமயத்தில் ஒரு முக்கிய அம்சம். ஜோதிடம் பற்றி அதர்வணவேதத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஜோதிடம் சைவசமயத்தோடு இணைந்த ஒரு தெய்வீகக் கலை. ஜோதிடத்தில் விரதங்கள்பற்றி நிறையவே சொல்லப்பட்டுள்ளன. வைத்தியத் துறையில் நோய்களுக்கு மருந்துகள் சொல்லப்பட்டிருப்பதுபோல் ஜோதிடத்தில் பூர்வபாவங்களுக்கும், நடப்புப் பாவங்களுக்கும் மருந்தாக விரதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. நல்வினைகளால் விளைவது புண்ணியம். தீய வினைகளால் விளைவது பாவம். முற்பிறவியில் செய்த நல்வினைகளால் விளைந்தது பூர்வபுண்ணியம். முற்பிறவியில் செய்த தீய வினைகளால் விளைந்தது பூர்வபாவம். இதையே கர்மா என்று சொல்வர். கர்மாவை அனுபவித்துத் தீர்க்கும்வரை அது ஆன்மாவை எத்தனை பிறவிகள் எடுத்தாலும் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

ஓர் ஆன்மாவின் கர்மாவிற்கு ஏற்றபடி வாழ்வைக் கொடு என்று இறைவன் கிரகங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான். அதாவது ஒருவருடைய ஜாதகத்தை ஒரு சிறந்த ஜோதிடன் பார்த்தவுடன் அந்த ஆன்மா எவ்வளவு பூர்வபுண்ணியத்துடன், எவ்வளவு பூர்வபாவத்துடன் இந்தப் பிறவியை எடுத்துள்ளது என்று அவனால் சொல்ல முடியும். வேறு வார்த்தையில் சொன்னால், ஒருவரின் ஜாதகம் அந்த ஜாதகன் எவ்வளவு பூர்வபுண்ணியத்துடனும், பூர்வபாவத்துடனும் பிறந்துள்ளான் என்பதையும் அதற்கேற்ப அந்த ஜாதகனுடைய எதிர்கால வாழ்வு எவ்வாறு அமையப்போகின்றது என்பதையும் எடுத்துக் காட்டும். அந்த ஜாதகனின் காலக் கண்ணாடிதான் ஜாதகம். இந்த உண்மையை நன்கு உணர்ந்த எமது மக்கள் குழந்தை பிறந்தவுடன் ஜாதகம் எழுதிக் கொள்வதை இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றார்கள்; எதிர்காலத்திலும் கடைப்பிடிப்பார்கள். காரணம் விஞ்ஞானத்தினால் மனித வாழ்க்கையை நிர்ணயிக்கவும் முடியாது; இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கையை அதனால் மாற்றவும் முடியாது.

ஜோதிட சாஸ்திரம் அறிவிலிகளினதும் ஞானசூனியங்களினதும் கைகளுக்குச் சென்று, இன்று தெருவீதியில் அலைவதற்குக் காரணம் ஜோதிட சாஸ்திரத்தில் உள்ள குறைபாடல்ல. ஜோதிடத்தை வயிற்றுப்பிளைப்புக்காக கையில் எடுத்துள்ளவர்களுடைய இயலாமையே காரணம். அதன் ஓர் அங்கமாகத்தான், தங்களைத் தாங்களே அறிஞர்கள் என்று சொல்லிக்கொண்டு திரியும் ஒரு சிலர் "ஜோதிடம் ஒரு புரட்டு" என்று சொல்லும் அளவிற்கு ஜோதிட சாஸ்திரத்தின் நிலை தள்ளப்பட்டுள்ளது. இறைவன் இருக்கிறான் என்பவனிற்கும், இறைவன் இல்லை என்பவனிற்கும் இறைவன் செய்ய வேண்டியதைச் செய்துகொண்டே இருப்பான். அதுபோன்று, ஜோதிடத்தை நம்புபவனிற்கும் நம்பாதவனிற்கும் கிரகங்கள் செய்யவேண்டியவற்றைச் செய்துகொண்டேயிருக்கும்.

முற்பிறப்பில் ஒருவன் செய்த நல்வினைகள் தீயவினைகள் என்பவற்றால் விளைந்த பூர்வபுண்ணியத்தையும், பூர்வபாவத்தையும் அவனின் ஜாதகத்தின் மூலம் கண்டறியும் ஒரு சிறந்த ஜோதிடனால் பூர்வபாவத்தில் இருந்து, அதாவது பூர்வபாவத்தால் ஏற்படவிருக்கும் துன்ப துயரங்களில் இருந்து, விடுபடுவதற்காக அனுட்டிக்கவேண்டிய விரதங்களைப்பற்றியும் கூறமுடியும். உதாரணமாக: புரட்டாதிச் சனிக்கிழமை விரதத்தை யார் அனுட்டிக்க வேண்டும்? ஜாதகத்தில் சனி பகவானுடைய தோஷம் உள்ளவன்தான் அனுட்டிக்க வேண்டும். சிலருடைய ஜாதகத்தில் சனிபகவான் யோககாரனாய் இருப்பான்.

அப்படிப்பட்ட ஜாதகனுக்கு சனிபகவான் எப்பொழுதும் நன்மையே செய்வான். அந்த ஜாதகன் சனிக்கிழமை விரதம் அனுட்டிக்காது விட்டாலும் சனி பகவான் அவனுக்கு நன்மைகள் செய்தே ஆகவேண்டும். காரணம், இறைவன் சனிபகவானுக்கு இட்ட கட்டளை அதுதான். இறைவனுடைய கட்டளையை கிரகம் நிறுத்த முடியாது. எனவே அந்த ஜாதகன் சனிக்கிழமை விரதம் பிடிப்பது சக்தியை விரயம் பண்ணும் செயலாகும். சக்தியை விரயம்செய்வது தர்மத்திற்கு மாறான விடயம். சிலர் நினைக்கலாம் அந்த ஜாதகன் சனிக்கிழமை விரதம் அனுட்டித்தால் மேலதிக நன்மைகளைப் பெறமுடியும் என்று. அது முற்றிலும் தவறு. சனிபகவான் அந்த ஜாதகத்தில் என்ன அளவான பலத்துடன் நிற்கிறாரோ அந்த அளவிற்குத்தான் அவரால் நன்மை செய்யமுடியும். இறைவன் அளித்த பலத்திற்கு மேலால் இம்மியளவும் அந்தக்கிரகத்தால் நன்மை செய்யமுடியாது. அதே மாதிரித் தீமையும் செய்யமுடியாது.

இன்னுமோர் உதாரணமாக: ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் உள்ள நபர் அதிலிருந்து விடுபடுவதற்காக செவ்வாய்க் கிழமை விரதங்களை அனுட்டிக்கலாம். அதற்கு உதவி புரியக்கூடிய தெய்வங்களான முருகப்பெருமான், துர்க்கை அம்மன் ஆகியோரை வணங்கலாம் என்று எமது சமயம் கூறுகின்றது. ஜாதகத்தில் செவ்வாய் யோககாரனாய் இருந்து பல நன்மைகளை அளிக்கக்கூடிய நிலையில் உள்ள ஒரு ஜாதகன், செவ்வாய்க் கிழமை விரதம் அனுட்டிப்பது உசிதமல்ல. இன்னோர் உதாரணமாக: ஜாதகத்தில் மாங்கல்ய தோஷம் உடைய ஒரு ஜாதகி வரலட்சுமி விரதம், சுமங்கலிப் பூசை என்பவற்றை மேற்கொள்ளலாம். ஜாதகத்தில் மாங்கல்ய பாக்கியம் பலமாய் உள்ள ஒரு ஜாதகி அந்த விரதங்களை மேற்கொள்வதனால் மேலதிக பலன்களைப் பெற வாய்ப்பில்லை.

சிலர் இயல்பாகவே கட்டுப்படுத்த முடியாத பாலுணர்ச்சியை கொண்டிருப்பார்கள். இவர்கள் ஐயப்பவிரதத்தை மேற்கொள்ளலாம். வேறு சிலர் கட்டுபடுத்த முடியாத சினம் கொள்ளும் சுபாவம் உடையவர்களாய் இருப்பார்கள். இவர்கள் கந்தசஷ்டி விரதத்தை மேற்கொள்ளலாம். பிள்ளைப்பலன் குறைந்த ஜாதகர்களும் கந்தசஷ்டி விரதத்தை அனுட்டிக்கலாம். செவ்வாய் பகவானும், ராகு பகவானும் குடும்பஸ்தானத்தில் நின்றால் அந்த ஜாதகர்கள் கேதாரகௌரி விரதத்தை அனுட்டிக்கலாம். இவ்வாறு ஒவ்வொரு விரதத்தைப்பற்றியும் அதன் தேவையைப்பற்றியும் எமது சமயத்தின் ஓர் அங்கமான ஜோதிடசாஸ்த்திரத்தில் விளப்பமாகச் சொல்லப்பட்டு உள்ளது. அதன்படி விரதங்களை அனுட்டிப்பதன் மூலமே உரிய பயனைப்பெற்று இன்புற்று வாழலாம்.

இந்த விடயத்தில் பெரியோர்களும் ஜோதிடர்களும் கோயில்களும் மிகப்பொறுப்புடன் நடந்துகொள்வது சாலச்சிறந்தது. பெரியோர்களும் ஜோதிடர்களும் கோயில்களுமே விரதங்களை மக்கள் கடைப்பிடிப்பதற்கு வழிவகுத்துக் கொடுப்பவர்கள் ஆகையினால், இந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வருமானத்தை மட்டும் இலக்காகக்கொண்டு வழிநடத்துவது நன்றல்ல. விரதங்களால் ஏற்படக்கூடிய பயன்கள் அளப்பரியது என்பது எமது சமயம் எமக்குப் புகட்டும் உண்மையாகும். அந்தப் பயன்களை எமது மக்கள் பெற்று, இன்புற்று வாழ வழிசமைத்துக் கொடுப்பதில் பெரியோர்களும், ஜோதிடர்களும், கோயில்களும் கண்ணும் கருத்துமாக இருப்பது அவசியம்.

நமது பூர்வபுண்ணியம், பூர்வபாவங்களினால் எமக்கு நிர்ணயிக்கப்பட்ட வாழ்க்கையை விரதங்களின் மூலம் மாற்றமுடியுமா? அதாவது விதியை மதியால் வெல்லமுடியுமா? என்ற கேள்வியைப் பலர் கேட்கலாம். "ஆம்" என்பதுதான் அதற்குரிய பதில். மதியால் விளைந்ததுதான் விதி. இப்பிறவியிலே மதியைப் பயன்படுத்தி நல்வினைகளைச் செய்வதன் மூலம் புண்ணியத்தை அதிகப்படுத்தலாம். இப்பிறவியிலே புண்ணியத்தை அதிகப்படுத்தும் பொழுது, அதாவது நடைமுறைப் புண்ணியத்தின் அளவு அதிகமாகும் பொழுது, பூர்வபாவத்தின் தாக்கம் நிச்சயம் குறைவடையும். தொடர்ந்து நல்வினைகளைச் செய்து நடைமுறைப்புண்ணியத்தை அதிகரிக்க அதிகரிக்க அதனுடன் பூர்வபுண்ணியமும் சேர்ந்து பூர்வபாவத்தைச் செயலிழக்கச் செய்யும். அதற்கு முக்கியமாக இப்பிறவியில் தீவினைகளைச் செய்யாதிருக்க வேண்டும்.

வெறுமனே விரதங்களை அனுட்டிப்பதன் மூலம் அவற்றின் பயனைப் பெறமுடியாது. நாம் நல்வினைகளையும் தீவினைகளையும் செய்வதற்கு எமது மனந்தான் அடிப்படைக் காரணம். விரதங்களை அனுட்டிப்பதன் மூலம் நேர்க்கணியமான மனோசக்தியை வளர்த்துக்கொள்ளவேண்டும். உயர்ந்த

மனோசக்தி ஆன்மிக சக்தியை அதிகரிக்கச் செய்யும். ஆன்மிகச் சக்தி இறையருளைப் பெற்றுத்தரும். இறையருள் மனோசக்தியையும் ஆன்மிக சக்தியையும் மேலும் வளரச் செய்யும். மனோசக்தியையும் ஆன்மிக பலத்தையும், இறையருளையும் பெற்ற ஒரு மனிதன் தொடர்ந்து நல்வினைகளையே செய்வான். அவன் ஒருபோதும் தீவினைகளைச் செய்யமாட்டான். அதன் பெறுபேறாக புண்ணியத்தின் அளவை அதிகரிக்கச்செய்து பூர்வபாவத்தின் சக்தியைச் செயலிழக்கச் செய்யலாம். அதன் மூலம் பூர்வபாவத்தால் வரக்கூடிய துன்ப துயரங்களிலிருந்து விடுபட்டுக்கொள்ள முடியும் என்பதுதான் உண்மை.

விரதங்களை வெறுமனே அனுட்டிக்கப்படாது. அவை அர்த்தமுள்ளவையாய் இருக்கவேண்டும். அதன் கருத்து: விரத அனுட்டானங்கள் எமது மனோநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். உதாரணமாக: கடுஞ்சினத்தை சுபாவமாய்க் கொண்ட ஒரு நபர் கந்தசஷ்டி விரதத்தை அனுட்டிப்பதன் மூலம் கோபப்படும் தன்மையைக் குறைக்கவேண்டும் என்று சதா சிந்தித்து மனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். ஆரம்பத்திலிருந்தே படிப்படியாகக் குறைத்து, ஐந்தாறு வருடங்களில் கோபப்படும் தன்மையைப் பூச்சியம் நிலைக்குக் கொண்டுவரும் அளவிற்கு மனோசக்தியை வளர்க்கவேண்டும். விரதங்களின் பயன், அதாவது விரதங்களின் வெற்றி, மனத்தோடு சம்பந்தப்பட்டது. மனத்தோடு தொடர்பு படுத்தாமல் தனித்து உபவாசம் இருப்பதால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை. அதுபோன்று இயற்கையில் அதிக பாலுணர்ச்சிகொண்டவன் ஐயப்பவிரதத்தை அனுட்டிப்பதன் மூலம் அளவிற்கு மீறிய பாலுணர்ச்சியைப் பூச்சியம் மட்டத்திற்குக் கொண்டுவரக்கூடிய மாதிரித் தனது மனத்தை பக்குவப்படுத்தவேண்டும். அதை விடுத்து வெறுமனே சபரி மலைக்குப் போய்வருவதன் மூலம் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது. இலகுவான வார்த்தையில் சொல்வதாயின், விரதங்களின் விளைவு மனதை நல்வினைகளைச் செய்யும்படி தூண்டவேண்டும். தீவினைகளைச் செய்யாதிருக்கப் பண்ணவேண்டும். அப்பொழுதுதான் விரதங்கள் உரியபலன்களை அளித்து நல்வாழ்க்கையை எமக்குப் பெற்றுத்தரும். மனம், வாக்கு, காயம் அதாவது, சிந்தனை, பேச்சு, செயற்பாடு மூன்றும் ஒன்றாகி, நல்வினைகளைச் செய்ய விரதங்கள் உதவ வேண்டும்.

எமது மக்களுக்கு அவர்கள் அனுஷ்டிக்கும் விரதங்களுக்குரிய பலன்கள் கிடைக்காதிருக்கக் காரணம் விரதங்களை வெறுமனே அனுட்டிப்பதாகும். உதாரணமாக: ஒரு பெண் பத்து வருடத்திற்கு மேலாக கேதாரகௌரிவிரதம் அனுட்டிக்கிறாள். இருந்தபோதும் அந்தப் பெண்ணால் தனது கணவனிற்கு உணவு பரிமாற முடியவில்லை. அப்படியாயின் அந்த விரதம் அவளுக்கு என்ன பயனை அளித்தது? இன்னோர் உதாரணமாக: ஓர் ஆடவன் கடந்த ஆறு வருடமாக ஐயப்பவிரதத்தை அனுட்டித்து இருமுடிதாங்கி சபரிமலை சென்று வருகிறார். இருந்தபோதும் அவரால் வேறு பெண்களுடன் உடலுறவு வைத்துக்கொள்ளும் அவருடைய சுபாவத்தை இன்னும் நிறுத்த முடியாதிருக்கின்றது. ஏன்? இவ்விருவரும் தமது விரதத்தை மனதுடன் தொடர்புபடுத்தி, மனதை மாற்றி, நல்வினையைச் செய்ய முயற்சிக்கவில்லை. அதனால் அவர்கள் தொடர்ந்தும் தீவினைகளையே செய்கிறார்கள். விரதங்களின் பயன்களைப் பெறவேண்டுமாயின் விரத அனுட்டாங்களை விட மனக்கட்டுப்பாடு, மன மாற்றம், மன வளர்ச்சி (நேர்க்கணியமான) முக்கியம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். மனத்துடன் தொடர்புபடுத்தப்படாத புறநடவடிக்கையால் எந்தப் பிரயோசனமும் ஏற்படப்போவதில்லை. புற நடவடிக்கைகள் (அனுட்டானங்கள்) எல்லாம் மனக்கட்டுப்பாடு, மனமாற்றம், மனவளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமைய நிர்ணயிக்கப்பட்டவையே ஒழிய அவைதான் விரதங்கள் என்று தப்புக்கணக்குப் போடப்படாது.

எதிர்காலத்தில் எமது சைவசமயத்தவர்கள் விரதங்களை உரிய முறையில் கடைப்பிடித்து, அவற்றின் பலன்களைப் பூரணமாய்ப் பெற்று, துன்ப துயரங்களிலிருந்து விடுபட்டு இன்புற்று வாழவேண்டும் என்ற ஆதங்கத்துடன் இக்கட்டுரையை எழுதுகின்றேன். அவ்வாறு வாழ்வதன் மூலந்தான் எமது சமயமாகிய சைவசமயமும், எமது கலை, கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கைமுறை என்பனவும் இம்மண்ணில் தொடர்ந்து நிலைத்திருக்க முடியும். தவறும் பட்சத்தில் எமது சமயத்தின் மீது வைத்திருக்கும் நம்பிக்கை குறைந்துபோக, அதன் விளைவாக கடவுள் நம்பிக்கையீனமும், மதமாற்றமும் அதிகரிக்கும் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து செயற்படவேண்டும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!"

# திருப்புகழுள் சைவசித்தாந்தம்

நீலா நகுலேசபிள்ளை

முருகப்பெருமானிடம் பிரணவ உபதேசம் பெற்றவர்கள் மூவர். சிவபெருமான், அகத்தியமுனிவர், அருணகிரிநாதர். இதனை முருகர் அந்தாதி -

வேலா சரணம் சரணம் என்மேல் வெகுளாமல்இனி
மேலாயினும் கடைக்கண்பார் பருப்பத வேந்தன்மகள்
பாலா குறுமுனியார்க்கும் திருப்புகழ்ப் பண்ணவர்க்கும்
ஆலாலம் உண்டவர்க்கும் உபதேசித் தனன் ஆண்டவனே”

எனக் கூறுகின்றது.

அருணகிரிநாதர் நினைக்க முத்தி தருகின்ற திருவண்ணாமலையிலே வாழ்ந்தவர். இளமையில் செல்வந்தராக இருந்தமையினால் ஆரம்ப கால வாழ்க்கையை மிகவும் படாடோபமாக கழித்தார். இவரது தவறான வாழ்க்கை முறை காரணமாக இவர் குஷ்ட நோயுற்றார். இதனால் வாழ்க்கையில் வெறுப்புற்று திருவண்ணாமலைக் கோபுரத்தின் மீதேறி கீழே குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார். அச்சமயம் முருகப்பெருமானே அவரைக் கையிலேந்திக் காப்பாற்றினார். அக்கணமே அவரது குஷ்ட நோய் நீங்கியது. அன்று முதல் பாடல்கள் இயற்றும் ஆற்றலும் பெற்று, துறவற வாழ்க்கையையும் மேற்கொண்டார். முருகப்பெருமானின் திருவருளைப் பூரணமாகப் பெற்றதனால் சிறந்த அனுபூதிமானாகத் திகழ்ந்தார். சற்குருவாக வந்து திருவண்ணாமலையில் திருமுருகன் அருணகிரிநாதருக்கு “முத்தைத் தரு பத்தித் திருநகை” என்று அடி எடுத்துக் கொடுக்கப் பாடத் தொடங்கினார். அவருடைய பாடல்களுக்குத் திருப்புகழ் என்னும் பெயரை முருகனே கொடுத்தருளினார். இதனை அவரே பாடிய -

“திருப்புகழ் விருப்பமொடு செப்பென
எனக் கருள்கை மறவேன்”

என்னுந் திருப்புகழால் அறியலாம்.

திருப்புகழ்ப் பாடல்கள் மிக மிக அற்புதமானவை. உலகம் எல்லாம் அற்புதம் என்று ஓதப் பாடும்படி முருகனே அருளினானென்று அவரே சொல்கிறார்.

“பூர்வ பச்சிம தட்சிண உத்தர
திக்குள பக்தர்கள் அற்புதம் என ஓதச்
சித்ர கவித்துவ சத்தமி குத்ததி
ருப்புக ழைச்சிறி தடியேனும்
செப்பென வைத்துல கிற்பர வத்தெரி
சித்தஅ நுக்ரகம் மறவேனே”

என்கிறார்.

‘சந்தம்’ என்ற தமிழ்ச் சொல்லுக்கு ‘அழகு, வண்ணம், சொற்கட்டு, பாடலின் தாள அமைப்பு’ என்று பொருள். சந்தப் பாடலமைப்பில் தாளங்களைப் புகுத்தியவர் அருணகிரிநாதர். நல்ல இசையுணர்வு, தாளக்கட்டுப்பாடு, விறுவிறுப்பான ஒலியுணர்வு, உறுதியான தமிழறிவு, துணிவான நடைப்போக்கு ஆகியவற்றைக் கொண்டு அவர் சந்தப் பாடல்களைப் பாடியுள்ளார். இவரது திருப்புகழ் பாடல்களில் ஓசை நயமும் சந்த நயமும் அதிகம். திருப்புகழைப் படித்துப் படித்து சுவைத்துச் சுவைத்து உணர்ந்து உணர்ந்து அவதானிப்போமேயானால் அவற்றில் இராமாயணக்கதை வரும், பாரதக் கதை வரும், விநாயகர் புகழ்

வரும், சிவபெருமானின் திருவிளையாடல்கள் வரும், அம்பிகையின் பெருமைகள் வரும், அடிமுடி தேடிய கதை வரும், ஆதிசேடனின் ஒரு தலை பூமியைத் தாங்குகின்ற கதை வரும், கண்ணனின் லீலைகள் வரும், திருமாலின் பெருமைகள் வரும். ஸ்ரீபாகவதக் கதைகள் வரும். இன்னும் பலப்பல கதைகள் வரும். திருமாலின் பெருமைகளைப்பற்றி விரிவாகப் பாடி, இத்தகையவனின் மருகோனே என்று பாடியுள்ளமையைக் காணலாம். எல்லாக் கதைகளையும் முருகனோடு இணைத்து அவனது உறவு முறையையும் பாடியுள்ளமை அவதானிக்கத் தக்கது. இவை மட்டுமன்று வேதாந்த சித்தாந்தக் கருத்துகளையும் திருப்புகழில் பரக்கக் காணலாம். சைவ சித்தாந்தக் கருத்துகள் இடம் பெறும் ஒரு சில திருப்புகழ்களைப் பற்றிச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

பரம்பொருளைச் சிவனாகக்கொண்டு வழிபட்டுப் பேரின்பப் பெருவாழ்வு எய்த உதவும் வாழ்க்கை நெறியே சைவசமயமாகும். இதன் கொள்கை விளக்கமே சைவசித்தாந்தம் ஆகும். இச் சைவசித்தாந்தம் என்னும் கொள்கை மிகவும் விரிந்தது; மிக்க செல்வாக்குக் கொண்டது; ஏனைய சமயக் கொள்கைகளைவிட நுட்பமும் திட்பமும் கொண்டது. இக் கொள்கைகளை விளக்கும் நூல்களை சைவசித்தாந்த சாத்திரங்கள் எனக்கூறப்படும். சைவநூல்களை தோத்திரம், சாத்திரம் என்ற பெரும் பகுப்புகளாகப் பிரிக்கலாம். சைவத்திருமுறைகளை "தோத்திர நூல்கள்" எனவும், மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கையும் "சாத்திரநூல்கள்" எனவும் பகுக்கப்படுகின்றது. எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுவது போல பன்னிரு திருமுறைகளிலிருந்து பிழிந்து எடுக்கப்பட்ட சாரமே சாத்திர நூல்களில் காணப்படுகிறது. தோத்திர நூல்களைப் புகழ் நூல் எனவும் சாத்திர நூல்களைப் பொருள் நூல் எனவும் கூறுவர் அறிஞர் பெருமக்கள். தோத்திர நூல்களாகிய சைவத்திருமுறைகளுக்குத் தெளிவான பொருளை விளங்கிக் கொள்வதற்கு சைவ சித்தாந்த நூல்களின் அறிவு தேவை என்பர் அறிஞர்.

"சைவத்தின் மேற் சமயம் வேறில்லை யதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேற் றெய்வம் இல்லெனும் நான்மறைச் செம்பொருள் வாய்
மைவைத்த சீர்த்திருத் தேவா ரமுந்திரு வாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாளெம் உயிர்த் துணையே."

- சைவ எல்லப்ப நாவலர்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாயவன் சிவன்; அவனே பொறிவாயிலைந்தவித்தவன்; அவன் கூறிய நெறியே பொய்தீர் ஒழுக்க நெறியாகிய சைவ சித்தாந்த நெறி. அதுவே சிவனையடைவிக்கும் சீர் நெறி. அதாவது பிறவி என்னும் பெருங்கடலைத் தாண்டிச் சிவபெருமான் திருவடி நீழலைஅடைய வழிவகுக்கும் அருள்நெறி. அவ்வருள் நெறியே எவ்வுயிர்க்கும் பாதுகாவலாகும் என்பது உறுதி. அந்நெறியினை விளக்க எழுந்த இலக்கியம் பன்னிரு திருமுறைகள். தமிழ்ப்பெருமக்களின் மெய்ப்பொருட் சிந்தனையில் கனிந்த தத்துவச் செந்நெறியே இச் சைவசித்தாந்தம். காட்சி, கருதல், நூல் ஆகிய மூவகை அளவைகளாலும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையினை அறிவியல் பூர்வமாக நிலை நாட்டுதலே சித்தாந்தத்தின் முடிந்த முடிபாகும்.

சைவ சித்தாந்த நெறியில் இறைவனை, ஆன்மாக்களை, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களைப் பற்றி விளக்கப்படுகின்றது. இறைவனும் உயிரும் அனாதி. எப்பொழுது தோன்றியவை எனக் கூறமுடியாது. இறைவன் ஞானமயமானவன். உயிர்கள் அனேகம். ஆணவமலம் மூலமலம், அதுவும் அனாதியே. ஆணவமலமாகிய மூலமலம் உயிர்களை அனாதியே பீடித்துள்ளது. கன்மம் நல்வினை தீவினைகளை விளைவிக்கும். மாயை உலகப்பொருள்களில் இச்சையை ஏற்படுத்தும். இவைகளும் அனாதியே. உயிர் இம் மும்மலங்களினால் கட்டுண்டு பிறப்பு இறப்புகளில் சிக்கி இறைவனை அணுகமுடியாமல் தத்தளிக்கிறது. பசுவாகிய உயிரால் பாசமாகிய தளையை நீக்கிக் கொள்ளமுடியாது. அதே போல இறைவனாகிய பதியைப் பசுவாகிய உயிரும், பாசமாகிய தளையும் அணுகமுடியாது. இப்பாசம் நீங்கி, உயிர் பிறப்பு

இறப்புக்களிலிருந்து விடுதலை பெற்று இறைவனை அடையவேண்டுமென்றால், இறைவனே கருணை கூர்ந்து வந்து உயிரை ஆட்கொள்ளவேண்டும். உயிர்களின் சிவகதிக்கு வித்தென விளங்கும் திருமந்திரத்தில் திருமூலர் பின்வருமாறு -

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப்போல் பசு பாசம அனாதி
பதியினைச் சென்று அணுகா, கசு காசம்
பதிஅணுகில் பசு பாசம் நில்லாவே"

கூறியுள்ளமையையும் அருணகிரிநாதர் தமது திருப்புகழில் பலவிடங்களில் அடியேனுக்குப் பிறவிப்பிணி அகற்றி முத்தி நலம் தந்தருள வேண்டும் என்று முருகப்பெருமானிடம் வேண்டியுள்ளமையைக் காணக்கூடியதாயுள்ளது. இங்கே திருப்புகழில் சில பாடல்களைச் சிந்திப்போம்.

"அரிமரு கோனே நமோவென் றறுதியிலானே நமோவென்
றறுமுக வேளே நமோவென் றுனபாதம்
அரகர சேயே நமோவென் றிமையவர் வாழ்வே நமோவென்
றருண சொரூபா நமோவென் றுளதாசை
பரிபுர பாதமா சுரேசன் றருமக ணாதா வராவின்
பகைமயில் வேலா யுதாடம் பரநாளும்
பகர்தலி லாதாளை யேதுஞ் சிலதறி யாவேழை நானுன்
பதிபசு பாசோப தேசம் பெறவேணும்
கரதல சூலாயு தாமுன் சலபதி போலார வாரங்
கடினசு ராபான சாமுண் டியுமாடக்
கரிபரி மேலேறு வானுஞ் செயசெய சேனா பதீயென்
களமிசை தானேறி யேயஞ் சியசூரன்
குரல்விட நாய்பேய்கள் பூதங் கழுகுகள் கோமாயு காகங்
குடல்கொள வேபூச லாடும் பலதோளா
குடதிசை வாராழி போலும் படர்நதி காவேரி சூழுங்
குளிர்வய லூரார மேவும் பெருமாளே."

(வயலூர்)

"இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்"

அறுகுநுனி – (திருவிடைமருதூர்)

"இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி
இடர்கள் பட்டலையப் புகுதாதே
திருவருட் கருணைப் ப்ரபையாலே
திரமெனக் கதியைப் பெறுவேனோ
அரியயற் கறிதற் கரியானே
அடியவர்க் கெளியற் புதநேயா
குருவெனச் சிவனுக் கருள்போதா
கொடுமுடிக் குமரப் பெருமாளே!

(திருப்பாண்டிக்கொடுமுடி)

"புவிபுனல் காலுங்காட்டி சிகியொடு வானுஞ் சேர்த்தி
புதுமன மானும் பூட்டி யிடையூடே
பொறிபுல னீரைந் தாக்கி கருவிகள் நாலுங் காட்டி
புகழ்வழி நாலைந் தாக்கி வருகாயம்
பவவினை நூறுங்காட்டி சுவமதி தானுஞ் சூட்டி
பசுபதி பாசங் காட்டி புலமாயப்
படிமிசை போவென் றோட்டி அடிமையை நீவந்தேத்தி
பரகதி தானுங் காட்டி யருள்வாயே
சிவமய ஞானங் கேட்க தவமுநி வோரும் பார்க்க
திருநட மாடுங் கூத்தர் முருகோனே
திருவளர் மார்பன் போறற திசைமுக னாளும் போற்ற
ஜெகமொடு வானங் காக்க மயிலேறிக்

குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதந் தாக்கி
குதர்வடி வேலங் கோட்டு குமரேசா
குவலயம் யாவும் போற்ற பழவினையி லாலங் காட்டில்
குறமகள் பாதம் போற்று பெருமாளே."
(பழையனூர், திருவாலங்காடு)

புவிபுனல் காலுங்காட்டி – மண், தண்ணீர், காற்று இந்த மூன்றையும் ஒன்று கூட்டி, சிகியொடுவானும் சேர்த்தி – நெருப்பையும் ஆகாயத்தையும் ஒன்றுபடுத்தி, அந்த ஐந்து பூதங்களும் ஒன்றுபட்டு அதனால் வந்தது இவ்வுடம்பு, எனவே இந்த உடம்பைப் பூதபரிணாம தேகம் என்று கூறுவர்.

புதுமன மானும்பூட்டி – புதுமை வாய்ந்த மனமானது குதிரையைப் போல் ஓடித் திரியும் இயல்பை உடையது.

பொறிபுலன் ஈரைந்தாக்கி - பொறிகள் ஐந்து, புலன்கள் ஐந்து முறையே மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பொறிகளும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய புலன்கள் ஐந்துமாகப் பத்துக் கருவிகளும் இந்த உடம்பில் அமைந்திருக்கின்றன.

கருவிகள் நாலுங்காட்டி – மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற நான்கு அந்தக்கரணங்கள் இந்த உடம்புக்குள் பொருந்தியிருக்கின்றன.

புகல்வழி நாலைந்தாக்கி - இந்த உடம்பில் ஒன்பது வாயில்கள் அமைந்திருக்கின்றன. மலம் விடு வழி, நீர் விடும் வழி, வாய், நாசித்துவாரங்கள் இரண்டு, கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு ஆக ஒன்பது.

பவவினை நூறுங் காட்டி சுவமதி தானும் சூட்டி – பாவ வினைகள் பொடிபட அழிந்து போகச் செய்து (நூறுதல் - அழிதல், பொடிபடுதல்) நல்ல அறிவு ஊட்டி பசுபதி பாசங்காட்டி – ஆன்மா, இறை, தளை ஆகிய முப்பொருள்களின் இலக்கணங்களை எனக்கு விளக்க, ஐம்புலன்களும் மாய்ந்தொழிய "இந்த பூமிக்குப் போ" என்று என்னை விரைவில் ஓடச் செய்த உனக்கு அடிமையான என்னை தேவரீர் வந்து வாழ்த்தி முத்தியையும் அடையச் செய்து அருள் புரிவீராக என்று சித்தாந்தச் செந்நாவலர் அருணகிரிநாதர் தெய்வ மணம் கமழும் அவரது திருப்புகழில் பாடியுள்ளதை திருமுருக கிருபானந்த வாரியார் தனது விரிவுரை நூலில் விளக்கிக் கூறியுள்ளார்.

ஐந்து புலன்களும் மாய்ந்து ஒடுங்க வேண்டும். ஐம்புலன்கள் தான் நம்மை ஆட்டிப்படைக்கின்றன என்று கூறும் அருணகிரியாரின் வாக்குகளை

'வேடரென நின்ற ஐம்புலன்கள்', 'ஐம்புல அடவி', 'ஐம்புல வேழம்', 'கலக ஐவர்'

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை" மெய்கண்டாரின் சிவஞானபோதம் எட்டாம் சூத்திரப் பொருளுடன் கருத்திற் கொள்வோமாக.

சிவமய ஞானம் கேட்க தவமுநிவோரும் பார்க்க திருநடமாடுங் கூத்தர்- சிவபெருமான் சனகர் முதலான நால்வருக்கு சிவஞானத்தை உபதேசித்து அருளியமையையும், திருவாலங்காட்டில் கார்க்கோடகன், முஞ்சிகேசர் என்னும் முனிவர்கள் தவம் செய்து அவரது நடன தரிசனத்தைப் பெற்றார்கள் என்பதையும் இத்திருப்புகழிலிருந்து நாம் அறிந்து கொள்ளமுடியும்.

சைவ சித்தாந்தம் கூறும் வினைகள் மூன்று வகைப்படும். சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்று நுட்பமாகவே குறிப்பிடுகின்றன.

"முந்துநுக ருந்துபயன் அந்தமுற வந்த
வினையும்எதிர் வினையும் முடி வினை உதவு பயனால்" என வரும் சிவப்பிரகாசத் தொடரால் (48ம் பாடல்) 'முந்து நுகருந்து பயன்' சஞ்சித வினையையும், 'அந்தமுற வந்த வினை' பிராரத்த வினையையும் 'எதிர்வினை' ஆகாமியத்தையும் குறிக்கின்றன.

இப்பொழுது செய்கின்ற வினை - ஆகாமியம்,
இப்பொழுது அனுபவிக்கின்ற வினை பிராரத்துவம்
முன் செய்து குவிந்திருக்கின்ற வினை சஞ்சிதம்.

இதனை அருணகிரிநாதர் தம் திருப்புகழில் பல இடங்களில் பாடியுள்ளார்.

ஒருவன் நுகரும் இன்ப துன்பத்திற்குக் காரணம் அவன் செய்த பழவினை அதாவது ஊழின்றி வேறு காரணமில்லை. இப்பழவினையைப் போக்குவதற்கு முருகனிடம் வேண்டுமாற்றை பின் வருமாறு காண்க.

"படிமிசை தாளுங் காட்டி யுடலுறு நோய்பண் டேற்ற
பழவினை பாவந் தீர்த்து னடியேனைப் பரிவொடு நாளுங் காத்து"
(திருவாலங்காடு)

"முந்து தமிழ் மாலைகோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி யுழலாதே
முந்தைவினை யேவராமற் போக" (திருச்செந்தூர்)

சைவ சித்தாந்தம் போற்றும் நூல்களுள் இருபத்தெட்டு ஆகமங்களைப் பற்றிய சிந்தனைகளைப்

"பலகலைசி வாகமங்கள் பயில்வோனே" (உலகபசு பாச- பழனி)

" நாவேறு பாமணத்த பாதார மே நினைத்து
நாலாறு நாலுபற்று வகையான
நாலாரு மாகமத்தினூலாய ஞானமுத்தி
நாடோறு நானுரைத்த நெறியாக" (சுவாமிமலை)

என்னுந் திருப்புகழ் பாக்களில் விளக்குகின்றார்.

சைவ சித்தாந்தத்தில் மாயையின் காரியமாகக் கொள்ளப்படும் 'தத்துவம்' என்பது 'மூலமாக உள்ள பொருள்' எனப்பொருள் தரும். தனு கரண புவன போகங்கள் மாயையிலிருந்து தோன்றும்போது,

முதலில் தத்துவங்களாகத் தோன்றுகின்றன. தத்துவங்கள் உலகப்பொருள்களுக்கு மூலமானவை. சிவதத்துவம் 5, வித்தியாதத்துவம் 7, ஆன்ம தத்துவம் 24 ஆக தத்துவங்கள் முப்பத்தாறு எனச் சைவ சித்தாந்தம் விளக்குகிறது. சிவனின் அருட்சக்தி முப்பத்தாறு தத்துவங்களிலும் வியாபித்து நின்று ஆன்மாக்கள் உய்தி பெற உதவுகிறது.

பிரகிருதி மாயா தத்துவங்கள் இருபத்திநான்கின் தொடர்புடையவையும் அவற்றின் கூறுகளும், முக்குணங்களும், நால்வகை வாக்கும் தாத்துவிகம் எனப்படும். இவை அறுபதாகக் கொள்ளப்படும். இந்த அறுபது தாத்துவி கங்களையும் முப்பத்தாறு தத்துவங்களுடன் சேர்த்து தத்துவங்கள் தொண்ணூற்றாறு என்று கூறப்படுவதுண்டு. இதனை அருணகிரிநாத சுவாமிகள் தனது திருப்புகழில்

“ஆறு மாறு மஞ்சு மஞ்சும் ஆறு மாறு மஞ்சு மஞ்சும்
ஆறு மாறு மஞ்சு மஞ்சும் அறுநாலும்
ஆறு மாய சஞ்ச லங்கள் வேற தாவி ளங்கு கின்ற
ஆர ணாக மங்க டந்த கலையான”

(தேவனூர்)

ஆறும் ஆறும் பன்னிரண்டு. ஐந்தும் ஐந்தும் பத்து. அறுநாலும் இருபத்திநாலு இவற்றுடன் ஆறைக்கூட்ட தொண்ணூற்றாறு. சித்தாந்தக்கருத்துகளை விளக்குவது மட்டுமன்றி திருப்புகழைப் படிப்பதற்கு இலகுவான சொல்நடை காணப்படுவதும் மனங் கொளத்தக்கது. இவ்வாறாகச் சைவ சித்தாந்தம் கூறும் கருத்துகள் திருப்புகழில் இன்னும் இன்னும் நிறையவே விரவிக் காணப்படுகிறது.

தேவாரமுதலிகள் சிவாலயங்கள் தோறும் சென்று தேவாரம் பாடியதைப் போன்றே அருணகிரிநாதரும் முருகன் ஆலயங்கள் தோறும் சென்று முருகனைப் பாடியுள்ளார். இவர் முருகப்பெருமானையே சிவனாக நினைந்து வழிபட்ட சிவானுபூதி செல்வராய் விளங்கி இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இவர் தாம் பாடிய பாடல்களில் சைவ சித்தாந்த நுண் பொருள்களையும் புராணங்களிலுள்ள அறநெறிகளையும், சமயக் கதைகள் பலவற்றையும் இணைத்துள்ளார். 15 ம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் தனது காலத்துக்கு முற்பட்டவர்களான சைவத்திருமுறைகள், மெய்கண்ட சாத்திர நூல்கள், திவ்வியப் பிரபந்தங்கள் ஆகிய நூல்களின் ஆசிரியர்களின் கருத்துகளை உள்வாங்கியுள்ளமை அவரது பாடல்களில் பரக்கக் காணக்கூடியதாயுள்ளது. இதனைத் திருப்புகழில் நனைந்து நனைந்து நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து படிப்பவர் விளங்கிக் கொள்வர்.

தேவாரத்துக்குப் பண் போல திருப்புகழுக்குரிய இசை சந்தம் எனப்படும். அருணகிரிநாதரின் சந்தப் பெருமையை தாயுமான சுவாமிகள்

“ஐயா அருணகிரி அப்பா உனைப்போல்
மெய்யாக வோர்சொல் விளம்பினார் - வையகத்தோர்
சாற்றறிதென்று ஏசற்றார் தன்னையாய் முக்கணெந்தை
நாற்றிசைக்கும் கைகாட்டி னான்.”

என விளக்கியுள்ளார்.

பல இராகங்களை ஒரே பாடலில் இணைத்து ‘இராக மாலிகா’ பாடுவது போல் அருணகிரிநாதர் பல தாளங்களை இணைத்து திருப்புகழில் ‘தாளமாலிகா’ பாடியுள்ளார் என ‘சொல்லரசி’ வாரியாரின் மாணவி தேசமங்கையர்க்கரசி கூறியுள்ளார். ஊனும் உடலும் உள்ளமும் உயிரும் உணர்வும் உருக ஓதி கந்தவேள் அருளைப் பெறுவதற்குச் சிறந்தது திருப்புகழ் பாடல்களாகும்.

# சைவமும் தமிழும்

- துறையூரான் -

தமிழுக்குப் பிறப்பெப்போ தெரியவில்லை - செந்
தமிழுக்கோர் எல்லையில்லைத் தேர்ந்திடுங்கள்
சைவத்தின் பிறப்பெப்போ நாமறியோம் - பிற
சமயங்கள் சரித்திரத்தைத் தெரிந்திருந்தும் -நம்
சைவத்தின் சரித்திரத்தைத் தேர்வார் யாரோ?
தமிழும் சைவமும் பின்னிப் பிணைந்திருந்து
தமிழர் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காய்
தரணியிலே எந்நாளும் தளைத்து நிற்கும்!

நாயன்மார், ஆழ்வார், நம்மருளாளர் பலரின்
தூய நல்வாழ்வும் தெள்ளுதமிழ் பாடல்களும்
ஏய எமதப்பன் ஏற்றமிகு பாதங்களை
இன்னல் ஏதுமின்றிச் சேர வழிகோலும்
இப்புவியில் சைவ நெறி நிற்போர்
சமரசமாய் வாழ்வதற்குச் செந்தமிழ் வழிகாட்டும்
சமூகப் பிரச்சனைகள் சகலதும் மறைவதற்கு
சைவம் வழிவகுக்கும் சந்தோசம் நிலவிடும்!

வஞ்சகம் பொறாமை வன்செயல்கள் யாவும்
வையத்தில் இந்நாளில் விரவி இருப்பதற்கு
சைவர்கள் பலரும் சமயநெறி பிசகிவிட்டார்
அதர்மம் அழிவதற்கும் அன்பு நிலைப்பதற்கும்
அப்பர் சம்பந்தர் சுந்தரரும் மாணிக்கரும்
அன்பொழுகப் பாடிய அருமருந்துத் தேவாரங்கள்
அனைத்தும் கூறும் அறவழி நின்றொழுகின்
அப்பன் சிவனின் அருள் கிடைக்கும் எப்போதும்!

# THARANI LAW OFFICE

## தாரணி தர்மலிங்கம் LL.B., Barrister, Solicitor and Notary Public

| | |
|---|---|
| Real Estate Law | வீடு, காணி, வர்த்தக நிலைய உரிமைச்சட்டம் |
| Family Law | குடும்பச் சட்டம் |
| Wills and Estate Law | இறுதி விருப்பாவணம், மரணச் சொத்துச் சட்டம் |
| Power of Attorney and Affidavit | தத்துவ பத்திரமும், சத்தியக் கடதாசியும் |
| Immigration Law | குடிவரவுச் சட்டம் |

சட்டத்துறையில் **20** வருடங்களுக்கு மேலான அனுபவம்

இலவச ஆரம்ப ஆலோசனை



**GTA Square**
213-5215 Finch Ave. East
Toronto, ON
M1S 0C2

Tel: **416-291-4900**
Fax: 416-291-4901

E-Mail: contact@tharanilawoffice.com

# இந்து மதம்

திரு.சண்முகம் சந்திரசேகரன்

உலகிலுள்ள ஒவ்வொரு மதமும் ஒவ்வொரு காலத்தில் ஒரு மகானால் அந்தக் காலத்திற்கு ஏற்ப தோற்றுவிக்கப்பட்டது. ஆனால், இந்து மதம் ஒரு தனிமகானால் தோற்றுவிக்கப்பட்டதல்ல. அது இந்தியாவில் தோன்றிய, உலகின் முக்கிய மதங்களில் காலத்தால் மிகவும் தொன்மையான ஒன்றாகும். அது உலகம் தோன்றியது முதல் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டு, எல்லாக் காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் ஏற்ற வகையில் பின்பற்றப்படுகிறது.

தற்போது இந்துமதம் தவிர, உலகிலுள்ள ஏனைய மதங்களெல்லாம் மூவாயிரம், நாலாயிரம் வருடங்களுக்கு முன் தோன்றியவை. அதற்கு முன்பு இருந்த மதங்களெல்லாம் இப்போது இல்லை. ஆகவே, ஒருவரால் ஒருநாள் தோற்றுவிக்கப்பட்ட எந்த மதமாகவிருந்தாலும் ஒருநாள் அதற்கு முடிவு ஏற்பட்டுவிடுகிறது.

நமது இந்து மதத்திற்கு அதுபோல ஒருநாளும் முடிவு ஏற்படாது. குறைவு ஏற்படலாம். குறைவு அவ்வப்போது தோன்றலாம். ஆனால், அது இறைவனின் அவதாரத்தாலும் மகா ஞானிகளாலும் நிறைவுபெற்றுவிடும். நமது வாழ்க்கையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் இறைவனுடைய ஏட்டினிலே உடனுக்குடன் பதியப்படுகிறது என்பது இந்து சமயத்தவர் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. நாம் ஒருவருக்குத் தீங்குசெய்தால் அதற்குரிய தண்டனை கிடைக்கின்றது. நன்மை செய்தால் நிச்சயமாக நற்பலன் ஏற்படுகின்றது. இவை இறைவனின் தீர்ப்புக்கள் என்பதை இந்து மதம் ஆணித்தரமாக எடுத்துக் கூறுகின்றது.

இந்து மதம் என்றால், ஆழமான தத்துவங்கள் உள்ளடங்கியது. மிக உயர்ந்த வாழ்க்கை நெறிகள் நிறைந்தது. இந்து மதத்தைப் புரிந்து கொள்ளாதவர்களே நாத்திகவாதம் பேசுகின்றார்கள்.

இந்து மதத்தில் உள்ளதுபோல ஆழ்ந்த தத்துவங்கள் வேறு மதங்களில் இல்லை. வாழ்க்கையில் எந்த வீதியில் சென்றாலும் எதிர்ப்படும் மகிழ்ச்சியிலோ துன்பத்திலோ நாம் இறைவனின் எதிரொலியைக் கேட்கின்றோம். அந்த எதிரொலியில் இந்து மதத்தின் சாரத்தைக் காண்கின்றோம். ஒருவன் சராசரி மனிதன் ஆனாலும் தலைமைதாங்கும் மனிதனாக இருந்தாலும் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் மனதார இறைவனை நம்பத் தொடங்குகின்றான். அந்த நம்பிக்கையின் தொடர்ச்சியாக ஏதாவதொரு இந்து மதக்கதை அவன் நினைவுக்கு வருகின்றது. சமுதாயத்தை ஏமாற்றாத எந்த சராசரி மனிதனும் இந்து மத தத்துவத்தை விட்டு விலகிச்செல்லவே முடியாது. மனிதன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவன் செல்லுகின்ற பாதை இந்து மதம் போட்ட பாதையாகத்தான் இருக்கும்.

நமது வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு அனுபவமும் நமது முன்னோர்கள் முட்டாள்கள் அல்ல என்பதை உணர்த்துகின்றது. ஆலமரம்போல தழைத்துக் குலுங்கிநிற்கும் இந்து மதம் நமது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்தையும் ஒவ்வொரு வினாடியையும் அளந்து கொடுக்கின்றது.

இந்தியாவின் வட எல்லையில் தோன்றி, இந்தியா முழுவதும் பரவி, சீனா முழுவதும் கவர்ந்து ஆசியாக் கண்டம் முழுவதும் அடிமைகொண்ட பௌத்த மதம், இந்து மதத் தத்துவங்களால் சீரணிக்கப்பட்டு, இந்தியாவில் இன்று இல்லாமல் போய்விட்டது. தமிழில் ஐம்பெருங் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, சீவகசிந்தாமணி நான்கும், சமண, பௌத்த மரபுகளைக் காட்டுவதை எண்ணிப் பார்க்கும்போது, சமண, பௌத்த மதங்களின் செல்வாக்கு தென்குமரிவரை எப்படிப் பரவியிருந்தது என்பதை அறிய முடிகிறது. சமண, பௌத்த மதங்கள் பெற்றிருந்த செல்வாக்கை எமது வரலாறுகள்

குறிப்பிடுகின்றன. இன்று அவையனைத்தமே இந்து மதத்தின் தத்துவங்களுக்குள் அடங்கிவிட்டன.

இத்தகைய பெருமைவாய்ந்த இந்துசமயம் உலகிலேயே மூன்றாவது பெரிய சமயமாக இருக்கின்றது. பல்வேறு வகையில் பரவலான நம்பிக்கைகள், சடங்குகள், சமய நூல்கள் ஆகியவற்றை உள்வாங்கி உருவான ஒரு சமயமே இந்து சமயம். பெரும்பாலான இந்துக்கள் இந்தியாவிலேயே வாழ்கின்றார்கள். நேபாளம், இலங்கை, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், சூரினாம், பிஜித் தீவுகள், அமெரிக்கா, கனடா, மற்றும் பல நாடுகளிலும் இந்துக்கள் குறிப்பிடத்தக்க அளவு வாழ்கின்றார்கள்.

இந்து சமயம் வேதங்களையும், தொடர்ந்து வந்த உபநிடதங்களையும் மற்றும் காலங்காலமாக பல்வேறு குருமார்களின் அறிவுரைகளையும் ஆதாரமாகக் கொண்ட ஆன்மிக அடிப்படையில் தங்கியுள்ளது. வேத/ தத்துவ ஞானப் பிரிவுகள் பக்தி இயக்கப் பிரிவுகள் மற்றும் தந்திர ஆகமப் பிரிவுகள் என்பவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் சிந்தனை ஓட்டங்கள் அனைத்தும் இந்து சமயம் என்ற ஒரே சமுத்திரத்தில் சங்கமமாகின்றன.

"சனாதன தர்மம்" அல்லது நிலையான தத்துவ ஞானம் என்பதே பல ஆயிரம் ஆண்டுகளாக இந்து சமயத்தைக் குறித்துவந்த பெயராகும். இந்துக்களைப் பொறுத்தவரை இது மனிதனால் உருவாக்கப்பட்டவற்றைக் கடந்து, தனி மனித விருப்பு வெறுப்புக்களைக் குறிக்காது, தூய உணர்வுபூர்வமான அறிவியலைக் குறிக்கும். அத்துடன், சில ஆன்மீகக் கொள்கைகள் என்றும் நிலைத்திருக்குமென்ற எண்ணத்தைப்பற்றி இந்து சமயம் பேசுகின்றது.

இந்து சமயத்தில் பலவிதமான கர்மங்கள் பின்பற்றப்பட்டுவருகின்றன. அவற்றில் பக்தி யோகம், கர்மயோகம், ராஜயோகம், ஞானயோகம் ஆகியன முக்கியமானவையாகும். இந்த யோகங்கள் இந்து மதத்தின் இரண்டு முக்கிய நூல்களான பகவத் கீதை மற்றும் யோக சூத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்து சமயத்தவர் கடைப்பிடிக்கவேண்டிய தலையாய நான்கு இலக்குகளான அறம், பொருள், இன்பம் வீடு, ஆகியவை கருதப்படுகின்றன. அனைத்து உயிர்களும் இளமையில் பொருள், இன்பம், (உடல், உள்ளம், உணர்வு) ஆகியவற்றைத் தேடுதல் இயல்பென்றும், மனம் முதிர்ச்சிபெற்றவுடன் இவற்றின் நெறிசார்ந்த தேடுதலை உயர் கட்டமைப்பான அறத்தின்கீழ் முறைப்படுத்தப்படுகின்றது. இருந்தும், வாழ்க்கையில் நிலையான மகிழ்ச்சியைத் தருவது வீடு, முக்தி, உய்வு, கடைத்தேற்றம் என்று பலவாறாக அழைக்கப்படும். பிறப்பு, இறப்பு அற்ற விடுதலையே நிலையானது எனக் கூறுப்படுகின்றது. இந்த நான்கு இலக்குகளில் அறம், வீடு என்பவற்றைக் கரைகளாகவும், இன்பம், பொருள் என்பவற்றை அவற்றிற்கு இடையே ஓடுகின்ற ஆறு என்றும் சிலர் நோக்குகின்றனர்.

இந்து மதத்தில் இறைத்தொண்டு முக்கிய இடத்தை வகிக்கின்றது. இறைத்தொண்டு என்பது கோயில்களைக் காப்பாற்றி, அக்கோயில்களில் குடியிருக்கும் கடவுளுக்கான வழிபாடுகளைச் சிறப்பாகச்செய்வதும், பல ஊர்களில் சேதப்பட்டிருக்கும் கோயில்களைப் புனரமைத்து, வழிபாட்டு முறைகளைத் தொடரச் செய்வதுமாகும். மக்கள் சேவை என்பது ஏழைகளுக்கும், இல்லாத, இயலாத மக்களுக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம், நோய்க்கு மருந்து, கல்விச் செல்வம் ஆகியவற்றை அளிப்பதுமாகும். இந்து மதத்தில் இறைத்தொண்டும் மக்கள் தொண்டும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

இந்து மதத்தைப்பற்றி பல்வேறு விதமான விமர்சனங்கள் எழுந்தாலும் அனைத்தையும் தாங்கி, இம்மதம் வளர்ந்து வருகின்றது. இன்று, அமைதியை நாடி, ஆன்மீகத்தை நாடி மேலை நாட்டவர்கள் பலர் இந்து சமயத்தைத் தேடி வருகின்றனர். இந்து சமயம் ஒரு பெரிய சமுத்திரம் போன்றது. அதன் சிறப்புக்களை இச்சிறிய கட்டுரைமூலம் அடக்கிவிட முடியாது. இந்து சமயம் கூறும் வாழ்க்கை நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பது எமது ஒவ்வொருவரதும் கடமையாகும். நாம் அனைவரும் இந்துக்கள் என்று பெருமையுடன் கூறவேண்டும். அதுதான் எமது சமயத்திற்கு நாம் செய்யும் பெரிய தொண்டாகும்.

# மாணவர் பக்கம்

## குங்குலியக் கலய நாயனார்

விகிர்தன் கேசவன்

திருவீரட்டானம் எனும் திருக்கோயிலில் தினமும் பரமசிவனுக்கு குங்குலியம் தூவி வழிபட்டுவந்தார் கலயர் என்ற சிவபக்தர். எத்தனை வறுமைப்பட்டபோதும் இந்சச் சிவதொண்டை விடாது செய்துவந்தார்.

குடும்பத்தில் பசியும் பட்டினியும் தாண்டவமாடியபோது, தாலியைக் கழற்றிக் கொடுத்து நெல்மணி வாங்கிவரும்படி அவரது மனைவி அவரை அனுப்பினார். அதனைப் பெற்றுக்கொண்டு செல்லும் வழியில், ஒரு வணிகர் குங்குலியப் பொதி கொண்டுவருவதைப் பார்த்து சிவனுக்கு குங்குலியத் தூபம் இடுவதைக் காட்டிலும் சிறந்த பேறு வேறு எதுவும் இல்லை என்று எண்ணி கையிலிருந்த தாலிக்கு ஈடாக குங்குலியம் வாங்கிக்கொண்டு சிவாலயம் சென்று வழிபட்டார்.

தாலியை எடுத்துக்கொண்டுபோன கணவர் வீடு திரும்பாத நிலையில், பசியும் பட்டினியுமாக இருந்த கலய நாயனார் குடும்பத்தின் வறுமையைப் போக்க எண்ணிய சிவபெருமான் வீடு முழுக்க பொற்குவியலும், நெற்குவியலும், அரிசியும், பிற தானியங்களும் நிறைந்து இருக்கும்படி அருளினார்.

வீட்டுக்குச் சென்ற குங்குலியக் கலய நாயனார் இறைவனின் இச்செயல்கண்டு, மெய் சிலிர்த்தார். திருப்பனந்தாள் எனும் ஊரில் வீற்றிருக்கின்ற சிவலிங்கம் சாய்ந்திருந்ததால், அதனை நிமிரச்செய்து வழிபடுவதற்கு அந்த ஊர் மன்னன் எத்தனையோ முயற்சி செய்தும் முடியவில்லை.

யானைகளையெல்லாம் கயிற்றால் கட்டி சிவலிங்கத்தினைஇழுத்துப் பார்த்தும் நிமிரச்செய்ய முடியவில்லை. குங்குலியக் கலய நாயனார் அங்கு சென்று"அடியேனின் அன்புக் கயிற்றுக்கு அடிபணிய வேண்டும்" என்று வேண்டியபடி சிவலிங்கத்தை நிமிர்த்த, அது நிமிர்ந்தது.

இவரது சிவத்தொண்டின் பெருமையை அறிந்து திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், திருநாவுக்கரசு நாயனாரும் வர, அவர்களை எதிர்கொண்டு அழைத்து திருவமுது படைத்து பேறு பெற்றார்.

# மாணவர் பக்கம்

## Devasena, Shanmukan, and Valli

**By: Nirahulan Puvanenthira**



**E**ons ago in the mountain of Valli Mallai, lived a beautiful dame named Valli who was an ardent devotee of Lord Murugan. When Valli, turned 12, she was sent to the millet field to protect the crops from wild birds. One day the Sage Naradar who happened to be in the vicinity saw Sri Valli, and went down to Thanikai to tell Lord Murugan about her love and devotion to him.

Lord Murugan disguised himself as a hunter and came down to Valli Mallai. As soon as he arrived he went to Sri Valli and asked her about her family. At that moment, Chief Nampi the head of the hunting clan and adoptee father of Sri Valli came with his men to deliver food for his daughter. Sensing the imminent danger Lord Murugan took the form of a tree. When Chief Nampi and his men left, Lord Murugan took his true form and told Sri Valli that he loved her. Sri Valli said that it was not proper for him to love a woman from the lower tribes, who are only hunters. At that time the sound of drumming and music of the hunters were heard. Sri Valli warned him that the hunters were wild men and they would harm him. Immediately Lord Murugan took the form of an elderly Siva devotee. Chief Nampi and his men took the blessings from him, and left peacefully. The old man asked Valli for food, and Sri Valli game him millet flour mixed with honey to eat. Then Sri Valli took the elderly devotee, to the nearby pond to quench his thirst. The elderly devotee then asked Sri Valli; 'Now that you have quenched my thirst, will you satisfy my love too?" Sri Valli wanted to return to the field. Lord Murugan thought of his brother Lord Vinayagar and wished he take away the obstacle for their union. With the help of Lord Vinayagar, who came in the form of a frightening elephant, and scared Valli. Out of fear she ran into the hands of the elderly devotee for protection. He took her into a thicket bush and Lord Murugan revealed his true form; Shanmukan, with 12 arms, 6 heads, seated on a peacock (*Mayura Vahanam*). With shock Sri Valli realised that she was seeing her loving God Lord Murugan. He revealed to her the fact that she was indeed the daughter, of Sri Venkateswarar (Maha Vishnu).

Sri Valli gladly agreed with Lord Murugan's wish as they both loved each other. As time approached the hunters called Sri Valli to get back to home. Reaching home Sri Valli missed the lord and looked very sad and disappointed. Her mother had noticed it. When Lord Murugan returned to the millet field and not finding her there, he headed to towards her hamlet, and took away Sri Valli with him. The next morning when Chief Nampi's wife woke up discovered that Sri Valli wasn't there. The

# மாணவர் பக்கம்

hunters organized a search party to find Sri Valli and wanted to stop the fugitives. When they reached Lord Murugan and Sri Valli the hunters dis-charged their arrows at Lord Murugan, but the beautiful peacock crowed and the hunters fell dead. Sri Valli stared at the bodies, but the Lord took her away with him.

Along their way they met Sage Narathar, and he advised them to go consult with their parents before doing anything. Lord Murugan requested Sri Valli to go tell her parents and that he would come properly to seek her hand. Astonished to realise who the suitor was they gladly accepted their union and told that their wedding should happen according to their custom. All the villagers from the tribe joined in to watch the auspicious occasion. Chief Nampi placed the hand of Sri Valli on Lord Murugan's hand, and declared them married. Sage Narathar helped with the wedding. All the gods blessed the two from heaven. A grand feast was given to the guests at the wedding as their custom was; with plenty of honey, millet flour and jungle fruits. After a day at Tirutani, Lord Murugan and Valli Amman headed to Skandagiri where they were greeted by Devasena Amman. She was initially disappointed in what Murugan had done. After much persuasion Devasena Amman agreed to his wish. From that day on Lord Murugan had two consorts Valli Amman and Devasena Amman.

************

## சைவசமயப் பழக்க வழக்கங்கள்

அஸ்வின் வ.

சைவ சமயப்பழக்க வழக்கங்கள் எமது நல்வாழ்விற்கு வழிகாட்டுகின்றன. அவை, மனம், மொழி, செயல் அனைத்தையும் தூய்மைப்படுத்துகின்றன. நாம் எந்தக் காரியத்தையும் செய்யத் தொடங்கும்போதும் இறைவனை வழிபட்டு செய்யத் தொடங்க வேண்டும். அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்பதை உணர்தல் வேண்டும்.

காலைக் கடன்களை முடித்து, நீராடி, பின்னர் நெற்றியில் திருநீறு அணிதல் வேண்டும். வடக்கு அல்லது கிழக்குத் திசையை நோக்கி நின்று "சிவ சிவ" என்று சொல்லி திருநீறு அணிதல் வேண்டும். வீட்டில் உள்ள சுவாமி படங்களுக்கு காலையும், மாலையும் திருவிளக்கு ஏற்றி மலர்கள் வைத்து வழிபடுதல் சைவ சமயப்பழக்க வழக்கங்களில் ஒன்றாகும்.

தினமும் உணவு உண்ணுமுன், இறைவனை வழிபட்டுவிட்டு உண்ணத் தொடங்குதல் வேண்டும். எவர் மீதும் பொறாமை கொள்ளல், பழி சொல்லுதல் கூடாது. மற்றவர்கள் செய்யும் நற்செயல்களைப் பாராட்ட வேண்டும். பிறரை மதிக்க வேண்டும். நல்லன செய்யப் பழக வேண்டும். சைவ சமயப் பழக்க வழக்கங்களை என்றும் கடைப்பிடித்து நற்பண்புள்ள பிள்ளைகளாக வாழ்வோம்.

************

# மாணவர் பக்கம்

## மகாத்மா காந்தி அடிகள்

யோகேஸ்வரன் தனுஷ்காந்த்



உலகின் பல நாடுகளை இங்கிலாந்து கைப்பற்றி ஆட்சிசெய்து வந்தது. இதனால் அந்நாட்டு மக்கள் அடிமைகளாக வாழ்ந்தார்கள். இதனைக் கண்ட காந்தியடிகள் அவர்களை ஒன்றிணைந்து அகிம்சை முறையில் போராட்டங்களை நடத்தி, வெற்றிபெற்று அம்மக்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். சிறுவயது முதலே நல்லொழுக்கம் உடைவராக இருந்ததால், வெள்ளையர்களே மதிக்கும் உலகத் தலைவராக ஆனார்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் இவர் பிறந்தார். அரிச்சந்திரன் - சந்திரமதி நாடகங்களைப் பார்த்து உண்மை பேச வேண்டுமென்பதை உணர்ந்தார். சட்டம் கற்க இங்கிலாந்து சென்ற போது, தாயார் சொன்ன அறிவுரைகளான "மது அருந்தாதே", "பொய் சொல்லாதே", என்ற அறிவுரைப்படி வாழ்ந்து மற்றவர்களால் மதிக்கப்படும் நல்ல மனிதரானார். வழக்குத் தொடர்பாக தென்னாபிரிக்கா சென்றதால் அங்கிருந்த மக்களையும், இந்தியர்களையும் வெள்ளையர்கள் அடிமைகளாக நடத்தியதை உணர்ந்தார். தென்னாபிரிக்க மக்களையும் இந்தியாவிலும் மக்களும் விடுதலையின்றி வெள்ளையர்களால் அடிமைப்படுவதை உணர்ந்தார்.

இந்திய விடுதலைப் போராட்டங்களை ஒன்றிணைத்து மென்மையான சத்தியாக்கிரகப் போராட்டமான அகிம்சைப்படி போராடி இந்தியாவிற்கு விடுதலை பெற்றுக்கொடுத்தார். ஆசியாவையே இங்கிலாந்திலிருந்து விடுதலை பெறச் செய்தார்.

வெள்ளையர்கள் மகாத்மாவின் சத்தியசோதனை எனும் அவரது சுயசரிதையை ஆங்கிலத்தில் சினிமாப் படமாக்கி, காந்தியின் வாழ்க்கையில் ஒழுக்கத்தின் பயனையும், மக்களை ஒன்றுதிரட்டும் திறமையையும், மற்றவர்களுக்காக வாழ்ந்த தன்மையையும், எளிமையான வாழ்க்கையையும் உலகிற்கு எடுத்துக்காட்டினர். நாமும் அவரைப்போல் உயர்வோம்.

*************

# மாணவர் பக்கம்

## எமது வழிபாடு

சத்தியலக்ஷ்மி

உலகத்தில் ஊருக்கேற்றபடி சமயங்கள் உண்டு. நாம் ஈழ மக்கள். எங்கள் நாட்டில் இந்து மக்களும் வசிக்கின்றார்கள். இந்து சமயத்தில் பல வித கட்டுப்பாடுகள், விரதங்கள் உண்டு. நாம் ஸ்னானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடை அணிந்து ஆலயத்திற்கு செல்வோம்.

எங்கள் சமயத்தில் பல தெய்வங்கள் உண்டு. சிவன் பார்வதி பிள்ளையார், முருகன், வயிரவர், அம்மன், வீரபத்திரர், ஆஞ்சனேயர், ஐயப்பன் என்னும் பலபல தெய்வங்கள் உண்டு. முதலில் பிள்ளையாரை வணங்கியே எல்லாக் கருமங்களையும் செய்வோம். விக்கினேஸ்வரர், கணபதி, பிரணவன், யார்பிள்ளை என்று பிள்ளையாரைக் கூறுவோம்.

இந்துசமயத்தில் உள்ள அக்கறை காரணமாக அறுபத்து மூன்று நாயன்மார்கள் பல வித இன்னல்களை அனுபவித்தனர். திருஞானசம்பந்தர், திரு நாவுக்கரசர், மாணிக்கவாசகர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகியோர் சிவபெருமானின் அருளைப் பெறுவதற்காக தேவரங்களைப்பாடி எத்தனையோ கஸ்ரங்களை அனுபவித்தனர். தேவாரங்களை இசையோடு பாடினால் கருங்கல்லில் இருந்தும் நீர் வடியும் என்பர் அறிஞர். நாம் இறைவனிடத்தில் உண்மையான அன்புள்ளவர்களாக இருந்தால் இறைவனடி சேரலாம். இந்து சமயத்தவர்களுக்கு தைப்பொங்கல் முக்கியமான ஒரு நிகழ்வாகும். அதிகாலையில் எழுந்து முற்றம் மெழுகி, கோலம் போட்டு புதுப்பானையில் பொங்கி சூரியனுக்கு படைத்து வணங்குவார்கள். அடுத்த நாள் மாடு வளர்ப்பவர்கள் மாடுப்பொங்கல் பொங்கி மாடுகளுக்கு நன்றி செலுத்துவர்.

சித்திரை மாதம் புதுவருடப்பிறப்பு கொண்டாட்டம் கொண்டாடுவர்கள். நிறைகுடம் வைத்து கும்பிட்டு கைவிசேசம் பரிமாறி உறவினர்கள் வீடு சென்று விருந்தோம்பல் செய்வார்கள். ஆடிமாதம் அன்று ஆடிக்கூழ் காய்ச்சி, கொழுக்கட்டை அவித்து உறவினர்களுடன் பகிர்ந்து கொண்டாடுவர்கள்.

எங்கள் ஊரில் உள்ள கோவில்களில் திருவிழா காலங்களில் கொடி ஏற்றுவார்கள். அந்தக் காலங்களில் ஆண், பெண் என வித்தியாசம் இன்றி விரதம் அனுஷ்டித்து பெண்கள் அடி அழிப்பர்கள். ஆண்கள் பிரதட்டை செய்வார்கள், காவடி எடுப்பர்கள்.

சைவ சமயத்தில் விரதங்கள் பல வகை இருக்கின்றன. அவற்றில் கந்தசஷ்டி விரதம் மிகக்கடுமையான விரதமாகும். கந்தனை நினைந்து வணங்கி பிடிக்கும் விரதம். எல்லாத் தெய்வங்களுக்கும் ஒவ்வொரு விதமான விரதங்கள் உண்டு.

உன்னைப்பாடும் பணி ஒன்றே போதும். நன்றுடையானை தீயது இல்லானை புண்ணியம் செய்தனை நெஞ்சமே இறைவா உம்மை எப்படிப் பாடினரோ? அப்படியே நானும் பாடுவேன். சக்தி ஓம் சக்தி.

****************

# "பற்றுக பற்றற்றான் பற்றினை"

கலாபூஷணம் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

'யான்', 'எனது' என்னும் இருவகைப் பற்றுக்கள் எம்மை விடாது பற்றிக்கொண்டிருக்கின்றன. இவையே நாம் அனுபவிக்கவேண்டிய இன்பங்களை அனுபவிக்க விடாமல் தடுக்கின்றன. இந்த இடத்திலேயே சமயம் நமக்கு உதவ முன்வருகின்றது. சைவ சமயத்தின் நோக்கம் எம்மைக் கடவுளின்மீது பற்றுவைக்கச் செய்வதாகும். துன்பம் தருவனவற்றில் பற்றுவைக்காது தடுப்பதும் அதன் இன்னொரு நேக்கமாகும். 'புன்னெறியதனிற் செல்லும் போக்கினை மாற்றி மேலாம் நன்னெறியதனிற் செல்ல' எமக்கு வழிகாட்டுவது சமயம். இதனால் நாம் அடைய விரும்பும் இன்பத்தை அனுபவிக்க முடிகின்றது. இந்த நிலையில் ஒன்றின் மேல் வைத்த பற்றைப் போக்குவதற்கு இன்னொன்றின் மேல் பற்றுவைக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இது சாதாரண உலகநிலை. இவ்வாறே துன்பங்களுக்குக் காரணமான பற்றுக்கள், ஆசை, அவாக்கள் என்பவற்றை விட்டு நீங்க வேண்டுமாகில் அதற்கு ஒரேவழி எவ்வித பற்றுக்களும் இல்லாத கடவுளை இறுகப் பற்றுதலேயாகும். கடவுள் விருப்பு, வெறுப்பு அற்றவர். பற்று, ஆசை, அவா என்று கடவுளுக்கு எதுவும் கிடையாது. இதனையே வள்ளுவப் பெருந்தகையும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்கிறார்.

கடவுளிலே எமது பற்றினை எப்படி நாம் வளர்க்கலாம்? பற்று பரிச்சயத்தின் மூலம் வளர்கிறது. அடிக்கடி அளவளாவி அன்பு காட்டி, கிடைக்கும் இன்பத்தில் பங்குகொண்டு மகிழ்வதன்மூலம், பற்று இறுக்கமாகிறது. பின்னர் ஒரு நிலையில், பிறவற்றையெல்லாம் முற்றாக மறந்து பற்றுவைத்த குறித்த அந்த ஒன்றினையே எந்நேரமும் விடாது சிந்தித்து, அதனுடன் உணர்வுபூர்வமாக ஒன்றித்து உறவாடி, எவ்விதத்திலும் விட்டு நீங்காது, உடனுறையும்போது பற்று முற்றி முழுமை பெறுகின்றது.

கடவுளைக் காலையிலும் மாலையிலும் மற்றும் நேரங்களிலும், நின்றும் இருந்தும், கிடந்தும், நடந்தும் மற்றும் பணிகளைச் செய்யும்போதும் கடவுளை நினைந்து அன்போடு தியானிப்பதால் கடவுள்மீது எமது பற்றினை வளர்த்துக்கொள்ளலாம். திருக்கோயில் வழிபாட்டினாலும் பிரார்த்தனைகள், திருமுறை ஓதுதல் போன்றவற்றாலும், கோயில்களில் திருத்தொண்டுகள் செய்வதினாலும் கடவுளின் படைப்புக்களான மனிதர்களையும், ஏனைய உயிரினங்களையும் நேசித்துச் சேவிப்பதாலும், தான் மேற்கொண்டுள்ள தொழில்களை நேர்மையுடனும், தூய்மையுடனும் செய்வதாலும், எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்று எண்ணங்கொள்வதாலும், அவ்வாறே சொல்லிலும் செயலிலும் நிறைவேற்றுவதாலும் கடவுளிலேயுள்ள எமது பற்றினை நன்கு இறுக்கமாக்கிக்கொள்ள முடியும். இவ்வாறு வாழ்க்கையை நாம் செம்மையாக அமைத்து, வாழ்வாங்கு வாழும்போது, கடவுளிலேயுள்ள பற்று முற்றி முழுமைபெற்று, நாமும் தெய்வீக நிலையைப் பெற்று விடுகின்றோம். இந்தநிலை கிட்டும்போது,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாம்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

என அப்பரடிகள் கூறிய அந்த உயர் விழுமிய நிலையை அடையப் பெற்றுவிடுகிறோம்.

சிறுவயதிலிருந்தே கடவுளில் பற்று வைக்கும் பழக்கத்தையும், பயிற்சியையும் பிள்ளைகளுக்குத் தருவது தந்தை, தாய், ஆசிரியர், சுற்றத்தவர், சமய, சமூகப் பெரியார்கள் ஆகியோரின் தலையாய கடமையாகும். இத்தகைய பழக்கத்தைத் தமது

போதனை மூலத்திலும் பார்க்கக் கூடுதலாக வாழ்க்கையில் கடைப்பிடித்து, நடந்து காட்டுவதன்மூலமாக ஏற்படுத்தப்படுவது அதிக பலனைத் தரும். பண்டைய சமூகங்களில் மூத்த தலைமுறையினர், இளந் தலைமுறையினருக்கு இத்தகைய நல்ல பழக்க வழக்கங்களைச் சாதனைகள் வாயிலாக அளித்து வந்ததன் நிமித்தம் சமூகங்களில் குழப்பங்கள் இன்றி நிம்மதி இருந்தது. 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என இளையோரால் உளங்கொள்ளப்பட்டு வந்தது. மூத்தோரும் சொற்படி நடந்துங் காட்டினார்கள். பிள்ளைகளும் சொல்வழி கேட்டு நடந்து வந்தனர். இந்த விழுமிய நிலையினை மீளவும் நமது சமுதாயத்தில் மலரச்செய்தல் அவசியமாகிவிட்டது. பெற்றோர்கள், மூத்தோர்கள், வளர்ந்தவர்கள் மற்றும் சமய, சமூகப் பெரியார்கள் மனம்போன போக்கில் நடந்துகொண்டு தம் பிள்ளைகளைத் திருத்த முயல்வதோ, அவர்களுக்கு ஒழுக்கம் கற்பிப்பதோ பயன்தரக் கூடிய செயல்களல்ல. பிள்ளைகள் ஏனையோரைப் பார்த்து அவர்களைப் போல நடக்கும் இயல்பினர். எனவே, பிறரைத் திருத்து முன், தாம் திருந்தி நடந்துகொள்ளுதல் மிக அவசியம். சிறுபராயத்தில் பிள்ளைகள் கற்கும் நல்ல ஒழுக்கப் பண்புகள், விழுமியங்கள் என்பன என்றும் நிலைத்து நிற்கக் கூடியன. வீட்டில் தாய், தந்தையர்களும், பாடசாலையில் ஆசிரியர்களும் சமூகத்தில் பெரியவர்களும் நல்லமுறையில் வாழ்ந்து காட்டுவதன்மூலம் பிள்ளைகளும் இவர்களைப் பார்த்து நல்வாழ்வு வாழக் கற்றுக்கொள்வர். நாம் ஒவ்வொருவரும் இதனை உணர்ந்து நல்ல பண்புள்ள சமுதாயத்தை உருவாக்க முயல்வோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெலாம்"

# உறவுகள் மேம்பட

* நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.
* எந்த விடயத்தையும் பிரச்சினையையும் நாசூக்காகக் கையாளுங்கள். விட்டுக்கொடுங்கள்.
* சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள். நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்ற வாதிடாதீர்கள்.
* குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
* மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்துக் கர்வப்படாதீர்கள்.
* அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
* எல்லாரிடத்திலும் எல்லா விடயங்களையும் அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிராதீர்கள்.
* கேள்விப்படுகிற எல்லா விடயங்களையும் நம்பிவிடாதீர்கள். உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள்.
* மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள்.
* மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய - இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.
* புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும்கூட நேரமில்லாததுபோல் நடந்துகொள்ளாதீர்கள்.
* பேச்சிலும் நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து, அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.
* பிரச்சினைகள் ஏற்படும்போது, அடுத்தவர் முதலில் இறங்கிவரவேண்டும் எனக் காத்திராமல் நீங்களே பேச்சைத் துவக்க முன்வாருங்கள்.

# ஆலய வழிபாடு

திருமதி. பவானி இளங்கோ

சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமே சைவசமயம் ஆகும். இறைவனை வழிபட உகந்த இடமானது திருக்கோயில் ஆகும். ஆன்மானக்கள் தத்தம் மனங்களை ஒருமுகப்படுத்தி இறைவனிடம் லயப்படுகின்றமையினால் அது ஆலயம் எனப்படும். அதாவது ஆன்மா லயித்திருக்கும் இடம் தான் 'ஆலயம்'' ஆகும். இந்த ஆலயம் மிகவும் புனிதமான இடமாகும். எனவே, அங்கு செல்வோர் தமது உடலையும் மனதையும் சுத்தமாக்கி உள்ளே செல்ல வேண்டும்.

பாதங்களைக் கழுவுதல்

தினமும் ஆலயத்தில் சொல்லப்படும் மந்திர ஒலிகள் மூலம் எண்ணற்ற அதிர்வுகள் உண்டாக்கி, அதில் பதிந்தும் உள்ளன. அத்துடன் அங்கு தேவர்கள் காலடி பட்ட இடத்தில் எமது கால்கள் படவேண்டும். எனவே, பாதணியைக் கழற்றி வெளியே வைத்துவிட்டு பாதங்களைக் கழுவி, கழுவிய பாதத்துடன் புனிதமாக பூமியில் கால்படும்போது எம்முள் தெய்வீக அலைகள் பாதத்தினூடு உடலெங்கும் பரவ இடமுண்டாகின்றது.

ஆலய வணக்கம்

உள்ளே வணக்கம் செய்ய முறைகள் உண்டு. தமக்கு ஏற்ற முறையில் வணக்கம் செய்ய வேண்டும். ஆலய கோபுரத்தைக் கண்டதும் இருகைகளையும் தலையில் குவித்து வணங்கிக் கொண்டு கொடி மரத்தைத் தாண்ட முன்பு விழுந்து வணங்கல் வேண்டும்.

மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, உருத்திரனிற்கு சிரசின் மேல் 12 அங்குலம் கை உயர்த்திக் கும்பிட வேண்டும். ஏனைய தெய்வங்களிற்கு சிரசின் மேல் கை வைத்து வணங்கலாம். ஆண்கள் பகல் 12 மணிக்குப் பின்னரும், சூரியன் மறைய முன்னரும் அட்டாங்க நமஸ்காரம் செய்யக்கூடாது.

ஆலயத்தை வலம் வருதல்

ஆலயத்தை மூன்று முறை வலம் வந்தால் விரும்பிய காரியம் நடக்கும். ஐந்து முறை காரிய வெற்றி, ஏழு முறை எனில் அமைதியும் நல்ல எண்ணமும் உண்டாகும். ஒன்பது முறை என்றால் ஆயுள் விருத்தியும், 12 முறை எனில் உடல் வலிமையும் உண்டாகும். ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யலாம். ஆனால், பெண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யக்கூடாது. பெண்கள் அடிமேல் அடிவைத்து, அடிப்பிரதட்சணம் செய்யலாம்.

கற்பூர ஆரத்தி

கற்பூர ஆரத்தியின்போது கற்பூரம் எரிந்த மீதி எதுவுமே இருக்காது. தீபம் எரிகையில் இறையருள் அங்கே இருக்கும். அதில் ஆன்மா கரைந்து ஒன்றுபடும். இதுவே கற்பூர ஆரத்தித் தத்துவம்.

பூஜையும் நைவேத்தியமும்

மணி அடிக்கையில் அசுரர்கள் ஓடி தேவர்கள் வருவார்கள். தேவர்களை அழைப்பதற்கே மணி அடித்து பூஜை பண்ணுகிறோம். நைவேத்தியம் வைத்து இறைவா உன்கருணையால்தான் இந்த உணவுற்பத்தி தாவரங்களில் நடைபெற்றது. அதை உனக்களித்து நன்றி செலுத்தி உன் அனுமதியுடன் நாம் உண்கிறோம் என்று தெரிவித்தலே பொருள்.

தீப வழிபாடு

இறைவனுக்கு தீபவழிபாடு செய்யப்பயன்படும் விளக்குகள் எவர்சில்வரோ, துருப்பிடிக்காத இரும்பினாலோ ஆக்கப்படக் கூடாது. பித்தளை, செம்பு அல்லது வெள்ளியால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும். வசதியில்லாதவர்கள் மண் அகல் பாவிக்கலாம்.

விளக்கை வாயால் ஊதியோ, தானாகவோ அணைய விடக்கூடாது. விளக்கு மகாலட்சுமி அம்சம். எனவே ஒரு பூவால் ஒற்றி அணைக்க வேண்டும். விளக்கை அணை என்று கூறக்கூடாது. ''விளக்கை குளிரவை'' என்று மங்கலச் சொல்லினால் சொல்ல வேண்டும்.

மாலையில் வீட்டில் விளக்கேற்றல்

வீட்டில் விளக்கேற்றும் போது பின்கதவை மூடி முன்கதவைத் திறந்து சூரியன் மறைய ஒரு நாழிகை (24 நிமிடங்கள்) முன்பு ஏற்ற வேண்டும். தெற்கு பார்த்து தீபம் ஏற்றக்கூடாது. ஒருமுக விளக்கு மத்திம பலன். இரு முகம் - குடும்ப ஒற்றுமை. மூன்று முகம் - புத்திர சுகம். ஐந்து முகம் செல்வம் பெருகும். விளக்கு நம் அக இருளை நீக்கிப் பாவங்களைப் போக்கும்.

ஆலய வழிபாட்டின் இறுதியில் இடப தேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து பலிபீடத்துக்கு இப்பால் மூன்று முறை நமஸ்காரம் செய்து எழுந்து அமைதியான ஓரிடத்தில் சிவாயநம என செபித்துக் கொண்டு இருக்க வேண்டும். பின்னர் எழுந்து சிவசிந்தனையோடு வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

இன்பமே சூழ்க - எல்லோரும் வாழ்க

-சுபம்-

# ஏகாதசி விரதம்

இந்து வித்தியாநிதி பிரம்மஸ்ரீ சோ.குகானந்த சர்மா

வைஷ்ணவ சமயத்தின் முழுமுதற் கடவுள் ஸ்ரீ விஷ்ணு ஆவார். விஷ்ணுவை, காத்தற் கடவுளாக சைவ சமயத்தினராகிய நாம் வழிபடுகின்றோம். சைவம் பரந்து விரிந்த சமயம். சிவபூஜையில் விஷ்ணு பூஜை உள்ளது. சிவாலயங்களில் தேவிமாருடனான ஸ்ரீ விஷ்ணுவை வழிபடுகின்றோம். லிங்கோற்பவ முகூர்த்தத்தில் பிரம்மா, விஷ்ணு ஆகியோர் ஓர் அங்கமாக உள்ளமையை நாம் காணலாம். எனவே, நாம் சிவனையும் விஷ்ணுவையும் வழிபடுகின்றோம். ஆகவே, ஸ்ரீ விஷ்ணுவின் ஏகாதசி விரதநாளை நாம் எல்லோரும் முறைப்படி விரதம் இருந்து நோற்றுவருகின்றோம்.



ஏகாதசி நாள் ஸ்ரீ விஷ்ணுவின் மகோன்னதமான விரத நாளாகும். இந்நாள் எமது விரத நாளாக, பெருநாளாக, வழிபாட்டு நாளாக இருந்து வருகின்றது. மாதாமாதம் வரும் வளர்பிறை, தேய்பிறை நாள் வந்த பதினோராம் நாள் வருவது ஏகாதசியாகும். தேவர்களுக்குத் துன்பத்தைக் கொடுத்துவந்த முஹாசூரன் என்னும் அரக்கனை மாய்த்து, தேவர்களின் துயர்களை ஸ்ரீ விஷ்ணு களைந்த நாளே இதுவாகும். ஒரு மாதத்துக்கு இரு ஏகாதசிகள் என்றவகையில் ஒரு வருடத்தில் 24 ஏகாதசிகள் உள்ளன. இவற்றுடன் மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியாகிய ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியையும் சேர்த்து எல்லாமாக 25 ஏகாதசி நாட்கள் உள்ளன. இவையே ஸ்ரீ மகாவிஷ்ணுவின் திருநாட்களாகும். இவை புனித நாட்கள், விரத நாட்கள், வழிபாட்டு நாட்களாகும்.

ஏகாதசி விரதம் இருப்போர் மார்கழி மாத வைகுண்ட ஏகாதசியன்று முறைப்படி சங்கற்பித்து ஆரம்பிக்க வேண்டும். பொதுவாக இலங்கையில் எல்லோருமே ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி அன்று விரத அனுட்டானங்களை மேற்கொண்டு வருகின்றனர். வல்லிபுரக்கோவில், பொன்னாலை, யாழ்ப்பாணம், தெகிவளை முதலான விஷ்ணு ஆலயங்களிலும் கொட்டாஞ்சேனை மாரியம்மன் ஆலய சயன ஸ்ரீ விஷ்ணுவுக்கும் விஷேச பூஜை அலங்காரங்கள், உற்சவங்கள் என்பன வைகுந்த ஏகாதசியன்று சிறப்பாகச் செய்யப்படுகின்றன. ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம் முதலான சிவாலயங்களில் எழுந்தருளியுள்ள விஷ்ணுவுக்கு விசேஷ அபிஷேகம், உற்சவம் என்பன உள்ளன. எனவே, வைகுந்த ஏகாதசி ஒரு தலைசிறந்த விரத நாளாக இருந்து வருகின்றது.

மார்கழி மாத ஸ்ரீ வைகுந்த ஏகாதசியன்று ஆரம்பிக்கும் ஏகாதசி விரதத்தை முறைப்பட நோற்க வேண்டும். பகல் உணவு, இரவு உணவு என்பன

தவிர்க்கப்பட்டு, உபவாசம் இருந்து, துவாதசி அன்று காலை துளசித் தீர்த்தம் அருந்தி, பாறணை செய்வதே மேலான விரதமாகும். தற்காலத்தில் பால், பழம் அருந்தி விரதம் இருப்போரும் உளர். சிலர் நெல் அரிசி இல்லாது கோதுமை மாவில் பிட்டு, இடியப்பம் மட்டும் மதிய போசனமாக உட்கொண்டு விரதம் இருந்து வருகின்றனர்.

இவ்விரதத்தின்போது, காலையில் குளித்து அனுட்டானங்களை நிறைவுசெய்தபின், ஸ்ரீ நாராயணனைப் பூசிக்கலாம். ஜபஞ்செய்யலாம். திவ்விய பிரபந்தம், ஆழ்வார் திருவாய்மொழி என்பவற்றைப் படிக்கலாம். பாராயணஞ் செய்யலாம். மாலையில் ஆலயம் சென்று ஸ்ரீ நாராயணனை வழிபடலாம். அன்றிரவு கண்விழித்து இருந்து ஸ்ரீ நாராயணனைத் துதிக்க வேண்டும். மறுநாள் துவாதசி அன்று குளித்து அனுட்டானங்களைச்செய்து வீட்டில் சுவாமி படங்களுக்கும் விசேஷமாக ஸ்ரீ நாராயணனுக்கும் பூசை, வழிபாடு செய்யவேண்டும். இவை நிறைவானதும் துளசி தீர்த்தம் அருந்திய பின் பாறணை செய்து, ஏகாதசி விரதத்தை நிறைவுசெய்து கொள்ளலாம். ஏகாதசி விரதம் இருப்பின் பாவங்கள் போகுமெனக் கூறப்பட்டுள்ளது. நாம் ஏன் பிறந்தோம்? முற்பிறப்பு, இப்பிறப்புப் பாவங்களைப் போக்கவேயாம். அதற்கு ஏகாதசி விரதம் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீ விஷ்ணுவை வழிபடச் சில நியமங்கள் உள்ளன. இறைவனை அடைய இரு வழிகள் உள. ஒன்று பக்தி. யாதொரு பலனையும் எதிர்பாராது இறைவனே தஞ்சமென வழிபடும் முறை - பக்தி மயமானது. மற்றையது பிறபக்தி. ஸ்ரீ நாராயணனுக்குப் பிடிக்காத, விருப்பமில்லாத, எதிரானவைகளை விட்டுவிட வேண்டும். அவை ஒரு புறமிருக்க, "இறைவா ஸ்ரீ நாராயணனே! இன்னல், இடரிலிருந்து எம்மைக் காத்து அருள்" என வேண்டி வழிபடும் முறையாகும்.

ஸ்ரீ விஷ்ணுவை அடைய உள்ள மகாமந்திரம் "ஓம் நமோ நாராயணாய" என்பதாகும். இது மூன்று பதங்களைக் கொண்டது. "நாராயணாய நம" என்பது இரு பதங்களைக் கொண்டது. இவைகளை நாம் எத்தனை தடவைகளும் ஜபம் செய்யலாம். பாராயணஞ்செய்யலாம். பிரயாணத்தின்போதுகூட சொல்லிக்கொண்டே போகலாம்; எழுதலாம். ஸ்ரீ நாராயணன் வந்து அருள்பாலிப்பார் என்ற நம்பிக்கை எல்லோருக்குமே உள்ளது. நாராயண மந்திரத்தை பெரிய திருமொழி இவ்வாறு விதந்து புகழ்கின்றது.

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலம்தரும் செய்யும் நீர்விசும்பு அருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்!

ஆம்! ஏகாதசி விரதம் இருப்போம். நாராயண மந்திரம் சொல்வோம். எல்லோருக்கும் நாராயணன் அருள் கிட்டுவதாக.

VIVEKA
Printers

[phone] 416.269.1994
[e-mail] info@viveka.com
[fax] 416.335.6468
[web] www.viveka.com

80PRINT
[e-mail] info@80print.ca
[web] www.80print.com

**Scarborough Office:**
1911 Kennedy Road, Suite 109
Toronto, Ontario, M1P 2L9
Tel: 416.80.PRINT (77468)
**Ajax Office:**
80 Kingston Road, Suite 15
Ajax, Ontario, L1S 7J4,
Tel: 905.239.7649

# பிரார்த்தனை - இறைவா என்னைத் திருப்திப்படுத்து!

சுகி சிவம்

## இறைவா!

அன்பு- கொடுக்கச் சொல்கிறது.
ஆசை – கேட்கச் சொல்கிறது.
என் பிரார்த்தனை அன்பா? ஆசையா?
காமம் கேட்கிறது. காதல் கொடுக்கிறது.
இதில் நான் எந்த பூமி? எந்தக் கிரகம்?

பிச்சைப் பாத்திரமும் அட்சயப் பாத்திரமும் ஒன்றல்லவே.

என் இதயம் பிச்சைப் பாத்திரமா? அட்சயப் பாத்திரமா?

என் பிரார்த்தனை இதுவரை கடவுள் கொடுத்த கொடைகளுக்கான நன்றி அறிவிப்பா? இல்லை... மேலும் கொஞ்சம் பெற்றுவிட வேண்டுமென்கிற வஞ்சக வலையா?

என் தோத்திரம் நெஞ்சின் நெகிழ்ச்சி மொழியா?
புகழ்ந்து புகழ்ந்து கறக்கும் சாமர்த்தியத்தின் வழிமுறையா - என் தேவனே!

என் பூஜையறை உன் வசந்த மண்டபமா? ப்ரிய பூமியா? இஸ்ட தேசமா? குளிர் வாசஸ்தலமா?

அல்லது என்னை வேலைவாங்கும் பயிற்சிப் பட்டறையா? உன்னோடு பேரம் பேசும் தரகு மண்டியா? சொல்லுங்கள் ஸ்வாமி! பேசுங்கள் ஸ்வாமி!

நான் யார்? உன் நந்தவனத்துத் துளசியா? அல்லது உன் வீட்டை அழுக்குப்படுத்தும் தூசியா?

என் ஆண்டவரே! என்னை எனக்குப் புரிய வைப்பீரா?
என் தளம் எது? என் நிலம் எது? என் களம் எது?
நான் நடத்தும் பூஜை நன்றியுணர்வின் வெளிப்பாடா? பேராசையின் வெளிப்பாடா?
என் இதயம் உமது பாதத்திற்குப் பூவாக இருக்கிறதா? முள்ளாகத் தைக்கிறதா?
என்னை எனக்குப் புரியவைத்து என் தவறுகளை நீக்கி என்னை உன் வாகனமாக்குவீரா?
விண்மழை எனவே கண்மழை பெய்து அழுது தீர்த்தவர் தாயுமானவர்.
நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து ஊற்றெழும் கண்ணீரால் நனைந்து நனைந்து கண்பனித்தார் வள்ளலார்.
அழுது அழுது அடி அடைந்தார் அருள் பழுத்த மாணிக்கவாசகர்.
மீரா அழுதாள்... ராதா அழுதாள்....ஆண்டாள் அழுதாள்...
நான் அப்படி அழுததில்லையே ஸ்வாமி!
பக்தி மேலிட அழுததில்லையே ஸ்வாமி!
பக்தி மேலிட அழுதவர் கண்ணீர் முத்துக்களை விடவும் விலை கூடியது என்று நீங்கள் சேகரிப்பது உண்டாமே!
அந்த நீர் மலரை நீர் மலர உபயோகிப்பீராமே!
அவர்கள் கண்ணருவியில் நனைந்து அவர்கள் மூலக் கனலில் உலர்ந்து நாளும் நீர் விளையாடுவீராமே!
நானும் அழுதிருக்கிறேன். ஆனால், என் ஒவ்வொரு கண்ணீரும் ஒரு கோரிக்கை... ஒரு வேண்டுதல். ஒரு எதிர்பார்ப்பு... ஒரு வற்புறுத்தல்!

அது ஆசை மலை வெளியிட்ட அமில நதி.

என் கண்ணீர் விருப்ப நெருப்பின் விபரீத திரவம். என்னை மாற்றியருளும் என் தெய்வமே!

உம்மைக் கருவியாக்கி, இன்னொன்றைப் பெற நினைக்கும் எம்மைத் திருத்துங்கள் சுவாமி!

'இவற்றைப் பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு
உற்றோமே யாவோம் உமக்கே யாம் ஆட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்!"

என்று கோதை பாடிய பாதையில் எங்களைக்கொண்டு செலுத்துங்கள் ஸ்வாமி.

கேட்பது.. "மேலும் கொஞ்சம், மேலும் கொஞ்சம்' என்று கேட்பது எப்படி பிரார்த்தனை ஆகும்?

கொடுத்தற்கு நன்றி பாராட்டும் குளிர்ச்சியே பிரார்த்தனை.

ஜன்ம பந்தங்களால் வந்த கர்மபந்தங்களின் சிக்கலை நீக்கும் நற்கலையே பிரார்த்தனை.

ஊர்வலம், தர்ணா, கடை அடைப்பு மறியல், ஆர்ப்பாட்டம் என்று ஓர் அரசைப் பணியவைக்கும் போராட்டக் குழுவின் யுக்திகளாகவே தொழுகை, ஜபம், யாகம், யக்ஞம், மந்த்ரம், எந்த்ரம் யாவுமே ஒரு கடவுளைப் பணியவைக்கும் முயற்சிகளாகிவிட்டனவே ஸ்வாமி!

பூ பூத்திருந்தால் வண்டுக்கு யாரும் தகவல் அனுப்பவேண்டியதில்லை. இனிப்பு இங்கே இருக்கிறது என்று எறும்புக்கு யாரும் எழுதிப் போடுவதில்லை.

ஜீவாத்மா பக்குவப்பட்டால் பரமாத்மா பக்கம் வரும்!

புரிந்துவிட்டது... புரிந்துவிட்டது!
என்னைத் தகுதிப்படுத்து! என்னை உனக்காகத் தயாரித்துக்கொள்.
தாயுமானவருக்கு ஒரு மௌனகுரு.
ரமணருக்கு ஒரு திருவண்ணாமலை...
வான்மீகிக்கு ஒரு ராமநாமம் ....
ஸ்வாமி! எனக்கு எங்கே? எது? எவர் மூலம்? தெரியவில்லையே என் தெய்வமே!

இத்தனை பெரிய பூமியை விழுங்கும் பசியோடு காத்திருக்கும் கடல்போல... எல்லோருக்கும் ஒரு சுனாமி காத்திருக்கிறதே.. மரணம்! அதில் யான் மூழ்கும் முன் உன்னில் நான் மூழ்க முடியுமா?

எலும்புந் தோலுமாய் கந்தல் துணியுடன் கிழிந்த நூல்போல் கிடந்தான் ஒரு பிச்சைக்காரன்... அவனை நோக்கி, "என்ன வேண்டும் கேள்" என்றான் அரசன். பிச்சைக்காரன் அழத் தொடங்கினான். "எனக்கு என்ன வேண்டும் என்பது என்னைப் பார்த்ததும் புரியவில்லையா? சகல அறிவும் ஆற்றலும் செல்வமும் வாய்த்த நீயே என்னைப் பார்த்து என்ன வேண்டும் என்று கேட்டால் நான என்ன கேட்பது? எங்கு போய் யாரைக் கேட்பது?" என்றான் பிச்சைக்காரன்.

ஸ்வாமி என்ன வேண்டும் என்று என்னைக் கேட்காதே! காரணம்.. ஒவ்வொரு முறையும் நான் உன்னிடம் தவறான ஒன்றையே கேட்டிருக்கிறேன்!

அந்தத் தவறைச் சரிசெய்ய அதைவிடத் தவறானதையே மீண்டும் மீண்டும் கேட்டிருக்கிறேன்!

எனவே, கேட்கும் பழக்கத்தை விடுவதற்கு 'ராமா நிதி சுகமா? உன் சந்நதி சுகமா? என்ற தியாகையராக, காளியின் சந்நதியில் எதுவும் கேட்கத் தோன்றவில்லை என்ற விவேகானந்தராக் என்னைத் தகுதிப்படுத்துங்கள் ஸ்வாமி!

நீங்கள் தருவதை வாங்கிக் கண்ணில் ஒற்றிக்கொள்ள என்னைத் தயார் செய்யுங்கள் ஸ்வாமி.

தந்தால் நல்லது. தராவிட்டால் அதைவிட நல்லது என்று புரியவையுங்கள் ஸ்வாமி.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

# மனிதப் பிறவியை மதித்திடுமின்!

அமரர். செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

மனிதப் பிறவி எடுப்பது என்பது பல கோடி புண்ணிய வசத்தினால் ஏற்படுவது. செவ்வேட் கந்தன் தமிழ் மூதாட்டியை நோக்கி "அரியது எது" என்று கேட்டார். "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று கூறி மனிதப் பிறவியினது மாண்பினை செந்தமிழ் பாவால் எடுத்து மொழிகிறார் தமிழ் மூதாட்டி ஔவையார். ஆனால் மனிதப் பிறவி எடுத்தோர் எல்லோரும் மனிதராகி விடமுடியாது. உண்பது உறங்குவது போக, நுகர்வு அனைத்தும் மற்ற ஜீவராசிகளுக்கும் உன்டு. ஆகவே, மனிதர்களாகிய நாம் எந்த விதத்தில் ஏனைய ஜீவராசிகளிலிருந்து வேறுபடவேண்டும் என்பது தான் சிந்திக்கவேண்டியது. விலங்கினங்கள் முதலியவற்றிற்கும் வாய் உண்டு என்றாலும் "வாயில்லா சீவன்கள்" என்று சொல்கின்றோம். ஏன்? வாய் என்பதன் முக்கிய செயல் பேசுவதும் ஆண்டவன் நாமத்தைச் சொல்வதுமாகியவற்றில் சிறப்படைகிறது. இந்தச் சிறப்பு மனிதப்பிறவி ஒன்றிற்குத் தான் உண்டு.

மேலை நாட்டில் ஒரு அறிஞர் பகலில் விளக்கை ஏந்திக்கொண்டு தெருவில் போகிறவர்களையும் வருகிறவர்களையும் உற்று உற்றுப் பார்த்துக்கொண்டு திரிந்தாராம். வீதியில் போகிறவர்கள் "இவருக்கு பைத்தியம் மிதித்துவிட்டது போலும்" என்று பரிகாசம் பண்ணினார்களாம். ஆனால் அந்தப் பெரியார் என்ன சொன்னார்? "ஐயா, வேறு ஒன்றும் இல்லை. யாராவது மனிதர் இந்தத் தெருவில் போகிறார்களா என்றுதான் பார்க்கிறேன்!" என்று சொன்னார். ஆகவே அந்த அறிஞர்களுக்கு உண்மையான மனிதரை அடையாளம் காண அவா எழுந்தது என்ற உண்மையை உணர முடிந்தது.

கிடைத்தற்கரிய உண்மைப் பேறுகளை அளிக்கவல்லது இந்த மானிடப் பிறவி. மனிதன் என்ற சொல்லுக்கே நினைப்பவன் என்பது பொருள். இந்த நினைப்பினால் அவன் மனதை அடக்கி ஆளவும் பயின்று கொள்கிறான். அத்துடன் ஜீவ சேவையையும் புரிந்து பின்பற்றுகிறான். மனிதப் பிறவி என்பது ஒரு ஏணி. இந்தப் பிறவியின் நோக்கம் ஏணிப்படியிலே நிலைத்து நிற்பதல்ல. ஏறிப்போக வேண்டிய இடத்திற்குப் போய்ச்சேர்ந்து விடவேண்டும். உயர்வதற்கு முனைந்தால் வீட்டையும், மாட்டையும் நில புலங்களையும், பட்டத்தையும், பதவியையும் நினைத்து நினைத்து நெஞ்சம் புண்ணாகக் கூடாது. உள்ளச் சுமையை இறக்கி உயர்ந்து செல்லவே இறைவன் இப்பிறவியை மானிடராகிய நமக்குத் தந்தான்.

"தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து
மனம் வாடித் துன்பம் மிக உழன்று
நரை கூடிக் கிழப்பருவ மெய்தி
கொடுங் கூற்றுக் கிரையெனப் பின்மாயும்
வேடிக்கை மனிதர்களைப் போல்
மண்ணில் வீணே வீழ்ந்து விடலாமா?"

அப்படி வீழ்வதற்கு இந்த ஆறறிவு படைத்த மனிதப் பிறப்பு வேண்டியதில்லை.

சமயத் தலைவர் ஒருவருடைய மாளிகையிலே சமையற்காரராகப் பணிபுரிந்தவர் ஒரு துறவி. சமய போதனைகள், விழாக்கள் மாளிகையின் முன்புறத்தில் மிக ஆரவாரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும். அதே நேரத்தில் மாளிகையின் பின்புறம் மிக அமைதியாகக்

காட்சியளிக்கும். துறவி மௌனமாக சமையல் வேலையில் ஈடுபடுவார். உணவுப் பண்டங்களை ஏற்ற வகையில் பாகம் பண்ணல், பாத்திரங்களைத் தூய்மையாக வைத்திருத்தல், சமயலறை ஒழுங்கு அனைத்தையும் தனியொருவராக மௌனமாக செய்துகொண்டு இறைவன் தன்னோடு துணையாக நின்று வழிகாட்டுகின்றான் என்ற அருளுணர்வோடு செயலாற்றினார். நாளடைவில் சமயத் தலைவரின் அருளாற்றலிலும் பார்க்க இவருடைய அருளாற்றல் விஞ்சிவிட்டது. தெய்வாம்சம் இவரிடத்திலே பிரகாசிக்கத் தொடங்கியது. முன்பக்கமாக வந்தவர்கள் எல்லோரும் பின்பக்கமாக சமையலறையை நோக்கிவந்து இவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். நோய், துன்பம், கவலை அனைத்தையும் மக்கள் மனத்திலிருந்து விரட்டியோட்டும் மாபெரும் மதத் தலைவரான நிலையை இந்த சமயற்காரத் துறவி பெற்றார் என்பது ஒரு சிறு சம்பவம். இந்தக் கதையிலிருந்து நாம் அறிந்து கொள்வது அடக்கமும், தூய உள்ளமும், அமைதியும், இறைவனை முன்வைத்து ஆற்றும் கடமைகளும் இணைந்து விட்டால் அங்கே தெய்வம் பிரகாசித்து வெளிப்பட்டு அருள் புரியத் தொடங்கிவிடும் என்பதேயாம்.

"இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்பது ஞானநெறி கைவரப்பெற்ற தாயுமான சுவாமிகளின் கூற்று. வழிபாட்டுக்கும் பணிசெய்வதற்கும் கிடைத்ததை மனிதப் பிறவியை பயன்படுத்தாமல் விட்டால் இறுதிக் காலத்தில் ஏக்கமே ஏற்படும். எந்த ஏக்கம் ஏற்படாமல் உணர்ந்து நன்னெறி நாடி வாழ்வதையே பெரியோர்கள் பின்பற்றினர். "பூவுலகில் போய்ப் பிறக்கக் கடவாய்" என்று சுந்தரருக்கு திருக்கயிலாயத்தில் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கேட்டவுடன் அழுதார்; தொழுதார்; இரங்கி ஏங்கினார். என்றாலும் பயனில்லை. கட்டளையை மேற்கொண்டார். வேண்டா மானிடப் பிறவி என்று வெறுத்தவருக்கு அப்பிறவி கிடைத்து விட்டது. திருமுனைப்பாடி நாட்டில் பிறந்து வளர்ந்து வாலிபராகி, சிதம்பர தரிசனத்திற்கு செல்கிறார். நடராசப் பெருமானின் அற்புத நடன தரிசனத்தால் மனிதப் பிறவியே வேண்டும் என்ற நிலையைப் பெற்றுவிடுகிறார். "சுவாமி, இத்தகைய அற்புதக் காட்சியைத் தரிசிப்பதற்கு இந்த ஒரு பிறவியினால் தானே முடியும்?! ஆகவே இது எனக்கு மிகவும் வேண்டிய பெருநிலையை எய்துவிக்கும் பிறவி' என்று வாயாரப் பாடுகிறார். இதனைப் பெரியபுராண வரலாற்றில் காண்கிறோம். ஆகவே கும்பிடக் கிடைத்த அறிய பிறவி இது என்பதை மறந்து விடக்கூடாது.

சேவை அல்லது தொண்டு என்பது மக்கள் வாழ்வில் ஒரு வகை வழிபாடாகும். இதனால் திருப்தியும், நிறைவும் மனதிற்கு ஏற்படுகிறது. பிரதிபலன் எதையும் நோக்காது ஆற்றும் தொண்டுகளுக்கு இறைவனுடைய ஆசி உண்டு. சேவை செய்யக் கிடைத்த பிறவியைப் பாராட்டுகிறார் சுவாமி விவேகானந்தர். மேலும் அவர் சொன்னார்; "மோட்சத்துக்குள்ளே போய் வாழா முடங்கிக் கிடப்பதிலும் பார்க்க மேலும் மேலும் பிறவிகளை எடுத்து மக்களுக்காக சேவை செய்வதே எனது குறிக்கோளோடு கூடிய விருப்பமாகும்" என்பது அவர் கூற்றாகும்.

"அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே"

என்றார் தாயுமான சுவாமிகள். நோயாளிகள், தரித்திரர்கள், கல்வியறிவற்றவர்கள் ஆகியோர் மத்தியில் புகுந்து, அவர்தம் துன்ப நீக்கத்துக்கு பாடுபடுவதும், இதனால் அவர்களடையும் திருப்தியைக் கண்டு இன்பமுறுதலும் எமது பண்பாக அமைய வேண்டும். இவையனைத்துக்குமாக கிடைத்ததே இந்த மானிடப் பிறவி. இதனை மதித்து வாழ்வதால் இவ்வுலகத்திலேயே சுவர்க்க இன்பம் எம்மை அணைத்துக் கொள்ளுமன்றோ!

# கதை சொன்னவர் கதை - சேக்கிழார்

தென்னிந்தியாவில் சோழ நாட்டை ஆண்ட அனபாய சோழன் என்னும் பெருமன்னன் ஆண்டு வந்தான். அவன் அறம் தவறாத பெருமன்னனாக இருந்ததால் குடிமக்கள் அவனை தெய்வம்போல் போற்றிவந்தனர். அவன் தர்மம் தவறாதவனாக இருந்ததுடன், வீரத்திலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனாயிருந்தான். ஒருநாள் அனபாய சோழ மன்னன் தனது தலைமை அமைச்சரை அழைத்து, மூன்று சந்தேகங்களைத் தீர்த்துவைக்குமாறு வேண்டினார். மன்னர் தமக்கு அவ்வப்போது வரும் சந்தேகங்களை, மதியூகியான மந்திரியிடம் கேட்டுத் தெளிவது வழக்கம். அவர் மனதில் எழுந்த மூன்று கேள்விகள்:

1. மலையிலும் உயர்ந்தது எது?
2. பூமியிலும் பெரியது எது?
3. கடலிலும் பாரியது எது?

மன்னரின் கேள்விகள் மூன்றிலும் ஆழ்ந்த கருத்து ஏதோ இருக்க வேண்டுமென்று மந்திரி ஊகித்து, உடனே பதில் கூறாது, ஆழ்ந்து சிந்தித்துப் பதில் தருவதற்காக அடுத்த நாள் பதில் கூறுவதாக அனுமதிபெற்று வீடு திரும்பினார்.

வீட்டிற்கு வந்த மந்திரி, பலவாறு சிந்தித்தும் உரிய பதிலைப் பெறமுடியாமல் திணறினார். அன்றைய இரவு முழுவதும் கடுமையான யோசனையால் துயிலமுடியாமல் இருந்த மந்திரி அடுத்த நாள் பொழுது புலர்வதற்கு முன்பே எழுந்து, தனது தோட்டத்திலிருந்த ஒரு பெரிய வேப்ப மரத்தடியில் அமர்ந்து சிந்தித்தவண்ணம் இருந்தார். காலையில் விழித்தெழுந்த மந்திரி மகன் அருள்மொழித் தேவன், வேப்பமரத்தடியில் கவலையுடன் அமர்ந்திருந்த தந்தை நோக்கி, எதற்காக வருந்தியிருப்பதாகக் கேட்டான். முதுமையடைந்த முதல் மந்திரியும் மன்னன் சொன்ன மூன்று கேள்விகளையும் குறிப்பிட்டு, அரசன் மனம் திருப்தி அடையக்கூடிய மூன்று பதில்களையும் சிந்திப்பதாகத் தெரிவித்தார். உடனே புன்னகை செய்த புதல்வன் தான் உடனே வருவதாகக் கூறி வீட்டினுள் திரும்பிச் சென்றான்.

சில நிமிடங்களில் திரும்பிய அருள்மொழித் தேவன் கையில் மூன்று குறள்கள் எழுதப்பட்ட ஓலையைக் கொண்டுவந்து தன் தந்தையிடம் கொடுத்து பணிந்து நின்றான். முதுமை வயதினனான முதலமைச்சரும் அந்த ஓலையை வாங்கிப் படித்தபோது, அதில் உள்ளதுவே அரசனின் கேள்விக்கு ஏற்ற சிறந்த பதில் என்பதை உணர்ந்தார். தன் மகன் தந்த ஓலைச் சுவடியைக் கையில் எடுத்துக்கொண்டு அரசன் அவைக்கு உடனே புறப்பட்டார். தன் கைவரப்பெற்ற ஓலையைப் படித்துப் பார்த்த மன்னனும் பெரு மகிழ்வடைந்து, இதுவே சிறந்த பதில் என்று எண்ணி மதியூகியான மந்திரியைப் புகழ்ந்தார். "மந்திரியாரே! நீர் உண்மையிலேயே சிறந்த மதியூகி. சிறந்த பதில் மட்டுமல்லாமல் அதனையும் தெய்வக் குறளில் இருந்து எடுத்துத் தந்த வல்லமையை வாழ்த்தாது இருக்க முடியாது" என்றார். முதலமைச்சரோ உடனே மிக்க அடக்கத்துடன் "மன்னர் மன்னவா! இந்த விடையைத் தேடித்தந்த பெருமைக்குரியவர் நான் அல்ல, எனது மைந்தன் அருள்மொழித் தேவனே அப்பெருமைக்கு உரியவன்" என்றார். மன்னர் தன் கையில் இருந்த ஓலையை மீண்டும் ஒருமுறை வாசித்தார்:

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது" – 124

"காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" – 102

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது" – 103

மிக்க மகிழ்ச்சியடைந்த மன்னவனும் உடனே தன் அரண்மனை அதிகாரிகளை அழைத்து, சிறந்த மரியாதையுடன் அம்மைந்தனை அரண்மனைக்கு அழைத்து வரும்படி ஆணையிட்டார். வந்த சிறுவனை வரவேற்று வாழ்த்தி, மரியாதைகள் செய்ததுமன்றி, முன்னமே தன் முதுமை காரணமாக ஓய்வுபெற விருப்பம் தெரிவித்த பதவிக்கு தனயனை இருக்குமாறு வேண்டினார். மைந்தனும் தன் தந்தையுடன் ஆலோசித்து, அந்த பொறுப்பை ஏற்றுக்கொள்ள இசைந்தார். அருள்மொழித் தேவருடைய மதிநுட்பத்தாலும், செயற்றிறத்தாலும் மன்னருடையதும் மக்களுடையதும் பெருமதிப்பைப் பெற்றார். தனது இளம் முதலமைச்சர் செயலாற்று திறத்தை வியந்து அவருக்கு 'உத்தமச் சோழ பல்லவர்' என்ற பட்டத்தையும் மன்னர் வழங்கினார்.

இளம் மந்திரியார் திருநாகேஸ்வரப் பெருமான்மீது பெரும் பக்தி உடையவராயிருந்தார். இத்தலத்திற்குத் தனது அரச கடமைகளுடன் தினமும் சென்று வணங்கி வரமுடியாததினால் திருநாகேஸ்வரத்தினையொத்த ஒரு கோவிலை தான் வதியும் கிராமத்தில் அமைத்து, அதற்கும் திருநாகேஸ்வரம் எனப் பெயரிட்டு அங்கு பூசை வழிபாடுகள் நிகழும்வண்ணம் செய்து வழிபட்டுவந்தார்.

ஒரு நல்ல மந்திரி அரசனின் அரசியல் விடயங்களில் மட்டுமல்ல, நெறிதவறி நடக்கும்போது அவர் தனிப்பட்ட வாழ்க்கையிலும் அவரை நெறிப்படுத்தி, வழிநடத்தக் கடமைப்பட்டுள்ளார். அவர் அரசனுக்கு ஒரு நல்ல நண்பனாக, நல்ல தத்துவாசிரியனாக நல்ல வழிகாட்டியாக வாழ்வதுதான் முறைமை. அரசன் நெறி தவறும்போது இடித்து வழிநடத்துவதுதான் மதியூகியான மந்திரியின் கடன். இதனை பொய்யில் புலவன் தனது 448ஆவது குறளில் -

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலனும் கெடும்" – 448

என்று அழகாகக் கூறிச் சென்றுள்ளார்.

மன்னன் அனபாய சோழன் மிக்க தமிழ் அறிவுடையவன் என்பதுடன் தமிழ் நூல்களை விரும்பிக் கற்பவன். அவன் ஐம்பெரும் காப்பியங்க்ளில் ஒன்றான திருத்தக்க தேவருடைய சீவகசிந்தாமணி என்னும் நூலை விரும்பிக் கற்பது வழக்கம். அது ஒரு சிறந்த இலக்கியம் என்றபோதும் திருத்தக்க தேவர் எனும் சமணமுனிவர், சமணர்களாலும் காமரசம் சொட்ட எழுத முடியும் என்பதை நிருபிப்பதற்காக நிறைந்த காமரசம் சொட்ட எழுதியிருந்தார். இத்தகைய நூல்களைக் கற்பதால் மனம் கெட்டுவிடும் என்று பெரிதும் கவலையுற்றார் முதன் மந்திரி சேக்கிழார். மேலும், சைவ மதத்தினரான மாமன்னன் மதம் மாறக்கூடுமா எனவும் அவர் மனம் கவலையுற்றது.

சேக்கிழார் மன்னரிடம் சென்று, "மன்னவா! உன் முன்னையோர்கள் இறைவனிடம் பெரும் நம்பிக்கையும் பக்தியும் வைத்திருந்தனர். ஜைன மதத்தினரின் நூல்களை வாசிப்பதால், அவர்களைப்போல் இறைவனில் நம்பிக்கை இழந்து நாஸ்திகனாகிவிடலாம். உனது நேரத்தை நல்ல சைவ இலக்கியத்தில் செலவிடு. அதனால், உனக்கு பக்தியும், மன அமைதியும ஏற்படும்" என்றார். மந்திரி சொல்கேட்ட மன்னவனும் மந்திரியிடம "நீர் சொன்னபடியே இது தவறான இலக்கியமாகில், நல்ல பயனுள்ள இலக்கியம் எது எனக் கூறும். பொழுதுபோக்குவதற்கு அவற்றைப் படித்துப் பயன்பெறுவேன்" என்றார். இதற்குப் பதிலாக மந்திரியாரும் "சிவபெருமான் அருள்பெற்று, சுந்தரமூர்த்திநாயனார், சைவ நாயனார்கள் அனைவரையும் அடக்கும் ஒரு சிறு தொகை பாடியுள்ளார். இவர்க்குப் பின்வந்த் நம்பியாண்டார் நம்பி, திருநாரையூர் பொல்லாப்பிள்ளையார் அருள்பெற்று, திருத்தொண்டர் அந்தாதியைப் பாடியுள்ளார். அதனை படித்துப் பயன்பெறுவீர்" என்றார்.

சோழப் பேரரசனும் நம்பியாண்டார் நம்பிக்கு பொல்லாப் பிள்ளையார் அருளிய வரலாற்றை அறியவிரும்பி மந்திரியாரிடம் கேட்க அவரும் விரிவாக சொல்லலானார். திருநாரையூர் சொல்லாப்பிள்ளையார் கோவிலில், ஆதி சைவகுலத்தினர் ஒருவர் பிரதம குருவாகக் கடமை ஆற்றிவந்தார். பொல்லாப்பிள்ளையார் என்பது பொளிந்து செய்யாமல், இயல்பாகவே தோன்றியவர் எனப் பொருள்படும். திருநாரையூர் மூலத்தில் உள்ள பிள்ளையாரும் இயல்பாகவே தோன்றியவராகையால், அவர்க்குப் பொல்லாப் பிள்ளையார் எனும் பெயர் வழங்கலாயிற்று. ஒருநாள் பிரதம குரு அயற் கிராமத்திற்குச் சென்று தங்கவுள்ளால், தன் குமாரரை அழைத்து, காலைநேரப் பூசையை செய்யுமாறு பணித்தார். தந்தையின் விருப்பப்படியே பூசைகளைச் செய்து இறைவனுக்கு இனிய சாதத்தைப் படைத்தார். கல்லாயிருந்த பிள்ளையார் எழுந்து படைத்த சாதத்தை உண்ணாததால், தான் செய்த பூசையில்தான் ஏதோ தவறு ஏற்பட்டுவிட்டதாக வருந்தனார் நம்பியார். இறை வழிபாட்டில் குறைவந்துவிட்டதே என விசனமடைந்த நம்பி, கண்களில் நீர் பெருக்கெடுத்தோட, தலையை சன்னிதானத்து பாறைப் படியில் இடித்து, தன்னைத் தானே தண்டிக்க முற்பட்டார். அன்பே வடிவான விநாயகர் தன் பக்தனின் பண்புகண்டு வியந்து, விரைந்து வந்து 'நம்பி, நில்' என்று கூவினார். தன் பக்தன் படைத்த இனிய சாதத்தை அமிர்தம் என உண்டு மகிழ்ந்தார்.

பெருமகிழ்ச்சியடைந்த நம்பி, இறைவனின் காலடிகளில் விழுந்து ஒரு விண்ணப்பத்தை முன்வைத்தார். "மகாபிரபு, நான் பள்ளிக்கு ஏற்கனவே பிந்திவிட்டதால், ஆசிரியரின் தண்டனைக்கு ஆளாக வேண்டிவரும். உங்கள் பெரும் கருணையினால் இன்றைய பொழுது எனக்கு கல்வியைப் போதித்தருள வேண்டுகின்றேன்." என்றார். பிரணவமே உருவான பிள்ளையாரும் தன் இளம் அடியவனின் பக்தியை வியந்து கற்பிப்பதற்கு இயைந்தார். கலைஞானனைக் கைப்பிடித்தார்க்குக் கைகூடாதது என்ன! கணப்பொழுதில் கணநாதன் அருளால் ஞானம் வரப்பெற்றார் நம்பி. அருள் கடாட்சத்தின் பேறாக அவர் பொல்லாப் பிள்ளையாரைப் போற்றி 'திருவிரட்டை மணிமாலை' என்னும் சொல்லாரம் அணிவித்து மகிழ்ந்தார் நம்பி.

நம்பிக்கு தும்பிக்கையார் அருளிய செய்தி நாடெங்கும் பரவி, நாடாளும் சோழமன்னன் ராஜராஜனுக்கும் எட்டியது. அவர் விரைந்து வந்து நம்பியைப் பணிந்து தான் கொண்டுவந்ததையும் இறைவன் திருவமுது செய்ய வேண்டும் என்று விரும்பினார். அடியவர் விருப்புடன் தந்ததை ஏற்று உண்டு மகிழ்ந்தார் ஐந்து கரத்தார்.

சோழப் பேரரசன் நம்பியைப் பணிந்து, உலகம் உய்வதற்காக மூவர் பாடிய தேவாரங்களையும் மீட்டுத் தரவேண்டும் என விண்ணப்பித்திருந்தார். நம்பியும் விக்கினங்கள் தீர்க்கும் விநாயகரிடம் தேவாரங்களை மீட்டுத் தரும் வழியை வேண்டி இறைஞ்சினார்.

வேண்டியவர்க்கு வேண்டியன ஈயும் பிள்ளையாரும் மூவர் வரலாற்றையும் தெரிவித்து, அவர்கள் பாடியுள்ள தேவாரங்கள் மூவர் கை லச்சினை பதித்த அறையுள் பூட்டப்பட்டு தில்லையில் இருப்பதையும் தெரிவித்தருளினார்.

மண்ணாளும் மன்னவனும் நம்பியை உடன் அழைத்து, தில்லைக்குச் சென்று மூவர் தேவாரங்களை மீட்டு, எல்லோருக்கும் கிடைக்கும்வண்ணம் செய்ய விரைந்தார். ஆனால், அவர்கள் தில்லையை அடைந்த போது தேவாரங்களின் காவலர்கள் மூவரும் ஒருங்காக வராதவிடத்து கதவைத் திறக்க மறுத்தனர்.

முதலில் அதிர்ச்சியுற்ற மன்னன், பின் தெளிந்து தில்லை நடராஜரை வணங்கி, பின் மூவர் சிலைகளுக்கும் பூசனைகள் செய்து, பின் மூவரையும் ஒன்றாக ஊர்வலம் வரச்செய்து, இறுதியில் தேவாரங்கள் வைத்துப் பூட்டப்பட்டிருந்த அறைக்கு வந்தான். மன்னர் மூவரையும் ஒன்றாக எழுந்தருளச் செய்த மதியூகத்தை மெச்சி, கதவினை உடனே திறந்துவிடச் சம்மதித்தனர் தில்லைவாழ் அந்தணர்கள்.

ஆவலுடன் வந்திருந்த அடியவர் அனைவரையும் வேதனைச் செய்தி வரவேற்றது. தீந்தமிழின் தேன் சுவையில் கறையானுக்கு அவ்வளவு விருப்பம்போலும்! ஏட்டுச் சுவடிகளில் பலவற்றை கறையான் சுவைபார்த்து அழிந்திருப்பதைக் கண்ட மன்னரும் மறையவரும், மக்களும் கண்களில் நீர்வடிய அழுது வேதனைப்பட்டனர். அப்போது வானிலிருந்து ஒரு அசரீரி "கவலைகொள்ளற்க. காலத்துக்கொவ்வாதவற்றைத் தவிர்த்து, காலத்தால் அழியாதவற்றை எஞ்சவைத்துள்ளோம். பெற்று மகிழ்க" என ஒலித்தது. இறைவன் சித்தம் அதுவானால், அதை மறுப்பது எப்படி எனச் சற்று மனந்தேறி மன்னவனும் இந்நிலை இனி ஏற்படாதிருக்குமாறு சைவ இறைப்பாடல் அனைத்தையும் திருமுறையாகத் தொகுத்துத் தருமாறு நம்பியைப் பணித்தார்.

மன்னன் கட்டளைக்குப் பணிந்து நம்பியும் அவற்றைத் தொகுத்ததுடன், எண்பத்தொன்பது அந்தாதி அமைப்பில் பாடல்களால் தொண்டர்களைப் பாடி, அதற்கு நம்பி 'திருத்தொண்டர் திருவந்தாதி' எனவும் பெயரிட்டார். இத்திருவந்தாதிக்கு முதன்நூலாக அவர் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டர் தொகையை உபயோகித்தார்.

சேக்கிழார் வாயிலாகக் கேட்ட செய்திகளால் பெரும் ஆர்வம் உந்தப்பெற்ற மன்னன் அனபாய சோழன், திருத்தொண்டர்கள் சரிதத்தைப் புராணமாகப் பாடவேண்டுமென தமது மதிப்பிற்குரிய முதன் மந்திரி சேக்கிழாரிடம் வேண்டிநின்றார். அத்துடன், அப்பணி முடியும் வரை அரச பணியில் பங்கேற்கவேண்டியதில்லை எனவும், தேவையான செலவுகளை அரசு திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளவும் வேண்டிநின்றார்.

அத்தகைய பெரும் செயலைச் செய்ய உவந்து முன்வந்த சேக்கிழாரும் நடராஜரின் அடியவர் சரிதம் பாட நடராஜர் குடிகொண்ட தில்லையே உகந்த இடம் எனத் தீர்மானித்து, அங்கு வசித்தபடியே பாடுவதாக உறுதிகூறினார் சேக்கிழார் பெருமான்.

தில்லையை அடைந்து, திருத்தொண்டர் சரிதத்தை எப்படிப் பாடுவது என்று திகைத்து நின்றார். ஒருவாறு மனம் தெளிந்து, மூலமுதல்வனாம் தில்லைக்கூத்தனை மனதில் நிறுத்தி, கூப்பிய கரங்களுடன் கண்களில் நீர்சொரிய தொழுதுநின்றார். அப்போது திருவருள்கூட ஒரு அசரீரி 'உலகெலாம்' எனத் தொடங்கி, தொண்டர் புகழ்பாடுக என்று கேட்டது. ஆண்டவன் விருப்பை நெஞ்சில் நிறுத்தி பாடத் தொடங்கிய தெய்வப் புலவர் சேக்கிழார் 4,253 பாடல்களில் பாடி, இறுதியில் 'உலகெலாம்' என்ற சொல்லில் முடித்தார். இவர் பாடிய தொகைக்கு சேக்கிழார் இட்டபெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதாகும்.

தலைநகரில் வசித்துவந்த மன்னர், காலத்துக்குக் காலம் இப்பெரும் புராணத்தின் வளர்ச்சியை தூதர்கள் மூலம் விசாரித்துவந்தார். புராணம் முடியும் தறுவாயை அடைவதைக் கேள்வியுற்ற வேளை மன்னர் உடன் தன் பரிவாரங்கள் சூழ தில்லையை நோக்கிப் புறப்பட்டார். புலவரும் மந்திரியுமான சேக்கிழாருடன தில்லைநாதனை வணங்கியபோது, ஒரு அசரீரி 'யாம் சொல் எடுத்துக் கொடுக்க பெரும்புராணம் நம் அன்பன் பாடியுள்ளான். அதனைக் கேட்டு நீயும் பயனடைவாயாக!' என ஒலித்தது.

ஒரு புது இலக்கியம் அரசனின் அங்கீகாரம் பெறுவதற்கு, கற்றறிந்த பெரியோர் முன் அரங்கேற்றுவது அக்கால வழமை. அப்பாரம்பரியத்திற்கு அமைய, சேக்கிழார் இயற்றிய 'திருத்தொண்டர் புராணம்' அரங்கேற்றுவதற்கான ஆணையை அரசன் பிறப்பித்தார். தில்லை நகரமே விழாக்கோலம் பூண்டது. தங்கக் கூரையுடைய அம்பலத்தில் கற்றோரும் மற்றோரும் கூடியிருக்க தில்லை நடராஜனைச் சேவித்து, பின் தன் கவிதையை வாசித்து விளக்கம் கொடுத்தார். 4,253 பாடல்களையும் வாசித்து விளக்கம் சொல்லி தெளிவுபடுத்த பலவாரங்கள் சென்றன. பாடல்களைக் கேட்ட அனைவருமே இது ஒரு தெய்வ நூல் என்று போற்றி, 'இனி சைவம் தமிழகத்தில் என்றென்றும் நின்று நிலைக்கும்' என்றார்கள்.

அரங்கேற்றப்பட்ட 'திருத்தொண்டர் புராணத்'தையும் அதை இயற்றிய தெய்வச் சேக்கிழாரையும் பாராளும் வேந்தன் தன் பட்டத்து யானையில் இருத்தி தானே அடிமைபோல் அவர்க்கு சாமரம் வீசி, நகரம் முழுவதும் வீதி உலாவந்தான். சைவ பெருமக்கள் நம்பியாண்டார்நம்பி வகுத்த பதினொரு திருமுறைகளுடன், பன்னிரண்டாவதாக சேக்கிரார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணத்தை நிறுத்திப் போற்றினர். திருவிழாவும் முடிந்தபின் சேக்கிழார் பெருமான் மன்னரை வணங்கி தனக்கு அரசியல் விடயங்களில் ஆர்வம் இல்லை எனவும் தனது மீதி வாழ்நாளை தில்லை நடராஜன் காலடியில் கழிக்க விரும்புவதாகவும் விண்ணப்பம் செய்தார். இன்று திருத்தொண்டர் புராணம், 'பெரியபுராணம்' எனும் பெயரால் அழைத்து போற்றப்பட்டு வருகிறது. இப்புராணம் சிவன் அடியார்கள் வரலாற்றை அழகு தமிழில் இனிமையாகத் தருவதுடன், அக்கால தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளைப் படமெடுத்தும் காட்டுகிறது.

பெரியபுராணத்தில் அறுபத்து மூன்று சிவ அடியார்கள் வாழ்க்கைச் சரிதம் கவிநடையில் தரப்பட்டுள்ளது. இவர் பெரும் காப்பியத்தில் ஐந்தாவது அதிகாரத்தில் சிவனடியார் தன்மைகளை விபரித்துள்ளார். இவர்களில் அதிகமானோர் கிரகஸ்தர்களாக நாளாந்தம் தம் தொழிலில் இருந்தாலும், அவர்கள் கவனம் முழுவதும் முழுமுதற் கடவுள் மீதிருந்தது. அவர்கள் வாழ்வில் இறைவனில் மீளா அன்பினராய் சிவனுக்காக எத்தியாகத்தையும் செய்யத் தயாராய் இருந்தனர். ஒருவர் தனது கண்ணை இறைவனுக்குக் கொடுத்தார். இன்னொருவர் இனிய உயிரைக் கொடுத்தார். பிறிதொருவர் தன் மனைவி மக்களின் அன்பைக் கொடுத்தார். ஒரு அடியார் தன் இளமை இன்பத்தையே துறந்தார். இவர்கள் அனைவருக்குமே இறைவன் காட்சி தந்தார். இவ்வடியார்கள் பல அதிசயங்களையும் புரிந்துள்ளனர்.

# நன்றிக் கலசம்

அனைவருக்கும் பொங்கல் வாழ்த்தும், வணக்கமும் உரித்தாகுக!

"நன்றி மறப்பது நன்றன்று" என்பது வள்ளுவர் வாக்கு.

* 2013 ஆம் ஆண்டு "சைவநீதி" புதுமையுடனும், பொலிவுடனும் மலர, தரமான ஆக்கங்கள் தந்துதவிய பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும்;
* வருடாவருடம் புதிய புதிய அட்டைப் படங்களை அழகுற வடிவமைத்துத்தரும் சித்திரத்தில் கைதேர்ந்த எமது நிர்வாக உறுப்பினர் திரு.கண்ணன் அவர்களுக்கும்,
* மிகக் குறுகிய காலத்தில் கணனி அச்சுப் பதித்துத்தந்த திருமதி கௌரி சதானந்தன் அவர்கட்கும்,
* புத்தக வடிவில் உருப்பெற வைக்கும் விவேகா அச்சகத்தினருக்கும்,
* சைவநீதி மலரின் செலவினங்களுக்கு உதவிசெய்யும் முகமாக விளம்பரங்கள் தந்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும்;
* முதற் பிரதிகளை வெளியீட்டு விழாவில் பெற்றுச் சிறப்பித்தவர்களுக்கும்,
* சைவநீதி மலர் வெளிவர பலவகையிலும் ஒத்துழைப்பு நல்கிவரும் இந்துமாமன்ற உறுப்பினர்களுக்கும்,
* தாயகத்திலிருந்தும் வேறு பல இடங்களிலிருந்தும் பல சிரமங்களுக்கும் மத்தியில் கட்டுரைகளை எழுதியும், சேகரித்தும் உரிய நேரத்தில் அனுப்பிவைத்தவர்களுக்கும்;
* எமது மன்றத்தின் சார்பில் நடாத்தப்படும் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, சமய அறிவுப் போட்டி ஆகியவற்றில் பங்குபற்றிய மாணவர்களுக்கும், அவற்றிற்கு ஊக்கமளித்த பெற்றோர்களுக்கும்,
* சைவநீதியை வாங்கி, வாசித்து மகிழும் வாசகர்களுக்கும், வாசக வட்ட ஆய்வினருக்கும்,
* மற்றும் மன்ற வளர்ச்சியை விரும்பும் அனைவருக்கும்.

எங்கள் இதயம் நிறைந்த நன்றி உரித்தாகட்டும்!

"நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

வணக்கம்.

சைவநீதி

கனடா இந்து மாமன்றம், 2013 தை




We're proud to support initiatives that help make our community a better, safer place for everyone.

Proud sponsor

the co-operators
A Better Place For You™

Home Auto Life Investments Group Business Farm Travel

C&C

Senthooran Punithavel
108-1265 Morningside Ave, Scarborough, ON M1B 3V9
(416) 396-0707

திசை தொறும் சைவநீதி தேசுற்று வாழ்க! மேலும்
தீந்தமிழ் உலகமெங்கும் திருப்பொலிவுடனே வாழ்க!!
வாழிய! வையகம்

# Rainbow Village Dental Office | Main Square Dental Office

சகல பல் வைத்திய சேவைகளும் கிளிப்போடுதலும்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்
பல் வைத்திய சிகிச்சையில்
அனுபவம் பெற்ற உங்கள் நம்பிக்கைகுரிய

## டாக்டர். அ. சண்முகவடிவேல்

குடும்ப பல் வைத்தியர்

## DR. A. Shan Shanmugavadivel

General Dentistry including

•ORTHODONTICS •IMPLANT DENTISTRY •ROOT CANAL THERAPY •WISDOM TOOTH EXTRACTIONS
•CEREC CROWNS & INLAYS



திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனிக்கிழமைகளில்

**Tel: (416) 266-5161**

**Rainbow Village Dental Office**
2466 Eglinton Ave. East, Unit 7
Scarborough, Ontario M1K 5J8
(near Kennedy Subway)

**Tel: (416) 690-0121**

**Main Square Dental Office**
2575 Danforth Ave.
Toronto, Ontario M4C 1L5
(near Main Subway)

design: vk kannan - print: viveka